www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර් பெப்.23–மார்ச்.01,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 193



# தேர்தல் திருவிழாவில் திடீர்த் திருப்பம்!

## வேட்டும் – வோட்டும்!



## சினி விசிட்

## ஷெல் யுத்தம்!

## வித்தியாசமான இரசிகைகள்



படிப்பகம்

# முரசம்

## நினைவூட்டலும் நிகழ்வுகளும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

பொதுமக்கள் மீதான
துப்பாக்கிப் பிரயோகங்களும்
தாக்குதல்களும்
வடக்கு-கிழக்கில்
தொடர்ந்தவண்ணம் உள்ளன.

கண்டனங்களும்
ஜனாதிபதி மற்றும் படையதிகாரிகளின்
கவனத்தை ஈர்க்கும் மகஜர்களும்
பாராளுமன்ற உறுப்பினர்களாலும்
அரசியல் கட்சிகளாலும்
அனுப்பப்பட்டேவருகின்றன.

உள்ளூராட்சித் தேர்தலில்,
கடந்த ஆட்சிக்கால
மனித உரிமை மீறல்களும்
'டயர் கலாசாரமும்'தான்
இன்றைய ஆட்சியாளரின்
பிரதான பிரச்சாரமாகியுள்ளது.

தென்னிலங்கை மக்கள்
கடந்தகால நிகழ்வுகளை
மறந்து போயிருக்கலாம் என்று
நினைத்து- அவற்றை நினைவூட்ட-
டயர்களை வீதிகளில் போட்டு
எரிக்கவும் திட்டமிடப்பட்டது!

ஆனால்-வடக்கு-கிழக்கு
மக்களுக்கு
மனித உரிமை மீறல்களை
நினைவூட்டத் தேவையில்லை.
ஏனெனில்,
கடந்த காலத்தில் மட்டுமல்ல,
நிகழ்காலத்திலும்
மனித உரிமை மீறல்களை
அவர்கள் கண்டுகொண்டுதான்
இருக்கிறார்கள்!

தென்னிலங்கையில்
கடந்தகால மனித உரிமை மீறல்களை
நினைவூட்டும் ஆட்சியாளர்கள்,
வடக்கு- கிழக்கில்
தொடரும் அத்துமீறல்களை
நிறுத்துவதற்கு
முடியாதவர்களாக உள்ளனர்!

புலிகள் தாக்கினால்
பதிலடியாக பொதுமக்களைத் தாக்குவது.
'அவலை நினைத்து
உரலை இடிப்பது' போன்றதுதான்!

"யுத்தம்
தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல,"
என்று ஆயிரம் தடவைக்கும்
அதிகமாக அரசு சொல்லிவிட்டது.

குற்றமற்ற மனிதனை
கொன்றுபோடும் ஒரு தோட்டா,
அரசு ஆயிரம் தடவை சொன்னதை
பொய்யாக்கிவிடப் போதுமானது!

'கண்ணால் காண்பதும் பொய்;
காதால் கேட்பதும் பொய்;
தீர விசாரித்தறிவதே மெய்!'
வானொலியிலும் தொலைக்காட்சியிலும்
அரசு விடும் அறிவிப்புக்களுக்கும்
பரிவான பேச்சுக்களுக்கும்
நேர்மாறாக நிலவரம் இருப்பதை
நேரில் அனுபவித்தறிகிறார்கள் மக்கள்!

யாழ் குடாநாட்டுக்கு,
வெற்றிலை பாக்கு வைக்காத குறையாக
மக்களை வரவேற்றது அரசாங்கம்.
படையினரும் புன்னகை சிந்தினர்.

ஆனால்-இப்போது
அதே மக்கள்மீது
படையினர் தம் ஆத்திரத்தை
திருப்பிவிடும் சம்பவங்கள்
அங்கே அரங்கேறிவருகின்றன!

புலிகள் தடுத்தும் கேட்காமல்,
யாழ் குடாநாட்டுக்கு
சென்றதுதான் குற்றமென்று
அந்த மக்கள் நினைக்குமளவுக்கு
நிலவரம் மாறிக்கொண்டிருக்கிறது!

தமிழ் மக்களை
புலிகளிடமிருந்து மீட்கவே
யுத்தம், என்று
தொடரும் யுத்தத்துக்கு
காரணம் சொல்லப்படுகிறது!

யாழ் குடாநாட்டில்,
தம் அழைப்பை ஏற்று
மறுபடியும் குடியேறிய மக்களை
வென்றெடுக்கவே
அரசாங்கத்தால் முடியாதிருக்கிறது!

இந்நிலையில்
யுத்தத்தைத் தொடர்வது மூலம்
அகதிகளின் எண்ணிக்கையை
அதிகமாக்கலாமே தவிர,
அவலங்களை நிறுத்த முடியாது,
என்பது தெளிவாகியுள்ளது!

புதிய பகுதிகளை நோக்கி
போரைத் தொடர்வதைவிட,
தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில்
உள்ள தமிழ் மக்களின்
மனங்களை வென்றெடுக்க
அரசு முயலலாம் அல்லவா?

அந்த முயற்சிக்கு ஆயுதங்கள் உதவாது;
ஆக்கபூர்வமான
அணுகுமுறைகளே தேவை!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்

### எது உபவாசம்?

எம்மைப் பாவத்தில் இருந்து இரட்சிக்க இயேசுகிறிஸ்து மானிடனாய் வாழ்ந்தபோது, 40 நாட்கள் இரவும், பகலும் உணவின்றி இருந்தார்.

அந்த நாட்களை நினைவுகூரும் விதமாக கிறிஸ்தவர்கள் பலர் திருநீற்றுப் புதன் தொடக்கம் பெரிய வெள்ளிவரை உபவாசம் இருப்பது வழக்கம்.

தபசுகாலத்தில் ஒரு சந்தி உணவின்றி இருந்து விஷேட ஆடை, அலங்காரம் இன்றி இருத்தல்தான் உபவாசம் என்று பலர் எண்ணுகின்றனர்.

இதுவல்ல உபவாசம்.

தபசுகாலத்தில், நமது பாவங்களை உணர்ந்து, கடவுளிடத்தில் அர்ச்சையிட்டு, கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளைத் தியானிப்பது உபவாசம்.

இது மட்டுமல்ல;

"பசியுள்ளவர்களுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரம் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமல் இருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்." (ஏசாயா 5:7) என்கிறது வேதாகமம்.

நம்மில் எத்தனை பேர் இந்தத் தபசுகாலத்தில் இதை இதுவரை அனுசரித்திருக்கிறோம்? நேற்றுப் போய்விட்டது. இனியேனும் இதைப் பின்பற்றுவோமா?

ஜி.டானியல்.




### மறுமை இன்பம் நிலையானது

இவ்வுலகிலுள்ள அனைத்துப் பொருட்களும், சகல ஜீவராசிகளும் அழிந்து போகக்கூடியவையே. இவ்வுலக வாழ்வு நிலையானது-இன்பகரமானது என எண்ணி இவ்வுலக வஸ்துக்களைத் தேடுவதிலும், பணம் திரட்டுவதிலும் தன் வாழ்நாளைக் கழிப்பவன் முழு முட்டாள் ஆவான். ஏனெனில், திடீர் என நம்மை மரணம் அணுகிவிட்டால் நாம் அனுபவித்த இவ்வுலக இன்பங்கள், மாடிமனைகள், வெகு சிரமத்துடன் சேமித்த பணம், சொத்து சுகங்கள் அனைத்தையும் கை நழுவ விட்டுவிட்டு இறக்க நேரிடும். அவ்வமயம் இம்மையின் எப்பொருளும் நம்முடன் மண்ணறைக்குக்கூட வராது. இங்கு புரிந்த வணக்க வழிபாடுகள், நற்கருமங்கள், தான தர்மங்கள் ஆகியன பெரும் வெற்றியை மறுமையில் எமக்கு ஈட்டித்தரும்.

'இவ்வுலகில் வாழும் போது நேர்மையான முறையில் பொருளீட்டி, ஆடம்பரம் எதுவுமின்றி, இறையச்சத்துடன் வாழ்ந்து, என்றோ ஒரு நாள் மரணிப்போம், மறுமையில் நம் செயல்களின் விளைவுகளை நிச்சயம் அனுபவிப்போம்' என்ற உள்ளுணர்வுடன் செயல்படுபவன் உண்மையான புத்திசாலியாவான். இம்மை நிலையானது என நம்பி, இறையச்சமின்றிக் கொடிய பாவங்களைப்புரிந்து, மறுமையை மறந்து வாழ்பவன் மடையன் மட்டுமின்றித் துர்ப்பாக்கியசாலியும் ஆவான். இறைவனின் கட்டளைகளுக்கும், இறைதூதரின் போதனைகளுக்கும் கட்டுப்பட்டு வாழ்ந்த இறைவனின் இனிய நல்லடியார்கள், நிலையான மறுமையின் சுவனப்பேரின்பத்தில் திளைத்திருப்பார்கள். மாறு செய்தோர்க்குக் கொடிய நரகமே புகலிடமாகிவிடும்.

எம்.எச்.எம்.ஹாரித்-திஹாரிய



## கவிதைப் போட்டி இல. 193

இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 01.03.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.193 தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல. 190



### ஒற்றைப்பனை

சுற்றம் வெறுத்ததுவோ?
சூழ்நிலையின் பலிஆடோ?
முற்றும் இழந்தாயோ?
முதுமைதான் மிஞ்சியதோ?
ஒற்றைத் தனிமரமாய்
நிற்க நிழல் தேடிவர,
ஒற்றைப் பனை மரந்தான்
உனக்குதவ வந்ததுவோ?

சி.மு.சுந்தரேசன்-அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

### தீர்வு?

மத்தியஸ்த யோசனையா?
மண்டை விறைக்குதிங்கே!
தீர்வு வருமுன்னே
தீர்ந்து தான் போவேனா?

சீ.தங்கவடிவேல்- அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.

### நியதி

நிம்மதியில்லா தேசத்தில்
நித்தம் ஒரு வசிப்பிடம்!

மனசு-நீர்கொழும்பு.

### பரிசுக்குரிய கவிதை

### அமைதியிங்கு தொலைந்ததேனோ?

காடுகள் அழித்து களனிகளாக்கி,
பாடுகள் பட்டு வீடுகள் கட்டி,
ஆடுகள் மாடுகள் கோழிகள் வளர்த்து,
அத்தனை பயிர்களும் தோட்டத்தில் வளர்த்து,
சத்தென வாழ்வினை ஆக்கிய நாங்கள்,
பொத்தென போவது ஊழ்வினை தானோ?
ஆறுதலேதும் இல்லாத நிலையில்,
ஆகும் அமைதி பெருங்கனவாமோ?!

எஸ்.என்.ராஜா- தெஹிவளை.

### விதியினின்று விடுதலை!?

ஆடுகள் மாடுகள் அடைபடும் கூடுகள்...
இன்றெம்மவர் வாழ்வினில் வீடுகள்!
தினசரி மரணங்கள் தொடரும் அவலங்கள்;
தவத்தினில் விளைந்தது அவத்தினில் போகுது;
தெருவினில் வாழ்வது விதியென ஆகுது;
உரைத்திட ஆளில்லை உறங்கிட வழியில்லை!
விழ்துளி தடுத்திட விடுகள் எமக்கில்லை!
விரக்தியின் விளிம்பினில் விடுதலை இனியில்லை?!

தெ.நஞ்ஜனா- இறம்பைக்குளம், வவுனியா.

### ஊமைச் சோகங்கள்

காப்பதற்கு ஒரு மூட்டை;
காலடியில் ஒரு விளக்கு;
தாக்கும் இன்னல்களைத்
தாங்க முடியவில்லை;
கேட்பார் யாருமில்லை;
கேட்கவும் முடியவில்லை!

ஆ.சாந்திதேவி-குருமன்காடு, வவுனியா.

### நன்றி

கிரேக்கத்து அறிஞன்போல்
பகலிலே
விளக்கு கொண்டு,
மனிதனை தேடவில்லை;
நல்ல அகதிமுகாம்
தேடுகிறாள்...!

சுபா வரன்- கண்டி.

### தேடுதல்

பாலுக்குப் போன பேரன்,
வேலைக்குப் போன பேத்தி,
விறகிற்குப் போன பிள்ளை-யாரும்
பிறகிங்கு வரவேயில்லை;
இவ்வுறவுகள் எங்கு போச்சி?
தேடுது இந்த ஆச்சி!

ஏ.கே.எம்.ஸர்ஜுன்-மருதமுனை-01.

### புலம்பல்

நெடுமரம்தான் புகலிடம் !
சிம்மினி விளக்குதான் ஒளியிடம்!
பங்கர்தான் மறைவிடம்!
எமக்கெங்குதான் வாழ்விடம்...?

ஷைலஜா ஜேசுதாஸன்- வவுனியா.

### அபிவிருத்தி

யுத்தம்
எமக்களித்த
நீண்ட கரல்த்திட்டம்!

நுவைல்.ஏ.மஜீத்- நேரியகுளம்.

திருமணத்தின்போது
அடிக்கும்முரசு- மங்கள முரசு!
போர் முடிந்து வெற்றியீட்டிய நாடு அடிக்கும் முரசு- வீர முரசு!
இளம் நெஞ்சங்களின் இதயத்தில்
அடிக்கும் முரசு-தின(ம்)முரசு

ஏ.ஐ. பிறாஸ், அக்கரைப்பற்று-6.

ஐய்...! முரசில் மீண்டும் தங்கமாலைப் பரிசுப்போட்டியா!? ஆரம்பமாகப்போவதை அறிந்து பேரானந்தமடைந்தேன். வாசகர்களின் மனமறிந்த கவனிப்பில் முரசு எவ்வளவு பெரிசு! வாசக நெஞ்சங்கள் சார்பாக முரசுக்கு என் வசீகர வாழ்த்துக்கள்!

துந்துவை மொஹமட், ஸன்பர், கிண்ணியா-31100.

❑❑

'கதைகள்' பெரிதாகத்தான் இருக்கவேண்டும்; எழுத வேண்டுமென்பதில்லை! அவை தரமாகவும் திறமாகவும் இருந்தால் சிறியதாகவும் எழுதலாம் என்பதற்கு கிண்ணியா அமீரலியின் 'குப்பை!', எம். சுரேஷின் 'ச்சே!' மினிக் கதைகள் இரண்டும் 'சின்னதோர் சிறுகதை' அமைப்பில் சிறப்பாக அமைந்த நல்ல உதாரணங்கள்! கூடவே, ஏனைய கதாசிரியர்கட்கும் எங்கள் பாராட்டுக்கள்.

'பூநோனா'-பஹ்மிதா வாஹிட், பதுளை.

❑❑

'உரும்பிராயில் பிணக் குவியல்', 'அமைதிப்படை நடத்திய கொலைவேட்டை'- அரசியல் தொடரை வாசிக்கும்போதே என் கண்கள் கலங்கிவிட்டன. அமைதிப்படையினரா இதைச் செய்தார்கள் என்று எண்ணியது மனம்.

ஆர். ஜெகதீசன், காரைதீவு-12.

❑❑

முரசே! நீ புதிய பரிசளிப்பு முறையை அறிமுகப்படுத்தி எங்களை மகிழ்விக்கின்றாய். நீ தரும் ரசிகனின் இலக்கியநயம் என் மனதில் தேனாக பாய்கின்றது. இராஜகுமாரனின் இராமாயணம் சூப்பர். குமாரனின் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

பாத்திமா சிபானா, அக்கரைப்பற்று-06.

❑❑

வாரமொருமுறை வலம் வரும் என் இனிய முரசே! நீ தரும் அம்சங்கள் அத்தனையும் தித்திப்பு. அதிலும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை', 'தூக்குமேடைக் குறிப்பு' என்பன திகட்டாதவை.

திருமதி சாந்தி ராமானுஜம், வடக்கு பூண்டுலோயா.

## வாசக(ர்) சாலை



என் இனிய முரசே!

உன்னுடைய உலகெங்கிலுமுள்ள பலகோடி வாசகர்களில் நானும் ஒருவன் என்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இருந்தாலும் உன்னுடன் நான் தொடர்புகொள்வது இதுதான்முதல் தடவை. நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் தனிச்சிறப்பே. அதிலும் இராஜதந்திரியாரின் அரசியல் அலசல் அருமை! அடுத்து, இந்தியப்படை பிற மாவட்டங்களிலும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி வெளிப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.எம்.மர்சூக், ஜஹ்றா ஆசுபத்திரி, குவைத்.

### அந்தக் கரிநாள் ஞாபகம்

அன்பின் முரசே!

கனடாவில் நாளுக்கொரு பத்திரிகை வெளியாகிக் கொண்டிருந்தாலும் எப்போது வெள்ளிக்கிழமை வரும் என்று காத்திருக்கும் உனது அன்பு நேயர்நான். நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் படு சூப்பர்தான். எந்தவொரு குறையும் கூறமுடியாது.

முரசு 188ல் அற்புதன் எழுதும் அரசியல் தொடரில் ஒரு திருத்தத்தை கூற விரும்புகிறேன்.

பிரம்படி தனபாலசிங்கம், கோபாலகிருஷ்ணன், தனபாலசிங்கத்தின் மனைவி, அவர்களின் குழந்தை ஆகியோருடன் அவர்கள் வீட்டில் இருந்த ஜீவா என்னும் பெண்ணும் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அதில் ஒரு சிறு திருத்தம்.

1. ஜீவா என்பவர் ஆண்.
2. இவர் யாழ் பல்கலைக்கழக வர்த்தகத்துறை இறுதிவருட மாணவன்.
3. இவருக்கு திருமணமாகவில்லை.
4. இவரது முழுப் பெயர் நாகலிங்கம் ஜீவரெத்தினம்.

பலியான ஜீவா எனது உடன்பிறந்த சகோதரன் என்ற முறையிலும் இதை வாசித்தவுடன் 87ம் ஆண்டுக்கே திரும்பிச் சென்றுவிட்டேன். அது என்றுமே மறக்க முடியாத கரிநாள்.

நாக.லிங்கரெத்தினம், ஸ்கார்பரோ, கனடா.

ஆசிரியர் அவர்களுக்கு!

வீரம், சோகம், விறுவிறுப்பு அதற்கொரு தொடர்- 'பூலான் தேவி', அநியாயம், அகம்பாவம், அழிவு இதற்கொரு தொடர்- 'அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை', தியாகம்,திடம், தீரம் இதற்கொரு தொடர்- 'தூக்கு மேடைக் குறிப்பு', காதல் சோகம், இதற்கொரு தொடர்- 'அனிதா இளம் மனைவி' இவை அத்தனையும் தாங்கி வரும் வாசமலர் தினமுரசு வாரமலர்.

வாழ்த்துக்கள் பல.

பி.எம்.எம்.ஏ. காதர், எல்லை வீதி, மருதமுனை.

### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:

* அ. அரசரெத்தினம், சேனையூர்-06.
* பி. பூரணச்சந்திரன், திருமலை.
* கே. புஸ்பலதா, மஞ்சுளா, புவக்பிட்டி.
* மு. அன்வர், கிண்ணியா-01.
* ஏ.ஜே.எம். ஜஃபர், கொழும்பு-15.
* நா. கமலினி, மட்டக்களப்பு.
* சி. ஸ்ரீரவி, காரைநகர்(கிழக்கு)
* நா. யோகராஜன், பள்ளேகலை.
* ஏ.சீ.எம். மஸ்ஹர், பலாங்கொடை.
* வை. சிவரூபன், ஆரையம்பதி-02.
* எஸ்.ரி. றமீஸ், அக்கரைப்பற்று-06.
* பி. மூர்த்தி, கினிகத்தனை.
* அப்துல் முனாஃப், கொட்டாரமுல்லை.
* றினோஸியா, வாரணை வீதி, திஹாரிய.
* ஏ.எஸ். சாஹிர், கிண்ணியா-05.
* அ. அச்சுதன், மூதூர்.
* இரா. குணசேகரம், திருமலை.
* ப. ஜெயப்பிரகாஷ், கண்டி.
* நா. துவாரகா, மணற்சேனை.
* கே. வின்சன்ட், மட்/சத்துருக்கொண்டான்.
* வீரசிங்கம் ஸ்ரீதரன், மல்லிகைத்தீவு.
* திருமதி ரேணுகா நித்தியதாசன், மட்டக்களப்பு.
* எஸ். அரசகுமார், கல்முனை-02.
* துரை பிரஷாந்தன், திருமலை.
* ஏ.எல். மிஸ்ரினா, கெகுணாகொல்ல.
* பி.ஆர். அசோக்குமார், டிக்கோயா.
* ரலியா ஜலீல், காலி.
* பா. தாரணி, மட்டக்களப்பு.
* கே.எம். வசந்தன், ஜெர்மனி.
* ஐ. இப்திகார் பானு, கந்தளாய்.

www.padippakam.com

# "படைகளைச் சந்திக்கத் தயார் நிலை!"
# வன்னியில் புலிகள் விடுத்துள்ள செய்தி!
## பாரிய இழப்பு ஏற்படும் என்று எச்சரிக்கை

**வன்னிப் பெரு நிலப்பரப்பில் எந்த முனையிலும் எந்த நேரத்திலும் உக்கிரச் சமர் வெடிக்கக்கூடும். வன்னிப்படை முகாம்களில் பெருந்தொகையான படையினர் தயார் நிலையில் உள்ளனர். கனரக வாகனங்கள், ஆம்புலன்ஸ் வண்டிகள் உட்பட இராணுவ நடமாட்டம் வவுனியாவில் அதிகரித்துள்ளது, என்று புலிகள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

எடிபல இராணுவ நடவடிக்கை கட்டம்-1, கட்டம்-2 ஆகியவை புலிகள் தரப்பில் எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆயினும் புலிகளின் பலம்- பலவீனத்தை நாடிபிடித்தறியும் நடவடிக்கைகளாக அவை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஆழம் பார்த்துவிட்டு அதற்கேற்ப படை நடவடிக்கைகளை மேற்கொள்வதே படையினரின் தந்திரோபாயமாக இருந்துவருகிறது.

யாழ் குடாநாட்டைக் கைப்பற்றும் இறுதியான படை நடவடிக்கைக்கு முன்னர் பல்வேறு கட்டங்களாக புலிகளை ஆழம்பார்க்கும் படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்கு முன்னரும் சத்ஜய கட்டம்-1,சத்ஜய கட்டம்-2 ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் பெறப்பட்ட அனுபவம் மூலம் சத்ஜய கட்டம்-3 திட்டமிடப்பட்டது. கிளிநொச்சி நகர் கைப்பற்றப்பட்டது.

அதேபோல எடிபல நடவடிக்கையும் வன்னியில் நீண்ட தரைப்பாதைத் திறப்புக்காகத் தொடரக்கூடும் என்று புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

எனினும் காடும், காடுசார்ந்த பகுதியுமான பூகோள சூழலில் தம்மால் பாரிய பதிலடியில் ஈடுபட முடியும் என்று புலிகள் வன்னியில் உள்ள மக்களுக்கு நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

### தற்கொலைக்கு ஒப்பானது

வன்னியில் படைநடவடிக்கை குறித்து புலிகளின் தலைமைப்பீடம் விடுத்துள்ள உத்தியோக பூர்வச் செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"புலிகள் பெற்றுள்ள புதிய ஆயுத தளபாட வசதிகள், திடமான போர்த்திறனை வழங்கியுள்ளன.

வன்னியில் படையினரின் அசைவுகளை புலிகள் அவதானித்து வருகின்றனர். வன்னியில் படையினரின் நகர்வுகள் தற்கொலைக்கு ஒப்பானதாகும். பாரிய இழப்புக்களைச் சந்திக்கப்போகின்றனர்.

கிளிநொச்சிக்கான தரைப்பாதை ஒன்றைத் திறப்பதற்காக படையினர் நேரம் பார்த்திருக்கின்றனர். படையினரின் நடவடிக்கையை எதிர்பார்த்து புலிகளின் படையணிகளும் தயாராக இருக்கின்றன," என்று புலிகள் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு நாள் நெருங்கும்போது பெரும் வெற்றியாக அறிவிக்கக்கூடிய வகையில் படை நடவடிக்கைகள் திட்டமிடப்படலாம் என்று இராணுவ ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### ஷெல் யுத்தம்

இதேவேளை படையிரின் கட்டுப்பாட்டுப் பகுதிகள், எல்லையோர முகாம்கள் என்பவற்றைக் குறிவைத்து புலிகள் ஆட்டிலெறித் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பது போர் முனையில் மற்றொரு பரிமாணத்தைக் குறிக்கிறது.

எல்லைப் புறங்களில் உள்ள சிங்களக் கிராமங்களை பாதுகாப்பது பெருஞ்சிரமமாக மாறலாம். இருதரப்புமே ஷெல் தாக்குதல்கள் தொடர்பான முரண்பாடான தகவல்களை வெளியிட்டுக் கொண்டிருக்க, உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்படும்.

அதுமட்டுமல்லாமல், வவுனியாவில் உள்ள படைத்தளங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமானால், ஆட்டிலெறி பீரங்கிகளின் சுடுதூரத்துக்கு உட்படாத வகையில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விஸ்தரிக்க வேண்டிய தேவையும் படையினருக்கு ஏற்பட்டுள்ளது. 'எடிபல' நடவடிக்கையின் தற்போதைய முஸ்தீபுகள் அந்த வகையிலேயே அமைந்துள்ளன.

அவ்வாறு கட்டுப்பாட்டுப் பகுதியை விஸ்தரித்து நிலைகொள்ளும் படையினர் புலிகளின் திடீர்த் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

### இரகசிய மையம்?

தற்போது வவுனியாவில் படையினரால் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வவுனியா நகருக்குள் புலிகளின் தொலைத் தொடர்பு சாதன மையம் ஒன்று இருப்பதாக படையினர் சந்தேகிக்கின்றனர். அது எங்கிருந்து செயற்படுகிறது என்பதைக் கண்டறியும் முயற்சிகள் நடக்கின்றன.

## "தமிழீழமே எமது இலக்கு"
### பிரபாவின் வாழ்த்துச் செய்தி

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கலை பண்பாட்டுக் கழகத்தால் 'வெளிச்சம்' என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகிறது.

17.02.97 அன்று வெளிச்சம் ஐந்தாவது வெளியீடு வன்னியில் வெளியாகியுள்ளது. அந்த இதழில் பிரபாகரனின் வாழ்த்துச் செய்தியும் இடம் பெற்றுள்ளது. அச் செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"எமது போராட்டம் தமிழீழம் என்னும் உயரிய இலக்கைக் கொண்டது. சுதந்திரமான வாழ்க்கைக்காக மட்டுமல்லாமல் செழுமையான விழுமியங்களுக்காகவுமே நாம் போராடி வருகிறோம். இதில் முதல் படியாகவே அரசியல் விடுதலை அமைகிறது. இந்த அடிப்படைச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலமாகவே முழு மனித விடுதலை என்னும் இலட்சியப் பயணத்தை நாம் தொடரமுடியும்.

எமது மக்களின் விடுதலைப் பயணம் நீண்டது. அரை நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்டது. இப்போது போராட்டமே வாழ்வோட்டமாக மாறிவிட்டது.

போராடும் களமே படைத்தல் களமாகவும் அமைகின்றது. படைப்பு இலக்கியவாதிகள் எமது மண்ணில் உள்ள எமது மண்ணின் போர்க்கால சூழலையும், எமது மக்களின் போராட்ட வாழ்வியலையும் உதாசீனம் செய்ய முடியாது" என்று பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

## பிரபாவின் மூன்றாவது குழந்தை?

பிரபாகரனுக்கு மூன்றாவது குழந்தை பிறந்திருக்கிறது. கடந்தவருடம் அக்டோபர் முதலாம் திகதி வன்னியில் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. இக்குழந்தைக்கு என்ன பெயர் சூட்டப்பட்டுள்ளது என்று இன்னும் தெரியவில்லை.

பிரபாகரனின் முதல் குழந்தை 1985லும் இரண்டாவது குழந்தை 1986லும் பிறந்தன. மூத்த ஆண் குழந்தைக்கு சாள்ஸ் அன்ரனி என்று பெயரிட்டார். பிரபாகரனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான தோழரின் பெயரே சாள்ஸ் அன்ரனி. அடுத்துப் பிறந்த பெண் குழந்தைக்கு அவருடைய நம்பிக்கைக்குரிய மெய்க்காப்பாளரான துவாரகனின் நினைவாக துவாரகா என்று பெயரிட்டார்.

இத் தகவலை கனடாவில் உள்ள பிரபல பத்திரிகையாளர் டி.பி.ஜெயராஜ் தெரிவித்துள்ளார். 'முரசு' உடனடியாக இச் செய்தியை உறுதிப்படுத்த இயலவில்லை.

## போருக்கு ஆட் திரட்டல்

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் புலிகள் இயக்கத்தினர் ஆட்திரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் 10ம் 11ம் திகதிகளில் வன்னியில் உள்ள புதுக்குடியிருப்பில் இருந்து 18 பேர் இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அதில் 12 பேர் பெண்கள்.

வன்னியில் இடம்பெயர்வுகள் அதிகமாகி வருவதாலும், போர் நெருக்கடி காரணமான சூழலும் புலிகள் இயக்கத்தில் சேரும் இளவயதினரின் எண்ணிக்கையை அதிகமாக்கிவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சம்பளம் இல்லாத உத்தியோகம்
### ஆஸ்பத்திரி ஊழியர்கள் வாட்டம்!

(திருமலை நிருபர்)

கிண்ணியா, மூதூர், தம்பலகாமம், கந்தளாய் ஆகிய இடங்களிலுள்ள ஆஸ்பத்திரி அமய ஊழியர்களின் ஜனவரி மாதச் சம்பளம் இன்றுவரை வழங்கப்படவில்லையாம்.

இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட அமய ஊழியர்களின் குடும்பங்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக அதிகாரிகளின் கவனக்குறைவே இதற்குக் காரணம் என முரசுக்கு ஊழியர்கள் தெரிவித்தனர்.

"சிற்றூழியர்களான நாங்கள் இந்தச் சம்பளத்தை நம்பியே வாழ்க்கை நடத்துகிறோம். உரிய காலத்தில் எமது சம்பளப் பணத்தை வழங்குவதில் நிர்வாகம் அக்கறை காட்டினால் பெரிய உதவியாக இருக்கும்" என அவர்கள் வேதனையுடன் கூறினார்கள்.

இச் செய்தி எழுதப்படும் வேளையிற் கூட, சம்பளம் வழங்குதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத நிலைமையே தொடர்வதாக நம்பகமான தகவல்கள் கூறுகின்றன. ரமழான் பெருநாளைக் கொண்டாடி முடித்துவிட்டு ரமழான் வீசேட முற்பணத்துக்காகக் காத்திருக்கும் சுகாதார ஊழியர்களும் இருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முகாம்களில் பதுங்கு குழிகள்

வவுனியா, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை புலிகளின் ஆட்டிலெறித் தாக்குதல்களில் இருந்து தப்பிக்கொள்ளும் வகையில் இராணுவத்தினர் பதுங்கு குழிகளை அமைத்து வருவதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் ஆட்டிலெறி ஷெல் தாக்குதல்களை சமாளிக்கும் நடவடிக்கைகள், உத்திகள் தொடர்பாக பாதுகாப்பு படையின் உயர் மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. எடிபல இராணுவ நடவடிக்கையின் பின்னர் கிட்டத்தட்ட பத்தாயிரம் மக்கள் மடு அகதி முகாமில் தஞ்சமடைந்தனர். அறுவடைக்கு தயாராக இருந்த நெல் வயல்களும் போர் நடவடிக்கைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

## மட்டக்களப்பு மோதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தங்காவில் என்னும் இடத்தில் பொரிசார் மீது புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. காலை 7.58 மணியளவில் நடைபெற்ற அத் தாக்குதலில் 16 க்கும் மேற்பட்ட பொலிசார் பலியானதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர். ஏ.கே.எல்.எம்.ஜி உட்பட பல ஆயுதங்கள் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும், தமது தரப்பில் லெப்டினன்ட் குணதீபன் (சிதம்பரப் பிள்ளை பிரபாகரன்- திருமலை) என்பவர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

## கனடாவில் கோஷ்டி மோதல்
### இலங்கைத் தமிழர் நால்வர் காயம்!

கனடாவிலுள்ள ஸ்கார்பரோ நகரில் கிறீன்கிரெஸ்ட் பகுதியில் இலங்கைத் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான 'பசுபதி விலாச' உணவு விடுதியில் இருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. பெப்ரவரி 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் இடம்பெற்று 15 நிமிடங்களின் பின்னர் பிறிதோரிடத்தில்- கென்னடி வீதியிலுள்ள பஸ் நிலையத்தில்- நின்றிருந்த இருவர் சுடப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான நால்வரும் இலங்கைத் தமிழர்கள் என்றும், இவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை, அப்பகுதியில் உள்ள சிலர் தொடர்ந்து சென்றுள்ளனர். ஆனாலும் குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டனர். அவர்கள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் வாகனங்களும் துப்பாக்கிகளும் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்த வருடமும் இதே போன்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றிருந்தன. இவை, ஏ.கே. கண்ணன் என்பவரின் குழுவுக்கும் எட்டோபிகோக்கைச் சேர்ந்த வல்வெட்டித்துறைக் குழுவுக்குமிடையில் ஏற்பட்ட கோஷ்டி மோதல்கள் என்று நகரப் பொலிசார் கருதியிருந்தனர்.

தமிழர்களுடைய பிரச்சனைகளுக்குப் பொறுப்பான புலனாய்வாளர் போல் கிளாக், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சம்பவங்கள், மேற்படி இரு குழுக்களுக்கிடையிலான மோதல் என்பதை திட்டவட்டமாகக் கூற முடியாதென்றார். இருப்பினும் சில தமிழ்ப் பிரமுகர்கள், "இது வல்வெட்டித்துறைக் குழுவின் செயல்தான் என்பதை சகலரும் அறிவார்கள்," என்றனர்.

புலனாய்வாளர் கிளார்க், இச் சம்பவங்களையிட்டுத் தெரிவிக்கையில், "சோர்வடையச் செய்பவையாக இச்சம்பவங்கள் உள்ளன," என்றார். திங்கட்கிழமையன்று கனடா ஸ்கார்பரோ பொலிஸார் ஒரு காரை மறித்து, சந்தேகத்தின் பேரில் ஒரு தமிழ் இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

## எல்.ரி.ரி.ஈ. முன்னாள் உறுப்பினருக்குச் சிறை!
### நம்பிக்கை மோசடி செய்ததாக தெரிவிப்பு!

கனடிய பொலிசில் மொழிபெயர்ப்பாளராக சில காலம் கடமையாற்றியவர் குமாரவேலு விக்கினராஜா. இவர் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர். இவரது இயக்கப்பெயர் நிஷாந்தன். கொழும்பு குண்டு வெடிப்பு சம்பவங்களின் முக்கிய சூத்திரதாரியாக இருந்தவர். இந்திய அமைதிப் படைக்கு எதிரான தாக்குதலில் கொக்குவில் பகுதியில் தலைமை தாங்கியவர் நிஷாந்தன்.

கடந்த ஆண்டு கனடாவில் நிஷாந்தன் கைது செய்யப்பட்டார். கனடா பொலிசில் மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றிய நிஷாந்தன் நம்பிக்கை மோசடி செய்துவிட்டார் என்று குற்றம்சாட்டப்பட்டது.

இவர் கனடிய பொலிசில் மொழி பெயர்ப்பாளராகச் சேரும்போது, இலங்கை இராணுவ உளவுப்பிரிவினரால் கொடுக்கப்பட்டதாக இரண்டு சிபாரிசுக் கடிதங்களை சமர்ப்பித்தாராம். "புலிகளுக்கு எதிராக மிகவும் துல்லியமான தகவல்களைத் தந்து உதவியவர்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்பின்னரே கனடா பொலிஸில் மொழி பெயர்ப்பாளராக வேலை செய்து வந்தார். கனடா பொலிஸில் இருந்து பதிவு நாடாக்கள் மற்றும் சில ஆவணங்களை களவாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைதானார்.

சமீபத்தில் நிஷாந்தன்மீதான வழக்கு விசாரணையில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நிஷாந்தனுக்கு எதிராக இலங்கைத் தமிழரான தளையசிங்கம் சிவகுமாரை கனடாப் பொலிஸார் பயன்படுத்தினார்கள்.

சிவகுமாரும் புலிகள் இயக்க முன்னாள் பிரமுகர். திம்புப் பேச்சுவார்த்தையில் புலிகள் சார்பாகக் கலந்துகொண்டவர். யாழ் பல்கலைக்கழக மாணவர். சிவகுமார் 1989ம் ஆண்டு முதல் கனடிய உளவுப்பிரிவில் இணைந்து புலிகள் இயக்கத்தினர் தொடர்பான தகவல்களை வழங்கிவந்தார்.

இறுதியில் நிஷாந்தன் எனப்படும் குமாரவேலு விக்கினராஜாவுக்கு 9 மாதமும் 4 நாட்களும் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## முல்லையில் திறப்புவிழா

முல்லைத்தீவு மகாவித்தியாலயம் நீண்ட காலத்தின் பின்னர் திறக்கப்பட்டுள்ளது. முல்லை இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்ட பின்னர் முல்லைத்தீவு முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

இராணுவ முகாம் இருந்தபோது இயங்காதிருந்த முல்லை மகாவித்தியாலயம் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்க உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க கல்வி அதிகாரி உட்பட பலர் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

## தமிழ்-முஸ்லிம் நல்லுறவைச் சீர்குலைக்கும் விஷமத்தனங்கள்!
## திரை மறைவில் தூண்டுதல்கள்! படைத்தரப்பும் அதிருப்தி!

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பகுதியில் கடந்த றமழான் பெருநாளன்று ஊர் காவல் படைவீரரொருவர் புலிகளால் சுடப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்களையும், பதற்ற நிலையையும் தணிப்பதற்கு பல தரப்பிலிருந்தும் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் அதேவேளை விஷமத்தனத்திற்குத் தூபமிடும் சில தீய சக்திகளின் நடவடிக்கைகள் திரை மறைவில் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்பகுதியில் அடுத்தடுத்து இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்களால் தமிழ்-முஸ்லிம் குடிமக்கள் இதுவரை கணிசமான பாதிப்புக்களைச் சந்தித்திருக்கிறார்கள்.

"ஓட்டமாவடி முஸ்லிம் பகுதியில் 'ஷெல்' கொண்டு புலிகள் தாக்குதல் நடத்தப் போகின்றார்கள்; எனவே எச்சரிக்கையாக இருங்கள்!" என்று காவல் துறையினர் அறிவித்ததாகவும் அதனைத் தொடர்ந்தே ஓட்டமாவடி, வாழைச்சேனையில் குடியிருப்புக்கள் மீது இரவு வேளையில் 'ஷெல்'கள் வீசப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 'ஷெல்'அடிச் சம்பவங்களில் இதுவரை 2 முஸ்லிம் குடிமக்கள் கொல்லப்பட்டும் 19 பேர் காயப்பட்டுமுள்ளார்கள். தமிழ் குடிமகன் ஒருவரும் பலியாகியுள்ளார்.

தமிழ்-முஸ்லிம் நல்லுறவைச் சீர்குலைக்கும் பாரிய சதித்திட்டத்தின் ஒரு கட்ட நடவடிக்கைகளே இவை என்று பக்கச் சார்பற்ற தமிழ்-முஸ்லிம் மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

### கிரனைட் வீச்சு

கடந்த 16.02.97 அன்று வாழைச்சேனைச் சந்தையில் சந்தடி கூடிய வேளையில், புலிகள் அங்கு நுழைந்திருக்கிறார்கள் என்ற சந்தேகத்தில் கிரனைட் ஒன்று வீசப்பட்டது. இதில் 12 தமிழ் குடிமக்களும் ஒரு முஸ்லிம் நபரும் காயப்பட்டார்கள். பாரதூரமாகப் பாதிக்கப்பட்ட 6 பேர் மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து அதே தினமிரவு வாழைச்சேனை நகரில் இருந்த முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான 7 கடைகள் இனம்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இதுவரை இடம் பெற்றுள்ள வாழைச்சேனை, ஓட்டமாவடி அசம்பாவிதங்களின் விளைவாக 26 முஸ்லிம்களும் 12 தமிழர்களும் காயப்பட்டுள்ளார்கள். 6 முஸ்லிம்களும் 4 தமிழர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 11 கடைகளும் 2 வீடுகளும் எரிந்துள்ளன.

இதனிடையே வாழைச்சேனை அசம்பாவித சம்பவங்களின்போது பொலிசார் நடந்துகொண்டவிதம் குறித்துப் பரவலான அதிருப்திகள் தெரிவிக்கப்படுகிறது. இவ் வேளையில் அப்பகுதியிலுள்ள படைத்தரப்பினரிடமும் பொலிஸார் மீதான அதிருப்தி காணப்படுவதாக படை உயரதிகாரியொருவர் தன்னிடம் தெரிவித்துள்ளார் என்று அரச உயரதிகாரியொருவர் கூறினார்.

இந்த நம்பகத் தகவலை உறுதிப்படுத்தும் விதத்தில், வாழைச்சேனை கடற்பகுதியின் முன்னணி நிலைகளிலும், மற்றும் பல பகுதிகளிலிருந்தும் பொலிஸார் விலக்கிக் கொள்ளப்பட்டு அவ்விடங்களுக்குப் படையினர் அனுப்பப்படவிருப்பதாகவும் அறிய வருகிறது. இதனால் இப்பகுதியில் தூண்டப்பட்டு வந்த பதற்ற நிலை தணியும் அறிகுறியிருப்பதாக அந்த அரச அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## விமானம் விழுந்ததா?
### படையினர் மறுப்பு

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான மற்றொரு தன்னியக்க உளவு விமானம் 12.02.97 அன்று அநுராதபுரத்தில் விழுந்து நொருங்கியதாக கொழும்பு ஆங்கிலத் தினசரியான 'ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருந்தது. 17.02.97 அன்று அச் செய்தி வெளியாகியிருந்தது. அதற்கு முன்னர் 16.02.97 அன்று பிலிப்பைன்ஸ் வெரித்தாஸ் வானொலியும் அந்தச் செய்தியைத் தெரிவித்திருந்தது.

ஆனால் இச் செய்தி உண்மைக்கு புறம்பான கற்பனை என்று பாதுகாப்பு அமைச்சு காட்டமாக மறுத்துள்ளது. அவ்வாறான சம்பவம் எதுவும் நடைபெறவேயில்லை என்றும், குறிப்பிட்ட செய்தி வெறும் வதந்தி என்றும் பாதுகாப்பு அமைச்சு மறுத்திருக்கிறது.

## இலங்கை வங்கிக் கிணற்றுக்குள் நேரக் குண்டு!
### எவரும் பாதிப்பின்றி மயிரிழையில் உயிர் தப்பினர்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு- செங்கலடியில் அமைந்திருக்கும் இலங்கை வங்கியின் கிணற்றுக்குள் புலிகள் வைத்த- குறித்த நேரத்திற்கு வெடிக்கும் பாரிய குண்டொன்று வெடித்தது. ஆயினும் எந்தவித இழப்புக்களும் ஏற்படவில்லை.

வீதிப் பாதுகாப்பை வழங்க வரும் படையினர் வழக்கமாக இந்தக் கிணற்றில் கூட்டமாக ஏறியிருந்து தமது பொழுதைக் கழிப்பதுண்டு. குண்டு வெடித்த வேளையில் பாதுகாப்புப் படையினரோ, பொலிஸாரோ வங்கி ஊழியர்களோ அதிஷ்டவசமாக கிணற்றடிப்பக்கம் வரவில்லை. இதனால் அங்கு இடம்பெறவிருந்த பெரும் உயிராபத்துத் தவிர்க்கப்பட்டது.

இதற்கு முன்னரும் இவ்வங்கியின் முன்னால் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரைப் புலிகள் தாக்கியதில் ஒரு பொலிஸ்காரர் கொல்லப்பட்டதும், வங்கியில் அலுவல்களுக்காக நின்றிருந்த பொதுமக்களிற் பலர் காயம்பட்டதும் நினைவிருக்கலாம்.

தொடர்ந்து அங்கு இடம்பெறும் இத்தகைய சம்பவங்களால் அவ்வங்கியின் பாதுகாப்பு கேள்விக்குரியதாகிவிடும் என்பதால் வங்கியின் வாடிக்கையாளர்களும் மற்றும் அலுவலர்களும் இதுபற்றிப் புலிகளிடம் தெளிவுபடுத்தியிருப்பதாக அறியவருகிறது.

மட்டக்களப்பு- இருதயபுரத்தில் இடம் பெற்றதான மற்றுமொரு சம்பவத்தில்- கிறிஸ்தவர்களின் "முட்டை எறியும்" கொண்டாட்டத்தில் ஓடித்திரிந்து முட்டையடித்த இரு இளைஞர்களும் பொலிசாஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இறந்த இருவரது சட்டைப் பைகளுக்குள்ளும், கைகளிலும் இருந்த முட்டைகளின் தோற்றமும் அங்கு கடமையில் நின்ற பொலிஸாருக்கு "கிரனைட்" மாதிரித் தோன்றவே பொலிஸார் முந்திக் கொண்டு சுட்டுவிட்டதாக மக்கள் கூறும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



படிப்பகம்

# அடையாள அட்டையிலும் நம்பிக்கையில்லை

கற்பிட்டி கடற்றுறையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் பயணிகளிடமிருந்து முழுத்தகவலும் பெறப்பட்ட பின்னரே மக்கள் மன்னார்தீவுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இதில் வியாபார நோக்கத்திற்காக கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் இருந்து வரும் வியாபாரிகள், மன்னார் ஊர் பிறந்தவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், மற்றும் பொதுமக்களும் அடங்குவர்.

பிரயாணிகள் படகு குறிப்பிட்ட நாட்கள் என்றில்லாமல் கடற்படையினரின் பாதுகாப்பு மற்றும் பரிசோதனையின் பின்னர் தினமும் அறிவிப்பு வர பயணமாக வேண்டிய சூழலில் தான் பிரயாணிகள் இருக்கின்றனர்.

மன்னார் சென்று திரும்பும் வழியிலும் கற்பிட்டி இறங்குதுறையில் ஆண் பெண் பொலிஸாரினால் மக்கள் நன்கு சோதனையிடப்படுகின்றனர்.

எல்லா ஆவணங்களைக்காட்டி தன்னை அடையாளப் படுத்திய பின்பும் தமிழ், முஸ்லிம் மக்களின் மீது காவல் துறையினர் சந்தேகக் கண்கொண்டே நோக்குகின்றனர். பொலிசாரின் சந்தேகம் வந்த பலரின் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டு கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படுகின்றன.

அதன் பின்பு பொலிஸ் நிலையத்திற்குச் சென்றால் அங்கு கூறப்படும் பதில், முன்பின் தெரியாத பிரயாணிகளை குழப்பத்தில் ஆழ்த்துகின்றது.

அவ்வாறு பறிக்கப்பட்ட அடையாள அட்டை கொழும்பில் இருந்து வந்த வருவதாக இருந்தால், அவரது வதிவிடத்தில் உள்ள பொலிஸ் நிலையம் மூலமாக பூரணமான தகவல்கள் பெறப்பட்ட பின்னர் கற்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலமாக வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறான தகவல்களை பொலிஸ் நிலையங்கள் பரிமாறிக்கொண்டு ஒரு பிரயாணியின் தகவல்களைப் பெற்று அவரிடம் அடையாள அட்டையைக் கொடுக்க ஐந்து ஆறு நாட்கள் கூடச் சென்றுவிடும்.

அதற்கிடையில் அவர் பொலிஸ் நிலையத்திற்கு அடிக்கடி சென்றால் அங்குள்ளவர்கள் எரிந்து விழுகிறார்கள்.

முன்பின் தெரியாத ஊரில் வெளியூர் வாசி தங்கி நிற்பதென்றால் உணவுக்கான செலவுகள், தங்குமிடப் பிரச்சனை என்று இன்னோரன்ன பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் கற்பிட்டியில் பிரயாணிகளின் அவலம் தொடர்கிறது.

கொழும்பு, கண்டி, தம்புள்ள போன்ற ஊர்களில் பிறந்தவர்களுக்கும் பாதுகாப்பு கெடுபிடி என்றால், அடையாள அட்டை என்று ஒன்று இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன என்று பிரயாணிகள் சலித்துக் கொள்கிறார்கள்.

தகவல்-மானுடபுத்ரன்

## பொலனறுவையில் 100பேர்?

மட்டக்களப்பு-பொலன்னறுவ மாவட்ட எல்லைப் புறங்களை ஒட்டிய வெலிக்கந்தை மற்றும் அரலகன்வில ஆகிய கிராமங்களிலிருந்த- ஏறக்குறைய 100 தமிழ் இளைஞர்களைக் காணவில்லை என பெற்றார் கூறுகின்றனர்.

கடந்த 3 மாதங்களாக இவர்கள் காணப்படவில்லை என பொலிசாரின் தேடுதல் வேட்டையின்போது தெரிவிக்கப்பட்டது.

அந்த இளைஞர்கள் புலிகள் இயக்கத்தினருடன் இணைந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

# அதிகாரப் பரவலாக்கல் யோசனை
## புலிகளுடன் பேச பீரிஸ் விருப்பம்

"அதிகாரப்பரவல் தொடர்பாக எல்.ரி.ரி.ஈ.யுடன் ஏதாவது ஒரு கட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய சந்தர்ப்பம் வரும் என்பதில் அரசாங்கம் நம்பிக்கை வைத்திருக்கிறது. அவ்வியக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் பரவலாக்கல் திட்டம் பூரணத்துவம் பெறமுடியாது. ஆகவே இத் திட்டத்துக்கான செயல் முறைகளில் எல்.ரி.ரி.ஈ.யின் இணக்கப்பாட்டைப் பெறுவதற்கு இடமளிக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இருக்கிறது."

இவ்வாறு நீதி அமைச்சரும் அரசியல் யாப்பு தொடர்பான அலுவல்கள் அமைச்சரும் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். கொழும்பிலிருந்து வெளியாகும்- 'சண்டே லீடர்' ஆங்கில வாரப் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியின் போதே அமைச்சர் பீரிஸ் இக்கருத்தைக் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியிருப்பதாவது: "ஜனாதிபதியும் அரசாங்கமும் எல்.ரி.ரி.ஈ. யினருடன் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடச் சித்தமாகவுள்ளனர். இதற்காக சில நியாயபூர்வமான நிபந்தனைகளை அவ்வியக்கம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

பேச்சுவார்த்தை, காலவரையறையின்றி இழுபட்டுக்கொண்டிருக்கலாகாது. ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஒரு முடிவுக்கு வந்தேயாக வேண்டும்.

புனரமைப்பு, புனர்நிர்மாணம் என்ற அம்சங்களை மட்டும் கருத்தில் கொள்ளாமல் திட்டவட்டமான அரசியல் பிரச்சனைகளையிட்டும் பேசித்தீர்வுகாண புலிகள் முன்வரவேண்டும்.

நாம் எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதிரானவர்களல்ல; ஆனால் எப்போது, எத்தகைய சந்தர்ப்பத்தில் பேச்சுநடத்துவது என்பதுடன், என்னென்ன அம்சங்களையிட்டுப் பேசுவது என்பதும் தீர்மானிக்கப்பட வேண்டும்."

தமிழ் மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்கேற்றவகையில் அரசாங்கத்தின் நம்பிக்கையூட்டும் வழி முறைகள் பயனளித்துள்ளனவா என்று கேட்கப்பட்டபோது, அமைச்சர் பீரிஸ், "தமிழ் மக்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில், அண்மைக்காலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளின் மூலம்தான் பிரச்சனைகள் தீர்க்கப்படும் என்பதில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

தமிழ் மக்களில் கணிசமான தொகையினர், இந்நாட்டின் பெரும்பான்மையினருடன் சரிசமமாக வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியும் என்று நம்புகின்றனர்" என்றார்.

## யாழில் தாக்குதல்

யாழ்ப்பாணம் தென்மராட்சியில் உள்ள மந்துவிலில் சைக்கிளில் ரோந்து சென்ற படையினர்மீது புலிகள் தாக்கினார்கள்.

03.2.97 அன்று மாலை நடைபெற்ற இத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகினர். சைக்கிள்களையும், துப்பாக்கிகளையும் புலிகள் எடுத்துச் சென்றனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் வந்துள்ள தமிழ் கட்சிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டாம் என்று வடமராட்சிப் பகுதிகளில் புலிகள் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

# 20 மாணவர்கள் சித்தியடைந்தனர்

(திருமலை நிருபர்)

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில், கடந்த பெப்ரவரி 16 திகதி ஞாயிறன்று ஐந்தாம் ஆண்டு மாணவர் களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் சார்பாக ஒன்றுகூடல் ஒன்று இடம்பெற்றது.

1996ம் ஆண்டுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் சார்பாக அவர்களது பெற்றோர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒன்று கூடலில் மாணவர்கள் முன்னேற்றத்தில் கரிசனை கொண்டு உழைத்த கல்லூரி ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் பகலுணவு அளித்துக் கௌரவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் தி.கைடி பொன்கலன், துணை அதிபர் அருட் சகோதரர் ஏ.சூசைதாசன் ஆகியோருடன் பெற்றோர் சார்பில் ஒருவரும் உரை நிகழ்த்தினர்.

இம்முறை 20 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள் என்பதும் அவர்களில் பன்னிரண்டு பேர் புலமை நிதி பெறக்கூடிய வறிய பெற்றோர்களின் பிள்ளைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில் ஆங்கில தினவிழா!

(காரைதீவு நிருபர்)

வட-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண மட்ட ஆங்கில தினவிழா இம்முறை கல்முனை நகரில் பெப்.24,25 ஆகிய திகதிகளில் மாகாணக்கல்விப் பணிப்பாளர் ரி.பெரியதம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு வவுனியா, மன்னார், திருமலை, அம்பாறை, மட்டுநகர் போன்ற மாவட்டங்களிலிருந்து 516 போட்டியாளர்கள் வருகை தரவுள்ளனர்.

மாகாண கல்வியமைச்சின் செயலர் சுந்தரம்.டிவகலாலா பிரதம அதிதியாக இறுதிநாள் விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதேவேளை, வட-கிழக்கு மாகாண விளையாட்டு விழாவும் இம்முறை கல்முனையிலேதான் நடைபெறவுள்ளது. இதற்காக சுங்காங்கேணி மைதானம் பல இலட்ச ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

# மைத்துனர்களுக்கு டுமீல் டுமீல்

(காரைதீவு நிருபர்)

"கையில் துப்பாக்கி இருக்குது என்பதற்காக இப்படி அட்டகாசம் காட்டலாமா?" -பொதுமக்களின் வினா!

ஆம். அண்மையில் (3.2.97) சம்மாந்துறையில் பொலிஸ்காரர் ஒருவர் தனது மைத்துனர்கள் இருவரை சுட்டுக் கொன்றுள்ளார்.

கல்முனை பொலிஸ் நிலையத்தில் றிசேர்வ் கொன்ஸ்டபிளாக கடமையாற்றிய ஆதம்பாவா இஸ்மாயில் (வயது 33) என்பவரே இந்த தர்பாரை நிகழ்த்தியுள்ளார்.

காணித் தகராறு காரணமாகவே தமது மைத்துனர்களான ஹயாத்து முகைதீன், கோஸ் முகைதீன் என்பவர்களை சுட்டுக் கொன்றுள்ளார். மேலும் நவ்வர், அசாட் என்போர் பலத்த காயத்துக்குள்ளாகி பதுளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொலிஸ் சீருடையுடன் ரி.56 ரக ரைபிளுடன் இக் கொலையைச் செய்த அவரை கல்முனை நீதிவான் அன்ரன் பாலசிங்கம் ரிமாண்டில் வைத்துள்ளார்.

# புதிய தமிழ் வித்தியாலயம்!
## தமிழ்க் கிராம அலுவலரும் நியமனமாவார்!

(குருநாகல் நிருபர்)

குருநாகல் மாவட்டத்தில் உள்ள, தொடங்கஸ்லந்த தேர்தல் தொகுதியில், ராத்தகொடை என்ற இடத்தில் தமிழ் வித்தியாலயம் ஒன்றை அமைக்க, கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. றிச்சட் பத்திரன உறுதி அளித்துள்ளார்.

தமிழர்கள் கணிசமான அளவு வாழும் இப்பகுதியில் தமிழ் வித்தியாலயம் இன்மையால் தமிழ்ச்சிறார்கள் வேறு இனப் பாடசாலைக்குச் செல்வதால், ஏற்படும் அசௌகரியங்களைச் சுட்டிக்காட்டி, பெற்றோர்கள் தமிழ் வித்தியாலயத்தின் அவசியத்தை வலியுறுத்தி அனுப்பிய வேண்டுகோளுக்கு அமைச்சர் இணங்கி உள்ளார்.

அத்துடன் வடமேல் மாகாணசபை உறுப்பினர் வைத்தியர் இராஜேந்திர விஜயதுங்க அவர்கள் இப்பகுதிக்கு தமிழ்க் கிராம அலுவலர் ஒருவரை நியமிப்பது அவசியம் என குருநாகல் மாவட்டச் செயலாளருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, விரைவில் இந்நியமனமும் மேற்கொள்ளப்பட உள்ளது.


## தபால் மூலம் விஞ்ஞானம்

விஞ்ஞானம் – ஆண்டு 9, 10, 11
இரசாயனவியல் – க.பொ.த. (உயர்தரம்)

ஆசிரியர்
குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்.

PTC
14, Covington Road,
Batticaloa.

விண்ணப்பிக்கவும்
C.A.D-2
C/O -THINAMURASU
P.O. BOX-1772
COLOMBO.

தலைநகரில் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு எழுதுவினைஞர்கள் தேவைப்படுகிறார்கள். கணக்கியல் அறிவு அவசியம். மும்மொழியாற்றல் கவனிக்கப்படும். முன்னனுபவம் அவசியமில்லை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் (Advt)

## SPOKEN ENGLISH

By Pon. SAKTHIVEL
Dip. in. English (London)

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்று மாத காலத்தில் நவீன உளவியல் அடிப்படையில் கற்றுத்தரப்படும்.

| | | |
|---|---|---|
| காலம் | : | 3 மாதம் (2-3-97) |
| கட்டணம் | : | 1500/-ரூபா |
| பாடவேளை | : | 10AM-12AM (SUNDAYS) |

[illegible]

A. C. A
55, ST. LUCIAS STREET, COLOMBO-13.

## தபால் மூலம் கல்வி
## சட்டம் - LAW

வெளிவாரிப்பட்டப்படிப்புகள் நிறுவனத்தால் நடாத்தப்படவுள்ள சட்டப்பாடநெறியை பயில விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை: க.பொ. த. (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சாதாரண சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். உத்தியோகத்தர்களுக்கு பயன்படும் விதத்தில் எட்டு பாடங்களைக் கொண்டதாக தயாரிக்கப்பட்ட இப்பாடநெறிக் கட்டணம் ரூபா 2000/-

தபால்மூலம் விபரங்களைப்பெற விரும்புபவர்கள் Kotahena தபால் கந்தோரில் பணம் பெறத்தக்கதாக Registrar, External Studies Academy என்ற பெயருக்கு பெற்ற ரூபா 25/- ற்கான மணியோடரையும், மாணவரின் முகவரி எழுதப்பட்டதும், ரூபா 2.50 முத்திரை ஒட்டப்பட்டதுமான நீள கடிதவுறையையும் இணைத்து கீழ்வரும் முகவரிக்கு 31.03.1997 ஆம் திகதிக்கு முன் அனுப்பி பெறலாம் அல்லது நேரிலும் பெறலாம்.

EXTERNAL STUDIES ACADEMY
P.O. BOX. 660, COLOMBO.



33 வருடமாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளை கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

## மலையாள மாந்திரீகம்

எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:-
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
பக்ஸ் இல-342464
பேஜர் சென்டர் இல- 588407
தொடர்பு கொண்டு இல- 972
இனைக் கேட்கவும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET. NO....
E/MAIL/SAMY 1.2@SLT.LK,
WWW LGO SLT.LK.

நேரில் சந்திக்க-
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.

## G.C.E (O/L) YR-10

புதிய பிரிவு
ஆரம்பம்
SCIENCE
K.K. UDAYAKUMAR

| | |
|---|---|
| yr- 10 | Sun- 1.00 p.m. |
| yr- 11 | Sun- 2.00 p.m. |

சங்கம்
உருத்திரா மாவத்தை வழி
வெள்ளவத்தை. Ph.583759

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்புகொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும். திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

| 1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு | 21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு |
|---|---|
| SHAKTHY SARAVANA, 8/2, SRI SIDDARTHA ROAD, KIRILAPONE, COLOMBO-5. TELE PHONE: 823465. (பொலிஸ் நிலைய எதிரில்) | SHAKTHY SARAVANA, 82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE. TELE PHONE: 026-20347 |

வியாழன் விடுமுறை

## BRIGHTன் SPOKEN ENGLISH

(தபால் மூலம் கல்வி)

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மிகச் சிறந்த பாடநூல்களுடன் கூடிய பாடத்திட்டம். விபரங்களுக்கு முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, FIRST FLOOR, P.O.BOX- 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO-11. T.P. : 434770

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு விடுமுறை நாட்களில் சந்திக்கவும்.

பெப்ரவரி 16 முதல் 28 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10. RECLAMATION ROAD. (ENTRANCE BANKSHALL ST.. Opposite Ranjanas) COLOMBO 11. T.P 436383. 436390. கொழும்பு நாட்களில் மட்டும் செல்டல் No. 078-71101 மார்ச் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், மார்ச் 8, 9, 10 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# திடீர் திருப்பம் அரசியல் அரங்கில் ஒப்பரேஷன் எல்லாவல!

**யா**னை தன் தலையில்தானே மண் அள்ளிப்போட்டுக்கொண்ட மாதிரித்தான் ஐ.தே.கட்சியின் நிலைமையும் மாறிவிட்டது.

இரத்தினபுரி மாவட்ட பொதுஜன முன்னணி எம்.பி.நாலந்த எல்லாவல படுகொலையானது பொதுஜன முன்னணியைவிட ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் பாரிய இழப்பு.

தமது இளம் எம்.பியை இழந்தது பொதுஜன முன்னணிக்கும் மாபெரும் சோகம்தான். செய்தியைக் கேட்டதும் ஜனாதிபதி சந்திரிக்கா வாய்பொத்தி விம்மியதும் பாசாங்கு அல்லத்தான்.

ஆளும் அணிக்குள் தீவிரப்போக்கான இளம் எம்.பிகளைக் கொண்ட ஒரு கோஷ்டி இருக்கிறது. அதற்கு 'மெல்பெரி குறூப்' என்று பெயர்.

நாலந்த எல்லாவல மெல்பெரி குறூப்பை சேர்ந்தவர்தான். இளம் எம்.பி.கள் வாய்விட்டே அழுதனர். அதுவும் உண்மைதான்.

ஆயினும், பொதுஜன முன்னணி தன் இளம் எம்.பியின் பாரிய இழப்பை உள்ளூராட்சித் தேர்தலுக்கான அரசியல் முதலடாகவும் மாற்றிக்கொண்டதுதான் மகா மகா புத்திசாலித்தனம்.

நாலந்த எல்லாவல பலியானவுடன் அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் அனைத்தும் பொதுஜன முன்னணியின் பிரசார சாதனங்களாகவே மாறியிருந்தன.

ரூபவாகினியை திறந்தால் நாலந்த எல்லாவல, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சேவையைக் கேட்டால் நாலந்த எல்லாவல.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில்தான் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசநாயக்கா கொல்லப்பட்டார். அவர் ஒரு முன்னாள் அமைச்சர். எதிர்க்கட்சித் தலைவர். அப்படியிருந்தும் காமினியின் மரணச் சடங்குகள் அரச வெகுஜன தொடர்பு சாதனங்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனா மரணமானபோதுகூட பெரியளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

**இத்தனைக்கும் நாலந்த எல்லாவல ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டும்தான். எனினும் நாட்டின் அதி உயர் பொறுப்பில் இருந்த தலைவர் ஒருவர் மரணமானால் கொடுக்கப்படுவதற்கு ஈடான முக்கியத்துவம் வழங்கப்பட்டது.**

ஒருவேளை உள்ளூராட்சித் தேர்தலுகுப் பின்னர் இப்படியொரு சம்பவம் நடைபெற்றிருந்தால் இந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்குமா என்பது சந்தேகம்தான்.

உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் இப்படி ஒரு திருப்பம் வரும் என்பதை பொதுஜன முன்னணியோ சரி, ஐ.தே. கட்சியோ எதிர்பார்த்திருக்கவில்லை.

திருப்பம் ஏற்பட்டதும் முதலில் அதிர்ச்சியடைந்தபோதும் பின்னர் சுதாகரித்துக்கொண்டு சுறு சுறுப்பாகிவிட்டது பொதுஜன முன்னணி.

ஐ.தே.கட்சியும் அதன் தலைவர் ரணிலும்தான் ஒரேயடியாக ஆடிப்போனார்கள்.

இரத்தினபுரியில் நடந்தது என்னவென்று விளக்கம் கொடுக்கக்கூட ஐ.தே. கட்சித் தலைமையால் முடியவில்லை என்பதுதான் சோகம்.

ஐ.தே.கட்சி சொல்வது உண்மையாக இருந்தால்கூட பொய்யாகத் தெரியும்; கொலைக் கலாசாரத்தை நியாயப்படுத்துவது போலத்தான் இருக்கும் என்பதுதான் அக் கட்சிக்குரிய தர்மசங்கடமான நிலை.

ஒரு தடவை திருட்டுக் குற்றத்தில் மாட்டியவன் தொடர்ந்து திருடுகிறானோ இல்லையோ, அவன்மீது திருட்டுக் குற்றம் சுமத்துவது சுலபம். எல்லோரும் நம்பிவிடுவார்கள்.

கடந்த 17 வருடகால ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் அரசியல் படுகொலைகள் திட்டமிட்டு நடத்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்போடு, விஜயகுமாரதுங்கா கொலை தொடர்பான ஜனாதிபதிக் கமிஷன் அறிக்கையையும் வெளியிட்டு பிரசாரம் செய்தது அரசாங்கம்.

"ஐ.தே.கட்சி மனித உரிமைகளுக்கு மாறான கட்சி; கொலை யுகக் கட்சி" என்று மக்களுக்கு நினைவூட்டுவதுதான் அரசாங்கத்தின் பிரதான இலக்கு.

17 வருடகால ஆட்சிக்காலச் சம்பவங்களை மக்கள் நினைவில் வைத்திருப்பார்களா என்று பொதுஜன முன்னணிக்கு சந்தேகம். மக்களின் ஞாபகசக்தி மிகப் பலவீனமானது என்பது, ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் பொ.ஜ.முன்னணிக்கும் தெரியாத விஷயமல்ல.

அதனால்தான் வீதிகளில் டயர்களைப் போட்டு கொளுத்தோ கொளுத்தென்று கொளுத்தி, கொலை யுகத்தை நினைவூட்டத் திட்டமிட்டது பொ.ஜ.முன்னணி.

டயர்களை கொளுத்துவதால் சுற்றுப்புறச் சூழல்களுக்கு ஆபத்தில்லை, சட்டப்படியும் தவறில்லை என்று பொதுஜன முன்னணி செயலாளரான அமைச்சரே கூறியதுதான் உச்சகட்டத் தமாஷ்.

**உள்ளூராட்சிச் சபைகளின் முக்கிய பணியே வீதிகளை அழகாக வைத்திருப்பதும், சுகாதாரப் பணிகளைச் சீர்படுத்துவதும்தான். ஆனால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் பிரசாரத்திற்கு வீதிகளில் டயர்கள் எரிந்து கடும் புகை மூட்டத்துக்குள் பிரசாரம் செய்ய நினைப்பது எத்தனை பெரிய முரண்பாடு?**

எனினும் இன்றைய அரசியலே முரண்பாடுகளின் மொத்த உருவமாகிவிட்டதால் இதெல்லாம் பிரசார தந்திரம் என்ற கணக்கில் சேர்ந்துவிடுகின்றன.

ஆனால் இப்போது டயர்களுக்கு பாப விமோசனம்: வீதிகளிலும் கரிப்புகை சுவாசிக்கத் தேவையில்லை.

நாலந்த எல்லாவல மரணம் ஒன்று போதும்! கடந்தகால கொலை யுக காலமெல்லாம் மக்களின் மனக்கண்முன் தோன்றும். அதனால் மாய்ந்து மாய்ந்து கடந்த காலத்தை நினைவூட்ட வேண்டி இருக்காது என்று பொதுஜன முன்னணி தரப்பு திருப்திப் பட்டுக்கொள்ளலாம்.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட (ஒப்பரேஷன் எலக்ஷன் ரூட்) எடிபல இராணுவ நடவடிக்கைகூட நாலந்த எல்லாவல மரணத்தோடு சட்டென்று அமுங்கிப்போனது.

ஒரே சமயத்தில் இரண்டு பிரசார ஆயுதங்களைப் பயன்படுத்தினால் மக்களின் கவனம் இரு புறமும் சிதறலாம்.

**அதனால் ஒப்பரேஷன் எடிபல பற்றிய செய்திகளை ஒத்திப்போட்டுவிட்டு, நாலந்த எல்லாவல மரணச் செய்தி பற்றிய பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டன.**

**'ஒப்பரேஷன் எடிபல' இராணுவ நடவடிக்கையைவிட, 'ஒப்பரேஷன் எல்லாவல' அரசியல் நடவடிக்கை பொதுஜன முன்னணிக்கு அமோகமான வாக்குகளை அறுவடை செய்து கொடுக்கப்போவது உறுதி.**

நாலந்த எல்லாவல மரணம் இல்லாவிட்டாலும் பொதுஜன முன்னணிதான் உள்ளூராட்சித் தேர்தலில் முதலிடத்தில் வந்திருக்கும். ஆனால் அடுத்த இடத்தில் உள்ள ஐ.தே.கட்சிக்கும் அதற்கும் இடையில் வாக்குகள் வித்தியாசம் பெரியளவில் இருந்திருக்குமா என்பது சந்தேகம்தான்.

இப்போது அந்தச் சந்தேகமும் தீர்ந்துவிட்டது. ஐ.தே.கட்சி திணறிப்போயிருக்கிறது. அனுதாப அலை மட்டுமல்ல, அதிஷ்டக் காற்றும் ஜனாதிபதி பக்கம்தான் அடிக்கிறது.

இல்லாவிட்டால் இப்படியொரு திடீர் திருப்பம் நாலந்த எல்லாவல மரணம் மூலம் நிகழ்ந்திருக்குமா?

நாலந்த எல்லாவல மரணம் தொடர்பாக சகல குற்றச்சாட்டுக்களும் ஐ.தே.கட்சிமீதே சுமத்தப்பட்டுள்ளன.

நடந்த சம்பவத்துக்கு விளக்கம் சொல்வதைவிட சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இருவர்மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டதாகக் காட்டுவதில்தான் ரணில் அக்கறை கொண்டிருந்தார்.

நாலந்த எல்லாவல திட்டமிட்டுக் கொல்லப்பட்டதாகத்தான் பொதுஜன முன்னணி பிரசாரம் செய்துவருகிறது.

ஆனால் சாட்சியங்களும், சம்பவம் நடைபெற்ற முறையும் திடீர் நிகழ்வு போன்றே தோன்றுகின்றன.

இரத்தினபுரியில் இருந்து ஊர்வலமாக



> **"பொதுஜன முன்னணியின் வெற்றியை இனிப் பிரபாகரனால்கூட சேதப்படுத்த முடியாது!"**

வந்தனர் ஐ.தே.கட்சியினர். கொழும்பில் இருந்து நாலந்த எல்லாவல எம்.பி.யும், டிலான் பெரேரா எம்.பியும் அவரது பாதுகாவலரும் தங்கள் வாகனத்தில் இரத்தினபுரி நோக்கிச் சென்றனர்.

இரத்தினபுரியில் உள்ள குருவிற்ற என்னுமிடத்தில் வைத்து ஊர்வலத்தினரும், நாலந்த எல்லாவல குழுவினரும் எதிரும் புதிருமாகச் சந்தித்தனர்.

அது ஒரு குறுகலான தெரு. ஊர்வலத்தினர் வரும்போது அவர்களை விலக்கிக் கொண்டு வாகனத்தில் செல்வது சிரமம்.

அதுதவிர, கூட்டமாக வருபவர்கள் மாற்றுக்கட்சி முக்கியஸ்தர்களைக் கண்டால் கிண்டல் செய்து கூக்குரலிடுவது வழக்கம்தான்.

நாலந்த எல்லாவலதான் வாகனத்தைச் செலுத்திச்சென்றார். டிலான் பெரேரா அருகில் இருந்தார். நாலந்த எல்லாவல நினைத்திருந்தால் தமது வாகனத்தை வேறு குறுக்குப்பாதையில் திருப்பி இருக்கலாம்.

ஆனால் அப்படித் திருப்பிச் செல்லுவது கௌரவப் பிரச்சனை என்று நினைத்திருக்கலாம், என்று தோன்றுகிறது. எனவே எதிரும் புதிருமாக சந்தித்துக் கொண்டனர்.

அதன் பின்னர் என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை யாருமே தெளிவன விளக்கம் சொல்லவில்லை.

தாம் செல்வதற்கு வழிவிட்டுத் தருமாறு நாலந்த எல்லாவல கேட்டிருக்கக்கூடும். அல்லது ஊர்வலத்தினர் ஏதாவது கிண்டலடிக்க நாலந்த எல்லாவலவுக்குக் கோபம் வந்து, வாகனத்தைவிட்டு இறங்கி தாக்கப்பட்டிருக்கலாம்.

வாய்த்தர்க்கம் நடந்தது என்று நேரில் கண்ட சிலர் கூறியுள்ளனர். ஊர்வலத்தினர் நாலந்த எல்லாவலயை சுற்றிக் கூடிவிட்டதைக் கண்ட நாலந்த எல்லாவலயின் பாதுகாவலர் வானத்தை நோக்கிச் சுட்டதாகவும், அதைத் தொடர்ந்து அவர்மீது ஊர்வலத்தில் இருந்து சுடப்பட்டதாகவும், பின்னர் நாலந்த எல்லாவல மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் முதலில் செய்திகள் வெளியாகின.

தன்மீது முதலில் சுடப்பட்டதாகவும் புல்லட்புரூப் ஜக்கெட் அணிந்திருந்தமையால் உயிர் தப்பியதாகவும் புஞ்சி நிலமே தெரிவித்திருக்கிறார்.

அது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. ஆனால் துப்பாக்கிப் பிரயோகம் முதலில் ஆரம்பிக்கப்பட்டது நாளந்த எல்லாவல தரப்பில் இருந்துதான் என்பது பத்திரிகைச் செய்திகள் மூலம் உறுதியான தகவல்.

எம்.பியைப் பாதுகாக்கவும் கூட்டத்தைக் கலைக்கவும் அவரது பாதுகாவலர் வானத்தை நோக்கிச் சுட்டிருக்கலாம். அது தவறும் அல்ல.

ஆனால் பொது ஜன முன்னணி பதவிக்கு வந்த பின்னர் ஐ.தே.கட்சிக்கு எதிராக நடைபெற்ற சம்பவங்களால் உஷாரடைந்த புஞ்சி நிலமே, மஹிந்த ரத்னதிலக போன்றோர் தாமும் சுடப்படலாம் என்று நினைத்து முந்திக் கொண்டிருக்கலாம்.

ஆனைமடுவிலும், நீர்கொழும்பிலும் ஐ.தே. கட்சியினருக்கு எதிரான துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன.

நீர்கொழும்பில் நீதிமன்றம் சென்று திரும்பிய ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஐந்துபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். 20.09.1996ல் இச் சம்பவம் நடைபெற்றது.

ஆனைமடுவ சம்பவத்தில் தசநாயக்க எம்.பி., நீர்கொழும்பு சம்பவத்திற்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேமீதும் ஐ.தே.கட்சியினர் குற்றம் சாட்டினார்கள்.

வன்முறை என்பது ஐ.தே.கட்சியால் மட்டும்தான் மேற்கொள்ளப்பட்டது என்றில்லை.

ஆனைமடுவ, நீர்கொழும்பு சம்பவங்கள் பொதுஜன முன்னணியும் வன்முறையைக் கையில் எடுக்கத் தயங்கும் அணியல்ல என்பதற்கு உதாரணங்கள்தான்.

ஆனாலும் பிரேமதாசா காலத்தில் இருந்து ஐ.தே.கட்சி என்றால் கொலைக்கு அஞ்சாத கட்சி என்னும் எண்ணம் திட்டமிட்டு வளர்க்கப் பட்டுவிட்டது.

**ஆனால் பொதுஜன முன்னணிக்கு அப்படியான முத்திரை இன்னமும் குத்தப் படவில்லை. பெண் ஒருவரே தலைவியாக இருப்பதாலும் அம் முத்திரை குத்தப்படாமல் பொ.ஜ.முன்னணி தப்பிக்கொள்கிறது.**

ஆனைமடுவ, நீர்கொழும்புச் சம்பவங்களை பொதுஜன முன்னணிக்கு எதிரான அரசியல் பிரசாரமாக்க ஐக்கிய தேசியக் கட்சியால் முடியவில்லை. அதுவும் ஒரு பலவீனம்.

கடந்த ஆண்டு பொதுஜன முன்னணியால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களை மக்கள் மறந்துவிட்டனர்.

ஆனால் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அதிகாரம் கையில் இருப்பதால், பொதுஜன முன்னணியினரால் தாம் தாக்கப்படலாம் என்று பயந்து கொண்டேயிருப்பர்.

அதன் வெளிப்பாடுதான்-இரத்தினபுரியில் ஐ.தே.கட்சி பிரமுகர்கள் தாம் முந்திக்கொள்ள நினைத்ததும் என்று தோன்றுகிறது.

அதுமட்டுமல்லாமல் மஹிந்த ரத்னதிலக, புஞ்சி நிலமே எம்.பி. இருவரும் இரத்தினபுரியில் செல்வாக்கான சண்டித்தன அரசியல்வாதிகள்.

எனவே தாம் முந்திக்கொள்ள நினைத்து விரைவாகச் செயற்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

நாலந்த எல்லாவல கொலைக்கு காரணம் மஹிந்த ரத்னதிலகவும், புஞ்சி நிலமேயும்தான் என்று குற்றம் சாட்டப்பட்டாலும்கூட, அதற்கான உறுதியான சாட்சியங்கள் இல்லாதது தான் வழக்கு நடக்கும்போது பலவீனமான விஷயமாக இருக்கும்.

புஞ்சி நிலமேமீது ஏற்கனவே பல குற்றச் சாட்டுக்கள் இருக்கின்றன. குற்றம் சாட்டப் பட்டுள்ள இன்னொருவர் மஹிந்த ரத்னதிலக.

1994ம் ஆண்டுவரை மஹிந்த ரத்னதிலக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தீவிரமான பிரமுகர். இரத்தினபுரி நகரசபைத் தலைவராகவும் இருந்தவர். 'மஹிந்த அப்போ' என்று அழைக்கப்படுபவர்.

**இன்னொரு செண்டிமெண்டான விஷயம் என்ன தெரியுமா? ஜே.வி.பி. கிளர்ச்சி நேரத்தில் நாலந்த எல்லாவலயின் தந்தையான நந்தா எல்லாவலயின் உயிரைக் காப்பாற்றியது மஹிந்தா ரத்னதிலகவின் துப்பாக்கியும் அடியாட்களும்தான்.**

இரத்தினபுரி மாவட்ட முன்னாள் எம்.பி.யான நந்தா எல்லாவல காலமாகிவிட்டார். அவரது இடத்திற்குத்தான் நாலந்த எல்லாவலயைப் போட்டியிட வைத்தார்கள். மஹிந்த ரத்னதிலக தோளில் போட்டு சீராட்டி வளர்த்த பிள்ளைதான் நாலந்த எல்லாவல. தோளில் போட்டு வளர்த்த பிள்ளையை சுடுவதற்கு எப்படி மனம் வந்தது? என்பதும் பொ.ஜ. முன்னணி இரத்தினபுரியில் எழுப்பியுள்ள செண்டி மெண்டான கேள்வி.

ஜே.வி.பி. காலத்தில் இரத்தினபுரி மாவட்ட அரசியல்வாதிகள் பலரின் உயிரைக் காப்பாற்றிய மஹிந்த ரத்னதிலக இப்போது அப்பட்டமான கொலைகாரராக இனம் காணப்பட்டுள்ளார்.

புஞ்சி நிலமே எம்.பி.யின் வீடும், மஹிந்தாவின் வீடும் முற்றாக எரிக்கப் பட்டுவிட்டன. அவர்களது குடும்பத்தினர் எப்படியோ தப்பியோடிவிட்டனர். பல கடைகள், வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

நாலந்தா எல்லாவலயின் இறுதிச்சடங்கில் பொலிசார் தாக்கப்பட்டனர். மரணச் சடங்குக்கு சென்ற கார்கள்மீதுகூட கல்லெறியும் அளவுக்கு கட்டுபாடற்ற மனநிலை காணப்பட்டது. ஆனால் இவையெல்லாம் நியாயமான உணர்ச்சி வெளிப்பாடுகளாகக் கருதப்பட்டுவிட்டன. அரச பிரசார சாதனங்களும் நாலந்த எல்லாவல மரணத்தின் பின்னர் நடைபெற்ற சம்பவங்களின் மறுபாகத்தைக் காண்பிக்கவேயில்லை.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது மாதிரி **"எந்த மொழி புரிகிறதோ அந்த மொழியில் அவரவர்களோடு பேசுவோம்!"** என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இதையே பிரேமதாசா மாதிரியான ஒருவர் கூறியிருந்தால் 'கொலைகார யுகத்தின் அவதார புருஷர்' என்று சித்தரித்திருப்பார்கள்.

மென்மையான புன்னகையும், வசீகர மும்மிக்க ஜனாதிபதி சந்திரிக்கா கூறியிருப்பதால் 'துணிச்சலான பேச்சு' என்று வியக்கப்படுகிறது.

**எனினும் நாலந்த எல்லாவல மரணத்தின் பின்னர் நடைபெற்ற தமது தரப்பு அத்துமீறல்களை ஜனாதிபதியோ அமைச்சர்களோ கண்டிக்காமல் விட்டிருப்பது, வன்முறைக்கு வன்முறை என்பதை ஆதரிப்பதாகிவிடுகிறது.**

17 வருடம் அடிபட்டவர்கள் இப்போது திருப்பிக் கொடுப்பதை எப்படி நிறுத்துவது என்று பொ.ஜ.முன்னணித் தலைவர்கள் நினைக்கிறார்களோ தெரியவில்லை.

எப்படியோ உள்ளாட்சித் தேர்தலில் பொதுஜன முன்னணியின் வெற்றியை இனிப் பிரபாகரனால்கூட சேதப்படுத்த முடியாது.

அதற்காக படை நடவடிக்கையை வன்னியில் அரசாங்கம் மேற்கொள்ளாது என்று அர்த்தமல்ல.

**ஆனால் உள்ளூராட்சித் தேர்தல் வெற்றிக்கு போர்முனை வெற்றிச் செய்தியை நம்பியிருக்க வேண்டிய அவசியம், மற்றும் புலிகள் பாரிய தாக்குதல்களை எங்காவது நடத்தினால் தமது வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படுமோ, என்ற சந்தேகம் இரண்டும் இப்போது சுத்தமாகக் கிடையாது.**

ஏனெனில் வெற்றி உறுதி செய்யப் பட்டுவிட்டது. ■

## அதிரடி அய்யாத்துரை



**யா**ழ்ப்பாணத்தில் சீருடைக்காரர் கடை போட்டிருக்கினம். பொருட்கள் விலை கேட்டால் தங்கள் மொழியில்தான் பதில் சொல்லுகினமாம். யாழ்ப்பாண சனத்துக்கு சகோதர மொழி தெரியாதல்லோ? அதனால் விலை புரியுதோ இல்லையோ? பணத்தை நீட்டுகினம். மீதியாகத் தரப்படும் பணத்தை எண்ணிப் பார்த்துத்தான் விலையைக் கண்டுபிடிக்கினமாம். பிற கடைகளைவிட சீருடையார் கடைகளில் விலை அதிகம். சொல்லும் விலை புரியாமல் இருப்பதால் வாங்கியபின்னர்தானே விஷயம் தெரியுது. விலைகூட எண்டு திருப்பிக்கொடுக்கவும் பயம். ஒத்தை ரூபா பொருளையும் பத்துத்தரம் தடவிப்பார்த்து விழுந்து விழுந்து பேரம் பேசி வாங்கினாத்தான் ஒரு திருப்தி எண்டகாலம் மலையேறிப்போச்சு.

**கி**ழக்கில் இரு சமூகங்களுக்கும் சிண்டு முடிஞ்சுவிடுற வேலை நடப்பதாக சில மாதங்களுக்கு முன்னரே 'முரசு' செய்தி வெளியிட்டதல்லோ! அது இப்ப மெத்தச் சரியாகப் போட்டுது பார்த்தியளோ?! தேனகத்தின் பச்சைக் கட்சி வெகுஜனப் பிரதிநிதியை உண்மையான சமாதானம் விரும்புவோர் பாராட்டுகினம். மனுசன் துணிச்சலாக நிண்டு நாலு நல்ல கருத்தை நடுநிலையாகச் சொல்லுதாம். சிலரைப்பலநாள் ஏமாற்றலாம். பலரைச் சிலநாள் ஏமாற்றலாம். கிழக்கின் சமீப சம்பவங்களின் சாயம் வெளுக்காமல் போகாது. ஷெல் அடி நடக்க முன்னரே அடி விழப்போகுது எண்டு காக்கும் வேலிகள் பள்ளி வாசலுக்கு தகவல் சொல்லினவாம். முன்கூட்டியே தகவல் தெரிஞ்சது எப்படி? அதுதான் சந்தேகத்தை இறுக்கமாக்குதாம்.

**கூ**ட்டான கட்சியின் சங்கதியார் சமீபத்தில் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தவர். அது ஒரு அனுதாப அறிக்கை. தெற்கில் நடந்த சம்பவம் கண்டு வழக்கம்போல ஆழ்ந்த அதிர்ச்சியடைந்து (?) வெளியிட்ட அறிக்கை. அதைப்பார்த்துப்போட்டு கிளிநொச்சி நண்பர் ஒருத்தர் ஃபோன் எடுத்தார். "சங்கதியார் நாட்டிலைதான் இருக்கிறாரோ?" எண்டு விசாரிச்சார். "ஏன் கேட்கிறீர்? மனுசன் கொழும்பிலைதான் இருக்கிறார்" எண்டு சொன்னேன். அதுக்கு நண்பர் என்ன சொன்னவர் தெரியுமோ? "இல்லை முந்தி யார் போட்ட வாக்குப் பிச்சையாலே அவர் வாழ்க்கை நடத்தியனவர் தெரியும்தானே? அந்தப் பகுதியிலை எத்தனையோ சம்பவம் நடந்துபோச்சு, நகரில் இருந்து சனமே வெளியேறிப் போட்டுதுகள். சங்கதியார் மூச்சுக் காட்டேல்லை. வீச்சம் காட்டேல்லை. தெற்கில் நடந்ததுக்கு விழுந்தடிச்சு அறிக்கை விட்டிருக்கிறார். அதுதான் கேட்டனான்?" எண்டார் நண்பர் நல்ல சத்தமான கேள்விதானே?

**ரெ**ண்டு எழுத்தாருடன் அதிகாரத் தரப்பு பேச்சு நடத்தவேண்டும், எண்டதுக்காகத்தான் தலைநகரில் போட்டியிடுகினமாம். தமிழ்க்கட்சி ஒண்டு சூப்பர் புலுடா விட்டிருக்கினம். ரெண்டு எழுத்தாருடன் அதிகாரத் தரப்பார் பேசவேண்டுமெண்டால் அதுக்கு இவை ஏன் எலக்ஷன் கேட்கினம்? ரெண்டு எழுத்தாருடன் இணைஞ்சு சண்டை போட்டு அந்த அவசியத்தை உருவாக்கவேண்டியதுதானே? அது கிடக்க, மக்கள் ஆணையைக் கேட்கினமாம். தங்களுக்குக் கிடைக்கும் வாக்கு சமாதானத்துக்கான வாக்காம். அப்பிடியெண்டால் இவைக்கு எதிராக விழப்போகிற வாக்கெல்லாம் சண்டைக்கு ஆதரவான வாக்கெண்டுதானே அர்த்தம்! அப்ப என்ன செய்யப்போகினம்? தீர்ப்புக்கு தலைவணங்கி துவக்குத்தூக்கப் போகினமோ? சும்மா ஏன் பாருங்கோ பெரிய வார்த்தைகளையெல்லாம் அள்ளிவிடுகினம்? தங்களுக்கு எதிரான வாக்காளர்களை சமாதானத்தின் எதிரிகள் எண்டு தப்புத்தப்பாக அர்த்தப்படுத்தலாமோ?

**ம**லையகத் தனித்துவ தலைவர் போர் நிறுத்தம் மீது காதல் கொண்டவர். வேட்டுக்கள் பரிமாறும் போரில்தான் அவரது விருப்பம் நிறைவேறவில்லை. வோட்டுக்கள் கேட்கும் அரசியல் போரிலும் அவரால் போர் நிறுத்தத்தைக் கொண்டுவர முடியேல்லையே! முன்னணியுடன் சேர்ந்து போட்டியிட்டுக்கொண்டு வத்தளையில் மட்டும் இரண்டு தரப்பாரும் மல்லுக்கு நிக்கினம். இதுக்கு என்ன பெயர்? போர்நிறுத்தத்துக்குள் மிஸ் ஃபயர் எண்டு சொல்லலாமா? தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை மறுத்ததால் போட்டியாம். அப்படியானால் அதே முன்னணியோடு ஏனைய பகுதிகளில் எப்பிடி கூடிக் குலவுகினம்? இதுதாண்(டா) அரசியல்!

**இ**ரத்தினபுரியில் பச்சைக்கட்சி உறுப்பினரின் கட்டிடத்தில் இருந்த தமிழ் கடைகளுக்கும் கொள்ளிவைக்கப்பட்டது. அதில் ஒன்று நகைக்கடை. ஆக கடை கொளுத்தல்- கொள்கை உறுதியா, கொள்ளை உறுதியா எண்டதுதான் பலத்த சந்தேகம்.

**இ**ந்தவாரம் ஒரு ஜப்பான் பொன்மொழி:

> "ஒரு பெண்ணைப் பார்த்தவுடன்
> சிரிப்பவன் முட்டாள்.
> ஒரு பெண்ணோடு பழகிய பின்பும்
> சிரிக்காதவன் ஏமாளி"

இது என்ன அர்த்தம்? கடுமையாக யோசியுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com




அரசியல் தொடர்
அற்புதன்
எழுதுவது

# கொக்குவில் மோதல்! குளப்பிட்டியில் கண்ணிவெடி!

# யாழ் நகரில் ஷெல் மழை!

## முகாமுக்குக் குறி

கொக்குவில் இந்துக்கல்லூரி மூன்று மாடிகளைக் கொண்டிருந்தது.

மாடிக் கட்டிடத்தைப் பார்த்ததும் அங்கிருந்து புலிகள் தாக்கக்கூடும் என்று நினைத்தனர் இந்தியப் படையினர்.

கல்லூரி வளவுக்குள்– மதில் அருகே நின்று இந்தியப்படையைக் காணும் ஆவலில் முண்டியடித்த மக்களையும் தமது எதிரிகளாகவே நினைத்தனர்.

'யாழ்ப்பாணம் முழுக்க எதிரிப் பிரதேசம்தான். அங்குள்ள எல்லோரும் எதிரிகள்தான். அவர்களோடு சண்டையிட்டுக் கைப்பற்றத்தான் நாங்கள் வந்திருக்கிறோம்' என்பதுதான் இந்தியப் படையின் எண்ணம்.

ஏனெனில் இத் தொடரில் முன்னர் குறிப்பிட்டதுபோல, இந்தியப் படையின் பல படைப்பிரிவுகள் இந்தியாவிலிருந்து வந்து தரையிறங்கியதும் உடனடியாகச் சண்டைக்கு அனுப்பப்பட்டன.

அதனால் மக்களையும் எதிரிகளாகவே பார்க்கத் தொடங்கினார்கள். உலகின் மிகப் பெரிய இராணுவங்களில் ஒன்று உலகின் மிகமோசமான கட்டுப்பாடற்ற இராணுவமாக நடந்துகொண்டது.

நேரமோ பிற்பகல். கொக்குவில் இந்துக் கல்லூரி மதிலுக்கு பின்புறம் நிற்பவர்கள் பொதுமக்கள்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

கொக்குவில் இந்துக்கல்லூரிப் பக்கம் இருந்து தாக்குதல்களும் நடத்தப்படவில்லை.

அப்படியிருந்தும் கொக்குவில் இந்துக்கல்லூரி நோக்கி டாங்கியின் சுடுகுழல் திருப்பப்பட்டது.

சுடுகுழல் திருப்பப்பட்டதும் என்ன நடக்கப்போகிறது என்பது மதிலுக்கு பின்புறம் நின்ற மக்களுக்குத் தெரிந்துவிட்டது.

பதறியடித்து உள்ளே ஓடினார்கள்.

அதற்குள் டாங்கியிலிருந்து புறப்பட்ட ஷெல் கல்லூரியின் அறை ஒன்றை ஊடுருவி உள்ளே விழுந்து வெடித்தது.

அறைக்குள் இருந்த 24 பேர் துடிதுடித்து இரத்த வெள்ளத்தில் செத்துப் போனார்கள்.

## படை முன்னேற்றம்

காங்கேசன்துறை வீதி வழியாக முன்னேறிய இந்தியப்படையின் ஒரு பிரிவு குளப்பிட்டிச் சந்தியில் இருந்து ஆனைக்கோட்டை செல்லும் வழியாக முன்னேறியது.

இன்னொரு பிரிவு பிரதான வீதி வழியாக நேராக முன்னேறி கொக்குவில் இந்துக்கல்லூரி வரை சென்றது.

குளப்பிட்டிச் சந்தியில் இருந்து ஆனைக்கோட்டை செல்லும் பாதையில் சென்று கொண்டிருந்த இந்தியப்படை புலிகளின் கண்ணிவெடியில் சிக்கியது.

கண்ணிவெடி வெடித்ததும் பலியான படையினர் தவிர ஏனைய படையினர் தரையில் படுத்து சுடுவதற்கு நிலை எடுத்துக்கொண்டனர்.

கண்ணிவெடியைப் புதைத்துவிட்டு வீதியின் இரு மருங்கிலும் பதுங்கியிருந்த புலிகள். இந்தியப் படையினரை சுற்றி வளைத்துத் தாக்கத் தொடங்கினார்கள்.

குளப்பிட்டிச் சந்தி வழியாக ஆனைக்கோட்டை சென்ற படைப்பிரிவு புலிகளின் தாக்குதலால் பின்வாங்கியது.

பாதையெங்கும் இந்தியப் படையினரின் சடலங்கள் கிடந்தன. குறைந்தது 20 படையினராவது கொல்லப் பட்டனர். புலிகளின் தரப்பில் இழப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

கொக்குவில் பூநாரி மரத்தடியிலும் இந்தியப்படையினர்மீது புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள்.

கால் நடையாக நகர்ந்து சென்ற படைப்பிரிவுமீது தாக்குதல் நடத்தப்பட்டது. அத் தாக்குதலிலும் பதினைந்துக்கு மேற்பட்ட இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர்.

வீதிகளில் சடலங்கள் கிடக்க, புலிகளின் கெரில்லாக்கள் அச் சடலங்களுக்கு அருகில் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

கொக்குவில்-குளப்பிட்டி மோதல்களின் பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்தான் பின்னர் இந்தியப் பத்திரிகைகள் உட்பட சர்வதேசப் பத்திரிகைகளில் பரபரப்பாக வெளியாகின.

ஆசியாவில் பிராந்திய வல்லரசான இந்தியாவின் படைகள் ஒரு கெரில்லா இயக்கத்தின் தாக்குதல் காரணமாக வீதிகளில் பிணமாக கிடந்த காட்சி உலகெங்கும் வியப்பாக நோக்கப்பட்டது.

கொக்குவில் பகுதியில் நடைபெற்ற தாக்குதல்களை வழிநடத்தியவர்களில் முக்கியமானவர் நிஷாந்தன்.

கொழும்பில் புலிகள் இயக்கத்தினரால் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புக்களுக்கு காரணமானவர்களில் முக்கியமானவர் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அதே நிஷாந்தன்தான். உண்மையான பெயர் குமாரவேலு விக்னராஜா. தற்போது கனடாவில் இருக்கிறார்.

கனடா உளவுப்பிரிவுக்கு புலிகள் இயக்கத்தினர் மற்றும் ஏனைய இயக்கத்தினர் தொடர்பாகத் தகவல்கள் கொடுத்து உதவினார். பின்னர் கனடா உளவுப்பிரிவினர் இவரைக் கைவிட்டுவிட்டனர். கனடா வங்கி ஒன்றில் பணிபுரிந்த நிஷாந்தன் கனடிய பொலிசாரால் கடந்த வருடம் கைது செய்யப்பட்டார்.

## பதிலடி

குளப்பிட்டிச் சந்தியில் தமது படைப் பிரிவு தாக்கப்பட்டதும், கொக்குவில் இந்துக் கல்லூரி அருகே நின்ற இந்தியப் படையினருக்கு யாரையாவது பழிதீர்க்க வேண்டும் போல் இருந்தது.

மறுபடியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அகதிமுகாம் நோக்கி டாங்கிகளால் தாக்கினார்கள்.

எனினும் அத் தாக்குதலால் பெரும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

ஏற்கனவே நடைபெற்ற ஷெல் தாக்குதலால் பலியான 24 பேரையும் அடக்கம் செய்ய இந்துக்கல்லூரி மைதானத்தில் குழி வெட்டப்பட்டது.

பசியாலும், பயத்தாலும் சோர்ந்துபோன அகதிகள் பலர் சேர்ந்து ஒருவிதமாக குழியை வெட்டி முடித்தனர். பலியான அனைவரையும் ஒரே குழியில்தான் போட்டு மூடினார்கள்.

பாடசாலை வகுப்பறைகளில் இருந்த கரும்பலகைகள்தான் உடல்களை தூக்கிச் செல்லும் 'ஸ்ட்றெச்சர்'களாகப் பயன்பட்டன.

மீண்டும் இந்தியப் படையினர் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் கொக்குவில் அகதிமுகாமில் உள்ள அனைவரும் ஆங்கிலத்தில் நாங்கள் அகதிகள் என்று உரத்துச் சத்தமிடுவது என்று முடிவு செய்தனர்.

கிட்டத்தட்ட 7 ஆயிரம் அகதிகளைக் கொக்குவில் இந்துக்கல்லூரி உள்வாங்கியிருந்தது. அவர்கள் அத்தனைபேரினதும் உயிர்கள் இந்தியப் படையின் டாங்கிகள் முன்பாக ஊசலாடிக்கொண்டிருந்தன.

## அதிகாரியின் மிரட்டல்

அக்டோபர் 26ம் திகதி காலையில் அகதிமுகாமில் இருந்து உரத்துக்கத்தியதற்குப் பலன் கிடைத்தது.

இந்தியப் படையினரில் சிலர் முகாமுக்கு வந்தனர். அந்தப் பிரிவுக்கு தலைமை தாங்கியவர் பெயர் கேர்ணல் மிஸ்ரா.

அதிகாரத் தோரணையிலும், மிரட்டல் பாணியிலும் கேர்ணல் மிஸ்ரா அகதிகளோடு பேசினார்.



## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அகதிகள் என்று திட்டவட்டமாகத் தெரிந்தபின்னரும் எதிரிகளோடு நடந்து கொள்வது போன்று இரக்கமற்ற போக்கைக் கையாண்டனர்.

அக்டோபர் 26ம் திகதியும் 27ம் திகதியும் அகதிகளுக்கு உணவு கொடுக்க எந்த முயற்சியும் செய்யவில்லை.

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அருகே இருந்த கோவிலின் தேர்மீதும் இந்தியப் படையினருக்கு சந்தேகம்.

தேருக்குப் போடப்பட்ட மறைப்பை உடனடியாக நீக்கும் பணி அகதிகள் சிலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஒரு இந்திய அதிகாரி திமிர் கலந்து மிரட்டினார்.

"தேர் மறைப்பை நீக்கினால் உங்களுக்கு உணவு தரப்படும். இல்லாவிட்டால் எமது டாங்கிகளால் இத் தேரை பொடிப் பொடியாக்கிவிடுவேன். உங்களுக்கும் சாப்பாடு தரமாட்டேன்."

அகதிகள் உடனடியாக தேரின் மறைப்பை நீக்கினார்கள்.

தேரின் மறைப்பை அகதிகள் சிலர் நீக்கிக் கொண்டிருந்தபோது புலிகள் அங்கு வந்துவிட்டனர்.

அந்த மறைப்பு தங்களுக்கு வசதியாக இருக்கும் என்று நினைத்து வந்தவர்களுக்கு அகதிகள் அதனை நீக்குவதைக் கண்டதும் கோபம் வந்துவிட்டது.

புலிகள் ஆயுதங்களுடன் வருவதைக் கண்ட அகதிகள் பயந்து நடுங்கினார்கள்.

"ஐயோ எங்களை ஒன்றும் செய்யாதீர்கள். உங்களைக் கண்டால் அவர்கள் எங்களையும் சுட்டுப்போட்டுவிடுவார்கள். இங்கிருந்து போங்கோ தம்பிமார்" என்று கெஞ்சத் தொடங்கிவிட்டார்கள்.

நவம்பர் 27ம் திகதிக்குப் பின்னர் இரவு நேரங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூன்றாவது மாடியில் ஆட்கள் நடமாடும் சத்தங்கள் கேட்கும்.

பயம் காரணமாக அகதிகள் வெளியே வருவதில்லை. அதனால் யார் நடமாடுகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது.

காலையில் அகதிகள் நித்திரை விட்டெழுந்ததும் இந்தியப் படையினர் முறைத்தபடி அகதிமுகாமுக்கு வருவார்கள்.

"நேற்றிரவு மாடியில் இருந்து சுட்டது யார்?" என்று கேட்பார்கள்.

"ஐயோ எங்களுக்குத் தெரியாது. நாங்கள் வெளியே வருவதேயில்லை," என்று அகதிகள் கெஞ்சுவார்கள்.

"உங்களுக்குள்தான் புலிகள் இருக்கிறார்கள். அதனால் எல்லோருக்கும்தான் ஆபத்து!" என்று படையினர் மிரட்டுவார்கள்.

## யாழ்ப்பாணத்தில்....

அரியாலை வழியாக முன்னேறித்தான் யாழ்நகரை இந்தியப் படை கைப்பற்றியது.

யாழ் கண்டி வீதியையும், நெடுங்குள வீதியையும் இணைக்கும் சந்தியில் 'சுப்பிரமணியம் ஊதுபத்திக் தொழிற்சாலை' இருந்தது.

அந்தத் தொழிற்சாலையைத் தமது முகாமாக மாற்றிக்கொண்டனர் இந்தியப் படையினர்.

அங்குள்ள வெளிப்பகுதியில் ஆட்டிலெறிப் பீரங்கிகள் நிறுத்தப்பட்டன. வானம் பொத்துக்கொண்டு மழை கொட்டுவதைப் போல ஆட்டிலெறிப் பீரங்கிகள் ஷெல்மழை பொழிந்தன.

இந்தியப் படை வருகிறது என்று தெரிந்து முன்கூட்டியே மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஓடியதால் பாரிய உயிரழிவுகள் நடக்கவில்லை. இல்லாது போனால் ஆயிரக்கணக்கான மக்கள் பிணங்களாகக் குவிக்கப்பட்டிருப்பர்.

> "தேர் மறைப்பை நீக்கினால் உங்களுக்கு உணவு தரப்படும் இல்லாவிட்டால் எமது டாங்கிகளால் இத் தேரை பொடிப் பொடியாக்கிவிடுவேன். உங்களுக்கும் சாப்பாடு தரமாட்டேன்."
>
> —இந்திய அதிகாரி

ஷெல் அடித்து முடிந்தபின்னர் வெற்று ஷெல் கூடுகள் வீதிகளில் குவிந்து கிடந்தன. அவற்றை ஒன்று சேர்த்து அள்ளிச் செல்வதற்கு, குறைந்தது இரண்டு லொறிகள் வேண்டும்.

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் உள்ள பழைய பூங்காவில் புலிகளின் முகாம் ஒன்று இருந்தது. இந்தியப் படை முன்னேறிச் சென்றபோது புலிகள் அம்முகாமைக் கைவிட்டுச் சென்றுவிட்டனர்.

பழைய பூங்காவையும், கச்சேரிப் பகுதியையும் கைப்பற்றுவதற்காக அருகிலுள்ள பகுதிகளான பண்டியந்தாழ்வு, கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டைப் பகுதிகளை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன.

அப்பகுதிகளில் உள்ள மக்கள் எற்கனவே இடம்பெயர்ந்து செல்லத் தொடங்கியிருந்தார்கள். அப்படியிருந்தும் 30ற்கு மேற்பட்ட மக்கள் மேற்படி பகுதிகளில் ஷெல் வீச்சுக்குப் பலியாகினர்; உடல் சிதறி மாண்டனர். பலர் காயமடைந்தனர்.

சென் பற்றிக்ஸ் கல்லூரியில் ஷெல் விழுந்து அங்கிருந்த அகதிகள் பலியாயினர், என்பது பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

ஷெல் அடியால் காயம் அடைந்தவர்களை இரண்டு மினிவேன்களில் ஏற்றிக் கொண்டு யாழ் ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தனர்.

இரண்டு மினிவேன்களிலும் முன் பக்கத்தில் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

ஒரு மினிவேன் ஆஸ்பத்திரிக்கு சென்று விட்டது. அடுத்ததாகச் சென்ற மினிவேன் விக்ரர் என்பவருக்குச் சொந்தமானது. அவர்தான் மினிவேனை ஓட்டிச் சென்றார்.

"இந்த நேரத்தில் மினிவேனில் செல்ல வேண்டாம்!" என்று விக்ரரை அவரது உறவினர்கள் தடுத்தனர்.

"வெள்ளைக் கொடியுடன் செல்கிறேன். இந்தியப்படையினர் எதுவும் செய்யமாட்டார்கள்," என்று சொல்லிவிட்டுச் சென்றார் விக்ரர்.

பின்னர் விக்ரர் திரும்பிவரவேயில்லை. மினிவேன்மீது இந்தியப் படையின் துப்பாக்கிகள் வேட்டு மழை பொழிந்தன. விக்ரரும், வேனில் காயம்பட்டுக் கிடந்தவர்களும் பலியானார்கள். வேனை தீயிட்டுக் கொளுத்தியது இந்தியப் படை.

யாழ்ப்பாணத்தில் பிரபலமானது பஸ்தியன் அச்சகம். பஸ்தியன் அச்சக உரிமையாளரும், அவரது குடும்பமும் காயமடைந்து விக்ரரின் வேனில்தான் சென்றனர். அவர்களும் பலியானவர்களில் அடங்குவர்.

## கடைகள் சூறை

யாழ் நகர வீதிகளில் பிணமாகக் கிடந்தவர்களை அப்புறப்படுத்த முடியவில்லை. அதனால் எங்கும் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது.

கடைகள் யாவும் மூடப்பட்டுக் கிடந்தன. உணவுப் பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடு.

அதுதான் சமயம் என்று பூட்டியிருந்த கடைகளை உடைத்துக் கொள்ளையடித்தது ஒரு கோஷ்டி.

கொள்ளையடித்த அரிசி, பருப்பு மற்றும் உணவுப் பொருட்களை விற்பனை செய்து பணம் சுருட்டியது அக் கும்பல்.

ரீ.வி., ரேடியோ, ஃபான் போன்ற பொருட்களை விற்பனை செய்யும் கடைகளும் கொள்ளையிடப்பட்டன,

## நல்லூரில்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவில் அகதி முகாமில் இருந்தவர்கள் உயிரைக் கையில் பிடித்தபடி இருந்தனர்.

அவர்களது அச்சத்தை அதிகரிக்கும் வகையில் இலங்கை வானொலி ஒரு செய்தியை வெளியிட்டது.

"யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவில் அகதி முகாமுக்குள்தான் பிரபாகரன் மறைந்திருக்கிறார்." என்பதுதான் செய்தி.

செய்தியைக் கேட்டதும் அதன் உள் நோக்கம் புரிந்து அகதிகள் நடுங்கத் தொடங்கிவிட்டனர்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது– இராஜதந்திரி

# தென்னிலங்கையில் நடமாடும் பசுத்தோல்போர்த்த புலிகள்

# பிரிட்டனின் மத்தியஸ்த்த விருப்பம்

இரத்த வெறிபிடித்த அரசியல் தொடர்ந்து இருந்து வருவதையே, இரத்தினபுரியில் இளம் அரசியல்வாதி நாலந்த எல்லாவெல படுகொலை செய்யப்பட்ட சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய கோட்டைகளில் ஒன்றே இரத்தினபுரி. கொலையுண்ட நாலந்த எல்லாவெலவின் தந்தையார் நந்தா எல்லாவெல இரத்தினபுரியின் நெடுங்கால பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அவரது மறைவையடுத்தே புத்திரர் நாலந்த எல்லாவெல இரத்தினபுரியின் பாராளுமன்ற உறுப்பினராக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தெரிவானார்.

இருந்தபோதிலும் நாலந்த எல்லாவெலவின் அரசியல் வாழ்க்கை நன்கு 'மொட்டு விரிய முன்னரே கருகிப்போயுள்ளது.'

பட்டப்பகலில்– பலர் முன்னிலையில் படுபாதகமான முறையில் அந்த இளம்



நந்தா எல்லாவெல

-அனுதாப அலை-

அரசியல்வாதி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வேட்பு மனுப்பட்டியல்களுடன் தமது தொகுதிக்கு நாலந்த எல்லாவெல சென்றுகொண்டிருந்தார். அப்போது இரத்தினபுரியை அண்டிய குருவிட்ட என்ற இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினரின் ஊர்வலம் ஒன்றை நாலந்த எல்லாவெல சென்ற வாகனம் எதிர்கொண்டது.

ஊர்வலத்தில் வந்தோருக்கும், நாலந்த எல்லாவெல மற்றும் அவரோடு நின்றவர்களுக்குமிடையே வாய்த்தர்க்கம் சூடுகண்டது.

இதனையடுத்து துப்பாக்கிச் சூடுகள் விழ ஆரம்பித்தன. மெலிதான உடம்பைக் கொண்ட நாலந்த எல்லாவெலவின் மார்பு, வயிற்றுப்பகுதிகளையும் ஆறு வேட்டுக்கள் துளைத்தன. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிலமணிநேரத்தில் அவரது உயிர் பிரிந்தது.

வடக்கு–கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது, கொடிய அரசியல் வன்முறைகளுக்கு முடிவுகட்டுவது போன்ற வாக்குறுதிகளும் பொதுஜன ஐக்கிய முன்னணியினால் இருவருடங்களுக்கு முன்னர் அரசியல் மேடைகளில் தீவிரமாகவே பிரஸ்தாபிக்கப்பட்டன.

ஆனால் வடக்கு–கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாதிருக்கும் அதேசமயம், அரசியல் வன்முறைகளையும் கட்டில் போட சந்திரிகா அரசினால் முடியாதுள்ளதையே நாலந்த எல்லாவெலவின் மரணம் புலப்படுத்தியுள்ளது.

நாலந்த எல்லாவெலவின் கொலை தொடர்பாக இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சி நிலமே, முன்னாள் இரத்தினபுரி மேயர் மகிந்த ரத்னதிலக்க ஆகியோர் சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தையார் காலத்திலிருந்து ஆரம்பித்த அரசியல் படுகொலைகள் இன்றுவரை தொடர்ந்து வந்தவண்ணமுள்ளன.

அரசியல் பகைமை காரணமாக கொலைஞர்கள் அரசியல்வாதிகளை தேடிச்செல்கின்றனர். ஆனால் அரசியல்வாதிகள் கூட பொல்லாத துப்பாக்கிகளை ஏந்தியவர்களாகவே இன்று அரசியல் நடத்திவருவதையும் காணமுடிகின்றது.

அத்துடன் தமது பகைமையை வெளியிட துப்பாக்கிகளைக்கூட அவர்கள் துணிந்து பாவித்துவருவதையே நாலந்த எல்லாவெல சூட்டுச் சம்பவம் வெளிக்காட்டியுள்ளது.

நாலந்தவின் கொலை தொடர்பாகச் சந்தேகிக்கப்படும் சுசந்த புஞ்சிநிலமே ஏற்கனவே பல்வேறு வன்முறைகள் சம்பந்தமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நாலந்த எல்லாவெலவின் கொலைச் சம்பவத்தை அவதானிக்கும்போது பாராளுமன்றத்தில் எதிரும், புதிருமாக அமர்ந்திருக்கும் இரு எம்.பி.க்கள், தமது சொந்தத் தொகுதியில் துப்பாக்கிகள் மூலம் பகைமை பாராட்டியுள்ளதையே காணமுடிகின்றது.

பாராளுமன்ற எம.பி.க்கள் எனப்படுவோர் சிறப்புரிமைகளைக் கொண்டவர்கள். ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். மக்களுக்காக மக்கள் மத்தியிலேயே உதாரண புருஷர்களாக வாழவேண்டியவர்களாவர்.

ஆனால் இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்து வெளிவரும் தகவல்கள், அவர்கள் நடந்துகொள்ளும் முறை என்பன அச்சமூட்டத்தக்கவையாகவே உள்ளன.

இன்று, நேற்றல்ல; கடந்த பலவருடங்களாகவே அரசியல் வன்முறைகளின் பின்னணியில் முக்கிய அரசியல் புள்ளிகள் இருந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல்களத்தில் குதித்த பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐ.தே.க.வின் கடந்தகால அரசியல் வன்முறைகளையே தனது பிரதான பிரச்சாரமாக முன்வைத்தது.

ஜனாதிபதி சந்திரிகா, தமது கணவர் விஜயகுமாரதுங்கவின் கொலையின் பின்னணியில், அந்நாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவும், அவரது பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவும் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறி இத்தடவை உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

ஐ.தே.க.வை ஒரு கொலைகாரக்கும்பல் என்று சித்தரிப்பதும், அராஜகவாதிகள் என்று பிரசாரஞ் செய்வதுமே பொ.ஐ.ஐ.முன்னணியின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இந்த நோக்கத்தை நன்கு நிறைவேற்றி வைப்பதாகவே நாலந்த எல்லாவெல கொலைச் சம்பவம் விளங்கிநிற்கின்றது.

ஆட்சியதிகாரங்களில் இருப்போருக்கு வடக்கு–கிழக்கில் இருக்கும் புலிகளே பயங்கரவாதிகளாக இருக்கின்றனர். ஆனால் தென்னிலங்கையில் 'பசுத்தோல் போர்த்த புலிகள்' பெருமளவில் இருப்பதையே, அரசியல் வன்முறைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அரசியல்வாதிகள் மட்டத்தில் மட்டுமல்ல,சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டவும், சமாதானத்தை ஏற்படுத்தவும் நம்பியிருப்பதாகக் கூறப்படும் ஆயுதப் படையினர், பொலிஸார் ஆகியோர் மட்டத்தில்கூட விஷமிகளும், புல்லுருவிகளும் இருந்து வருவதையே விரிவாக இடம்பெற்று வரும் ஆணைக்குழு விசாரணைகள் மூலமாகவும் அறியமுடிகின்றது.

மனித உயிர்கள் மதிப்பிழந்து போயுள்ளன. வித, விதமான துப்பாக்கிகள், குண்டுகளை எவருமே எளிதாகப் பெறக்கூடிய வாய்ப்புக்களும் நிறையவே இருக்கின்றன.

வடக்கு–கிழக்குப் பிரச்சினையை மட்டுமே ஒரு பூதாகரமான பிரச்சினையாகவும் புலிகளையே பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்க ஆட்சியாளர்கள் முனைகின்றனர். ஆனால் அவர்களது இந்த நிலைப்பாட்டுக்கு விழும் பலத்த அடியாகவே தென்னிலங்கையின் வன்முறைச் சம்பவங்கள் விளங்குகின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவிய நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் மூலம் தன்னைச் சுதாகரித்துக்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சி முன்வந்திருந்தது.

ஆனால் எல்லாவெலவின் கொலை ஐ.தே.க.வின் தலையில் மீண்டும் பலத்த அடியைக் கொடுத்துள்ளது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே, பத்திரிகையாளர் மகாநாடொன்றையே நடத்தி சந்தேக நபர்களான தமது கட்சிக்காரர்கள் சுசந்த புஞ்சி நிலமே, மஹிந்த ரத்னதிலக்க ஆகியோரைச் சரணடையுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரங்கள் ஒரு அரசியல் கொலையுடன் ஆரம்பித்துள்ளன. தொடர்ந்து இடம்பெறும் தேர்தல் நடவடிக்கைகள் எத்தகைய கோலத்தில் இருக்குமென்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

இது இவ்வாறிருக்க, கடந்த வாரம் கொழும்புக்கு பிரிட்டிஷ் பொதுநலவாய நாடுகளின் அலுவலகப் பிரதி அமைச்சர் கலாநிதி வில்லியம் பொக்ஸ் விஜயம் செய்திருந்தார்.

திரு. வில்லியம் பொக்ஸ் பிரித்தானிய உயர் ஸ்தானிகரின் இல்லத்தில் பத்திரிகையாளர் மகாநாடொன்றையும் நடத்தியிருந்தார்.

அம்மகாநாட்டில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகவும் திரு. வில்லியம் பொக்ஸ் கருத்துவெளியிட்டிருந்தார்.

"இலங்கை இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் மத்தியஸ்த்தம் வகிக்கப் பிரிட்டன் தயாராகவே உள்ளது. ஆனால் மத்தியஸ்த்தம் வகித்து பிரச்சினையைத் தீர்க்க உதவுமாறு இலங்கையிலிருந்து எவருமே கோரவில்லை. இதனால் நாம் மத்தியஸ்த்தம் குறித்து கரிசனை கொள்ளவில்லை," என்று திரு. வில்லியம் பொக்ஸ் கூறியிருந்தார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தம் ஒன்றின் மூலமாகவே வடக்கு–கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் முயற்சிகளை அர்த்தமுள்ளதாக்க முடியும்.

ஏனெனில் அரசாங்கமோ, புலிகளோ, நேரடியாகப் பேச்சுக்களில் ஈடுபடுவதில் அக்கறையற்றிருக்கின்றன. ஆயினும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தத்தைப் பரிசீலிக்க முடியும் என்று இரு தரப்புமே அவ்வப்போது கூறிவருகின்றன.

கடந்த மாதம் இந்திய வெளி விவகார அமைச்சர் இந்தர் குமார் குஜ்ரால் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, இலங்கை இனப்பிரச்சினையில் தலையீடு, மத்தியஸ்த்தம் என்று அனைத்தையுமே நிராகரித்திருந்தார்.

ஆனால் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் வில்லியம் பொக்ஸ், தேவைப்பட்டால் தமது நாட்டினால் மத்தியஸ்த்தம் மேற்கொள்ளமுடியும், என்று கூறியிருந்தார்.

மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்த்தம் முன்பைவிட தற்போது மேலும் அவசியமானதாகியுள்ளது.

இலங்கையின் அரசியல் என்பது குழம்பிய குட்டையாக மாறியுள்ளது. நேர்மை, கண்ணியம், நெஞ்சுரம், செயற்திறன் கொண்ட அரசியலாளர்களுக்குப் பலத்த பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

'பாம்புக்கு வாலையும், மீனுக்குத் தலையையும் காண்பிக்கும்' நயவஞ்சக அரசியலே திரும்புமிடமெல்லாம் காணப்படுகிறது.

இலங்கையர்களால் இலங்கையின் பிரச்சினைகள் எதனையும் தீர்க்கமுடியாது, என்பதனை நாளுக்குநாள் நடைபெறும் சம்பவங்கள் மூலம் அறியமுடிகின்றது.

பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் வில்லியம், பொக்ஸ், தமது நாடு மத்தியஸ்த்தம் வகிக்கத் தயாராக இருப்பதைக் கூறியிருந்தார். பிரிட்டனைப்போல வேறுநாடுகள், மற்றும் சர்வதேச நிறுவனங்கள்கூட இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வரலாம்.

ஆனால் கொடிய ஆயுதக் கலாசாரத்தினால் கட்டுண்ட அரசியலாளர்கள், நேர்மையான அரசியல் அணுகுமுறைகளுக்கு முன்வராதவரை, எத்தகையதொரு தீர்வும் சாத்தியப்பட்டு வராது என்பதே கண்கூடு.

# அந்த ஐந்து பேர்

சென்னையில் ஐந்து இலங்கைத்தமிழர்கள் 08.02.97 அன்று கைது செய்யப்பட்டனர்.

அதில் ஒருவர் மிகப் பிரபலமானவர். அவர்தான் ஈழவேந்தன். தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைத்தலைவராக ஒரு காலத்தில் இருந்தவர். இலங்கை மத்திய வங்கியில் பணிபுரிந்தவர். சொந்தப் பெயர் கனகேந்திரன்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை சந்தர்ப்பவாதப் பாதையில் செல்கிறது. தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் நின்றுவிட்டு அக் கோரிக்கைக்கு மாறாகச் செயற்படுகிறது என்று இளைஞர்கள் கொதித்தெழுந்தனர்.

டாக்டர் தர்மலிங்கம், கோவை மகேசன், ஈழவேந்தன் போன்றோர் இளைஞர்கள் பக்கம் நின்றனர். இறுதியாக கூட்டணியைவிட்டு வெளியேவந்து தமிழீழ விடுதலை அணி என்னும் அமைப்பை உருவாக்கினார்கள்.

பின்னர் கோவை மகேசன், டாக்டர் தர்மலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். ஈழவேந்தன் தமிழ்நாடு சென்றார். சென்னை யில் தங்கினார்.

கலைஞர் கருணாநிதிக்கும் நன்கு அறிமுகமானவர் ஈழவேந்தன். இப்போது அவர்தான் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள மற்றொருவர் சச்சிதானந்தம்.

இவருக்கு சென்னையில் 'காந்தளகம்' என்ற பெயரில் ஒரு பதிப்பகம் இருக்கிறது. கலைஞர் தமிழக முதல்வரானதும் புலிகளுக்கும், கலைஞருக்கும் இடையே நட்புறவை ஏற்படுத்த முயன்றவர்களில் ஒருவர் சச்சிதானந்தம்.

சச்சிதானந்தத்தின் முயற்சி தொடர்பாகவும், அம் முயற்சி கைகூடவில்லை என்றும் முரசு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தமை நினைவிருக்கலாம்.

சமீபத்தில் கொழும்பு வந்த சச்சிதானந்தம் சில பிரமுகர்களைச் சந்தித்துவிட்டுச் சென்றார்.

மாலினி ராசநாயகமும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர். அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழர் அமைப்புக்கள் சார்பாக திரட்டிக் கொடுக்கப்படும் பணத்தில் புலிகள் இயக்கத்தினருக்கு தேவையான மருந்துப் பொருட்களை வாங்கி அனுப்புவதுதான் மாலினியின் பணி. அவருக்கு உதவிகரமாக இருந்தவர் டாக்டர் ஸ்ரீதர். அவரும் கைது செய்யப்பட்டார்.

இந்த நாலுபேருடனும் சேர்த்து கைது செய்யப்பட்டவர் முரளிதரன். யாழ் பல்கலைக்கழக மாணவரான முரளிதரன் புலிகள் இயக்க உறுப்பினர். பாண்டியன் என்பது அவரது இன்னொரு பெயர்.



முரளி



ஈழவேந்தன்



மாலினி



சச்சிதாநந்தம்



டாக்டர். ஸ்ரீதர்

ஆறுமாதத்துக்கு முன்னரே தமிழ்நாடு சென்ற முரளிதரனுக்கு தங்குமிடவசதி செய்துகொடுத்தது ஈழவேந்தனும், சச்சிதானந்தமும்தான் என்கிறது தமிழக பொலிஸ்.

சென்னையில் மாலினி, டாக்டர் ஸ்ரீதர் ஆகியோரிடம் மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு, அவற்றை கடல்வழியாக யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கும் ஏற்பாடுகளைச் செய்வதுதான் முரளிதரனுக்கு கொடுக்கப்பட்ட பணியாம்.

பொலிசார் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருந்தபோது எப்படியோ மறைத்து வைத்திருந்த மாத்திரை ஒன்றை வாய்க்குள் போட்டு விழுங்கினாராம் முரளிதரன். உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று அவரைக் காப்பாற்றிவிட்டார்கள்.

பூரண குணமானதும் விசாரணை தொடரும் என்கிறார்கள் பொலிசார்.

மருந்துக் கடத்தலில் மட்டும்தான் ஈடுபட்டார்களா அல்லது வேறு ஏதாவது திட்டமும் உண்டா என்று முரளிதரனிடம் அறிய விரும்புகிறது தமிழக உளவுத்துறை.

பாட்டாளி மக்கள் கட்சியின் மாநாடு, பேரணிகள் போன்றவற்றால் தமிழ்நாட்டில் மீண்டும் புலிகளுக்கு ஆதரவான சக்திகள் தலைதூக்குவதாக தமிழகப் பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன.

பாட்டாளிமக்கள் கட்சி, தி.மு.க.வை புதுக்கோட்டைத் தேர்தலில் ஆதரித்தது. அதனால் அக் கட்சிமீது உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

'என்ன செய்யலாம்' என்று கலைஞர் யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் ஈழவேந்தன், சச்சிதானந்தம் போன்றோருடன் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் தொடர்பாக இருக்கும் செய்தி எட்டியதாம். செய்தி கொடுத்தது உளவுத்துறை.

பார்த்தார் கலைஞர்; தமிழகப் பத்திரிகைகளின் வாயைமூட இதுதான் சந்தர்ப்பம். புலிகள் இயக்க உறுப்பினரை மட்டுமல்ல, தனக்கு அறிமுகமான ஈழவேந்தன், சச்சிதானந்தம் ஆகியோரையும் சிறையில் போட ஆணை பிறப்பித்துவிட்டார். கலைஞரா? கொக்கா?



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான் தேவி

தருவது **ரசிகன்** 32

**கடந்த வாரம்**

**கொள்ளைக் கோஷ்டியில் ஒருத்தியாகிவிட்ட பூலான் தேவி விக்கிரம் மல்லாவைக் காதலிக்கிறாள். கிராமம் ஒன்றுக்கு செல்கிறது கொள்ளைக் கோஷ்டி. அங்கு மல்லாவுக்கும் தங்களுக்கும் கிடைக்கும் வரவேற்பு பூலானுக்கு ஆச்சரியம் தருகிறது.**

இனி

துடித்த மட்டை ஒன்றை ஸ்பீக்கர்போல சுருட்டி தன் வாயின் முன்பாக வைத்துக் கொண்டு மல்லா உரத்த குரலில் பேசினான்.

மல்லா பேச அரம்பிக்க முன்னர் லெப்டினண்ட் மாது சிங்கும் லெப்டினண்ட் பரத் சிங்கும் தங்கள் துப்பாக்கிகளை நிமிர்த்தி வானை நோக்கி இரண்டு தடவை வேட்டுக்களைத்தீர்த்தனர்.

திடீரென்று எதற்காக அப்படிச் செய்கிறார்கள் என்று எனக்குப் புரிய வில்லை. என் அருகில் நின்ற ஒருவனிடம் கேட்டேன்.

"ஏன் சுடுகிறார்கள்?"

"நாங்கள் வந்திருப்பது தெரியாமல் வீடுகளுக்குள் யாராவது இருக்கலாம் அல்லவா? அவர்களை அழைக்கத்தான் இந்தச் சத்தம்," என்றான்.

அவன் சொன்னது சரிதான். வேட்டுச் சத்தம் கேட்டதும் தங்கள் வீடு களுக்குள் இருந்து ஆண்களும், பெண் களும் ஓட்டமும் நடையுமாய் வந்து கொண்டிருந்தனர்.

"நாங்கள் ஏழைகளின் நண்பர்கள். பணக்காரர்களின் எதிரிகள். எங்களைக்



பூலான்

கண்டு நீங்கள் யாரும் பயப்பிடத்தேவையில்லை. புரிகிறதா? யாருமே பயப் பிடத் தேவையில்லை. உங்களுக்கு யாராவது தொல்லை தந்தால் எங்க ளிடம் சொல்லுங்கள். அந்த நாய்களை சுட்டுத்தள்ளி விடு கிறோம். நாங்கள் பொலிஸ் காரர்கள் மாதிரியல்ல, புரி கிறதா? பொலிஸ்காரர்கள் போன்றவர் களல்ல. எங்களுக்கு நீங்கள் எதுவும் தரவேண்டாம். நாங்கள் உங்களிடம் எதையும் கேட்கமாட்டோம். எங்களுக்குத் தேவையானதை நாங்கள் பணக்காரர் களிடம் எடுத்துக்கொள்ளுவோம்!"

மல்லா அப்படிச் சொன்னதும் கூடி யிருந்தவர்களில் பலர் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தார்கள். பெரியவர்கள் கைதட்டுவதைப் பார்த்ததும் சிறுவர்களும் சிறுமிகளும் கைகளைத் தட்டி துள்ளிக் குதித்தார்கள்.

ஆரவாரம் ஓயும்வரை தன் பேச்சை நிறுத்திக் காத்திருந்தான் மல்லா. அப்படிக் காத்திருந்தபோது ஒருதடவை அவன் கண்க்ள் என்மீதும் பட்டுப் போயின.

தன்னையே வைத்தவிழி வாங்காமல் நான் வியப்புடன் பார்த்துக்கொண்டிருப் பதை மல்லா புரிந்துகொண்டிருப்பானா? மரமண்டை. மரமண்டை.

ஆரவாரம் ஓய்ந்ததும் மல்லா தொடர்ந்து பேசினான்; "நாங்களும் உங் களைப் போன்ற ஏழைகள்தான்! ஏழை களின் பிள்ளைகள்தான். ஒருபோதும் உங்களை நாங்கள் வருத்தமாட்டோம். எங்கள் தேவைக்கு அதிகமாக எது கிடைத்தாலும் உங்களைப் போன்ற ஏழை களிடம் பகிர்ந்து கொடுத்துவிடுவோம். இப்போதும் அதற்காகத்தான் வந்திருக் கிறோம்.

மல்லா சொன்னதைக் கேட்டதும் கூடியிருந்தவர்கள் முகங்களில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. மல்லா பேசிமுடித்து விட்டான்.

"பரத் சிங் அந்த மூட்டையைக் கொண்டுவா!" என்று கட்டளையிட்டான்.

ஒரு மூட்டையைக் கொண்டுபோய் விக்கிரம் மல்லாவின் முன்பாக வைத்து விட்டு தலைவணங்கினான் பரத் சிங்.

விக்கிரம் மல்லா மூட்டையைப் பிரிக்க ஆரம்பித்தான். கூடியிருந்தவர்கள் அனை வரது கண்களும் அந்த மூட்டைமீதுதான் இருந்தன. சிலர் முண்டியடித்தனர். அதனால் கூட்டத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

அப்போதுதான் விக்கிரம் மல்லா விடம் இருந்து திடீரென்று அந்த உத்தரவு வந்தது. அது நான் எதிர்பாராத உத்தரவு.

"பூலான், இங்கே வா! எல்லோரையும் தரையில் அமரச் சொல்லி கூட்டத்தை ஒழுங்குபடுத்து!" என்றான் மல்லா.

என்னிடம் அவன் சொன்ன உத்தரவு கூடத்தினரின் காதுகளிலும் விழுந்து விட்டது. அதனால் நான் சொல்ல வேண் டிய அவசியமே இல்லாமல் கூடத்தினர் அமைதியாகத் தரையில் அமர்ந்து விட்டனர்.

எனக்குத்தான் பெரும் சங்கடமாகிப் போய்விட்டது. மல்லா என்னை பெயர் சொல்லி அழைத்ததால் கூட்டத்தினர் அனைவரது பார்வையும் இப்போது என்மீதுதான் திரும்பி இருந்தது.

அதற்கு முன்னர் கூட்டத்தினரில் சிலர்தான் என்னைக் கவனித்திருந்தனர். நானும் எல்லோர் பார்வையும் என்மீது படாமல் இருக்கக்கூடியதாக ஓரமாகத்தான் ஒதுங்கி நின்றேன்.

நீண்டகாற் சட்டையும், மேற் சட்டையும் போட்டுக்கொண்டு ஆண்பிள்ளைபோல எல்லோர் முன்பாகவும் நிற்கும்போது வெட்கம் வெட்கமாக வந்தது.

'இந்த மல்லா என்னைப் பிடித்து இப் படித் தள்ளிவிட்டானே!' என்று நினைத்தேன். வெட்கப்பட்டுக் கொண்டே இருந்தாலும் ஒரு புண்ணியமும் இல்லை. எல்லாவற்றை யும் பழகித்தான் ஆகவேண்டும் என்றும் மனதுக்குள் நினைப்பு எழுந்தது.

மல்லா மூட்டையைப் பிரித்துவிட்டான். உள்ளே தங்கச் சங்கிலிகளும், கட்டுக்கட்டாகப் பண நோட்டுக்களும், குவியலாகச் சில்லறை நாணயங்களும் கிடந்தன.

அவையெல்லாம் பாபு சிங் குஜார் தலைமையில் கொள்ளையடித்துச் சேர்த் தவை. அவற்றை இனிமேலும் நம்கூட வைத்திருக்கக்கூடாது என்றுதான் மல்லா கொண்டுவந்திருந்தான்.

ஒரு தங்கச் சங்கிலியை எடுத்து கையில் வைத்துக்கொண்டு தன் முன்னால் அமர்ந் திருந்த கூட்டத்தினரைப் பார்த்தான் விக்கிரம் மல்லா.

கூட்டத்தினர் மத்தியில் இருந்த ஒரு சிறுமியை தன்னிடம் வருமாறு கைகளால் சைகை காட்டி அழைத்தான்.

சிறுமி எழுந்து ஓடிச் சென்றாள். அவளைத் தூக்கி நெற்றியில் முத்தமிட்டுவிட்டு கழுத்தில் தங்கச் சங்கிலியை அணிவித்தான்.

சிறுமி சட்டென்று மல்லாவின் கன்னத் தில் முத்தமிட்டுவிட்டு குதித்து ஓடினாள்.

மல்லா அந்தச் சிறுமியின் நெற்றியில் முத்தமிட்டபோது எனக்குப் பொறாமையாக இருந்ததா, வெட்கமாக இருந்ததா என்று தெரியவில்லை. ஏதோ இனம் புரியாத உணர்ச்சிமட்டும் மனசுக்குள் எட்டிப் பார்த்து விட்டுப் போனது.

முதியவர்கள், குடும்பப் பெண்கள் ஆகியோருக்குத்தான் பணம்- நகைகளைக் கொடுப்பதில் மல்லா முன்னுரிமை கொடுக் கிறான் என்பதைக் கவனித்தேன்.

மல்லாவின் ஒவ்வொரு செயலும் எனக் குப் பிரமிப்பாக இருந்தது. மலலாமீதுள்ள எனது பிடிப்பு மேலும் மேலும் இறுகிக் கெட்டியாகிக் கொண்டிருந்தது.

சில்லறைகளை அள்ளி சிறுவர் சிறுமி களின் கைகளில் கொட்டினான் மல்லா.

"பூலான் இங்கே வா...நீயும் எடுத்துக் கொடு!" என்று அழைத்தான். நான் தயங்கி னேன்.

"வா! வந்து கொடு!" என்றான் மல்லா கண்டிப்பான குரலில்.

நான் தயங்கித் தயங்கி நடந்துபோய் மூட்டைக்கு அருகில் நின்றேன். எங்கள் கோஷ்டியில் உள்ள சிலர் என்னை பொறா மையோடு பார்ப்பதுபோல உணர்ந்தேன்.

"ம்....எடுத்துக் கொடு. எடுக்கவேண்டிய வர்களிடம் எடுக்கவும் தயங்கக் கூடாது. கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுக்க வும் தயங்கக்கூடாது," என்றான் மல்லா.

காய்ந்த விறகில் சட்டென்று பற்றிக் கொள்ளும் நெருப்பு மாதிரி மல்லா சொன்ன அந்த வார்த்தை எனக்குள் பற்றிக்கொண்டது. பற்றி நெஞ்சு முழுக்கப் படர்ந்து கொண்டது. 'எடுக்க வேண்டியவர்களிடம் எடுக்கவும் தயங்கக்கூடாது. கொடுக்க வேண்டியவர் களுக்குக் கொடுக்கவும் தயங்கக் கூடாது'

அந்த வார்த்தைகள்தான் என்னை வழி நடத்தி, ஏழைகளின் தலைவியாக- பிற்காலத் தில் பேசவைக்கப்போகின்றன, என்பதை அப்போது நானும் உணரவில்லை. அந்த வார்த்தையைச் சொன்ன மல்லாவும் அறிந்தி ருக்கவில்லை.

ஆனால் அந்த வார்த்தைகளை மல்லா சொன்னது எனக்குப் பிடித்திருந்தது. யாரோ என் கழுத்தில் கைவைத்து முன்னோக்கி தள்ளிவிட்டதைப்போல உந்துதலாக, உற்சாக மாக இருந்தது.

என் வெட்கம் எல்லாம் போன இடம் தெரியவில்லை. வெகு உற்சாகமாக மல்லா சொன்னதைச் செய்யத் தொடங்கினேன்.

நாணயங்களை இரண்டு கைகளாலும் அள்ளி அள்ளிச் சிறுவர் சிறுமிகளின் கைகளை விரிக்கச் சொல்லிக் கொட்டினேன்.

'பூலான் நீ இப்போது புதுமனுசியடி. புது மனுசி!' என்று யாரோ என் காதுக்குள் சொல்வது போலக் கேட்டது. யாருமே இல்லை. எல்லாம் என் நினைப்புத்தான்.

என் மனசு முழுக்க நிறைந்துபோய் விட்டது. சில்லென்று தண்ணீர் ஓடும் ஆற்றில் தெப்பமாக நனைந்து நனைந்து குளித்தது மாதிரி உடம்புக்கு உள்ளேயும், வெளியேயும் சில்லிட்டது.

எல்லாவற்றையும்விட என்னை அழைத்து பகிர்ந்து கொடுக்கச் சொன்ன மல்லாவை நினைக்க நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

'அப்படியே மல்லாவை கட்டிப்பிடித்து ஆசை தீரக் கொஞ்சிக் கொஞ்சி அவன் நெஞ்சில் கைகளால் குத்திக் குத்தி, அவன் முடியை என் விரல்களால் களைந்து களைந்து- மல்லாவின் தாடையின் இடதுபக்கத் தில் சின்னதாக ஒரு மச்சம் இருக்கிறது- அந்த மச்சத்தில்....'

"போகலாம் பூலான்" என்றான் என் அருகில் வந்த மல்லா.

நாங்கள் புறப்பட்டுக் கொண்டிருக்க, கூட்டத்தினர் அனைவரும் ஒரே குரலில் கத்தினார்கள்.

"ஜே ஜே, விக்கிரம் மல்லாவுக்கு ஜே. ஜே!"

"ஜே ஜே! விக்கிரம் மல்லாவுக்கு ஜே ஜே"

மல்லாமீது எல்லோரும் அன்பு செலுத்து வதைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

நடந்துவரும்போது ஒரு குடிசை முன் னால் கயிற்றுக் கட்டிலில் வயதான பெண்கள் இருவர் அமர்ந்திருந்தனர். அவர்களால் நடந்துவர முடியாது. அதனால்தான் அவர் களால் கூட்டத்துக்கு வரமுடியவில்லை.

மல்லா அவர்களிடம் சென்றான். குனிந்து இருவர் பாதங்களையும் தொட்டு வணங்கினான்.

மல்லாவின் குறிப்பை உணர்ந்தவனாக அவனிடம் பணநோட்டுக்களைக் கொடுத்தான் பரத் சிங்.

"உங்கள் மகன் தரும் காணிக்கை இது. பெற்றுக்கொள்ளுங்கள் அம்மா!" என்று நோட்டுக்களை இருவரிடமும் பங்கிட்டுக் கொடுத்தான் மல்லா.

அங்கிருந்த கோவிலுக்கு வந்து வணங்கி விட்டு செல்லுமாறு கிராமத்தினர் அழைத்தார் கள். ஊர்வலம் போல எமக்கு முன்னா லும் பின்னாலும் கிராமத்தவர்கள் நடந்து வந்தனர்.

கோவிலில் மல்லா முன்பாக ஒரு இளம் பெண்ணைக் கொண்டுவந்து நிறுத்தி னார்கள்.

மல்லாவின் காலில் விழுந்து வணங்கிய அப்பெண்ணின் தலையில் தொட்டு மல்லா அவளை வாழ்த்தினான்.

மறுநாள்தான் அவளுக்குத் திருமணம் நடக்க இருந்தது. அவளுக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டும் அல்லவா?

ஆனால் இருந்த பணம், நகை அனைத் தையும் பகிர்ந்து கொடுத்தாகிவிட்டது. அதனால் யாரிடமும் பணம் இருக்கவில்லை. மாது சிங் கொஞ்சப் பணம் வைத்திருந்தான். அது பரிசாக கொடுக்கப் போதுமானதல்ல என்று மல்லா நினைத்திருப்பான் போலும்.

சட்டென்று ஏதோ நினைவு வந்தவனாக தன் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி எடுத்தான் மல்லா. அது நல்ல தடிப்பமான சங்கிலி. ஒரு நாலு- ஐந்து பவுன் இருக்கலாம்.

அந்தத் தங்கச் சங்கிலியை பெண்ணின் உள்ளங்கைகளில் போட்டான் மல்லா.

கிராமத்தைவிட்டு கிளம்பி எமது பழைய இடத்துக்கே வந்து சேர்ந்தோம். இரண்டு பேரை அங்கே காவலுக்கு இருத்திவிட்டுத் தான் சென்றிருந்தோம்.

நாங்கள் திரும்பியபோது எனக்கான புதிய சீருடை தயாராக இருந்தது.

'அய்.... எனக்குப் பயிற்சி ஆரம்பமாகப் போகிறது!'

(தொடர்ந்து வரும்)

# மகாராணியின் பொன்விழா

பிரிட்டிஷ் ராணி எலிசபெத் மகாராணி யின் திருமணப் பொன்விழா எதிர்வரும் ஜூலை மாதம் கோலாகலமாகக் கொண்டாடப் படவுள்ளது.

ராணி எலிசபெத்தும் அவர் கணவர் பிலிப்பும் உற்சாகமாக இருக்கிறார்கள். ஆனாலும் ஒரு வருத்தமும் இருக்கவே செய்கிறது.

எலிசபெத்-பிலிப் தம்பதியினருக்கு நாலு பிள்ளைகள். சாஸ்ல், ஆண்ட்ரு, எட்வேட், ஆன். இதில் ஆன் மட்டுமே பெண்பிள்ளை.

ஆண்ட்ரு தனது மனைவி சாராவை விவாகரத்துச் செய்துவிட்டார். சாஸ்ல்- டயானாவை விட்டுப் பிரிந்துவிட்டார். இளவரசி ஆன் தனது கணவரை விவாக ரத்துச் செய்துவிட்டார்.

ராணி எலிசபெத்-பிலிப் தம்பதி தமது 50வது திருமணப் பொன்விழாவைக் கொண்டாடும்போது, அவர்களது மூன்று பிள்ளைகளும் மண வாழ்வில் தோல்வி கண்டு தனியாட்களாக நிற்கின்றனர்.

அந்தக் கவலையைத் தீர்க்கத்தானோ என்னவோ, தனது திருமண பொன்விழாவை முன்னிட்டு 4 ஆயிரம் தம்பதிகளுக்கு விருந்து கொடுத்து மகிழப்போகிறார் எலிசபெத் ராணி.



விருந்துபசாரத்தில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் விண்ணப்பம் போடு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 40 ஆயிரம் தம்பதிகள் விண்ணப்பம் போட்டுள்ளனராம்.

விண்ணப்பம் போட்டவர்களில் இருந்து நாலாயிரம் தம்பதிகளை கம்பியூட்டர் மூலம் தெரிவு செய்யப்போகிறார்கள்.

பொன்விழாவில் கலந்துகொள்ள முன் னாள் மருமகள்களான டயானாவுக்கும்-சாரா வுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாம்.

# "பூலான்மீது கைவைக்காதே!"

## அமெரிக்கப் பெண்கள் போர்க்கொடி

பூலான் தேவியைக் கைதுசெய்யுமாறு நீதிமன்றம் விடுத்த உத்தரவைக் கண்டித்து அமெரிக்காவில் போர்க்கொடி உயர்த்தியிருக் கிறார்கள்.

பூலானைக் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் அமெரிக்காவில் உள்ள ஹவாய்த்தீவில் 'பூலான் தேவி பாதுகாப்புக் கமிட்டி' என்னும் அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

ஹவாய்த் தீவில் உள்ள இந்தியப் பெண்களும், அமெரிக்கப் பெண்களும் இணைந்தே அந்த அமைப்பை உருவாக்கி யுள்ளனர்.

அந்த அமைப்பு உருவாக்கப்பட்ட செய்தி அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியானது. உடனடியாக வாஷிங்டன், ஹூஸ்டன், லொஸ் ஏஞ்ஜலீஸ் நகரங்களில் கிளைகள் நிறுவ விண்ணப்பங்கள் குவிந்தனவாம். தற்போது கிளைகள் நிறுவப்பட்டுள்ளன.

பூலான் தேவி பாதுகாப்பு கமிட்டியால் இந்தியத் தலைமை நீதிபதி ஏ.எம்.அஹமதிக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

"இந்தியாவில் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரு முக்கிய தலை வராக இருக்கிறார் பூலான் தேவி.

இந்திய நீதிபதிகள் பொலிசார், மற்றும் அரச அமைப்புக்கள் அவரைத் துன்புறுத்தி வருகின்றன.

ஒரு பெண்ணாக இருப்பதாலும், தாழ்த் தப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர் என்பதாலும் தான் பூலான்தேவிமீது விரோதம் காட்டுகிறார்கள்," என்று அந்தக் கடிதத்தில் சாடியிருக்கிறார்கள் பூலான் தேவி பாது காப்புக் கமிட்டியினர்.

பூலான் தேவி பாதுகாப்புக் கமிட்டி யின் வாஷிங்டன் பிரிவு ஒருங்கிணைப்பாளர்



கலீம் கவாஜா, பூலான் தேவியை அமெரிக்கா வருமாறு அழைத்திருக்கிறார். அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுக்கான பேட்டியில் அந்த அழைப்பை விடுத்துள்ளார் கலீம் கவாஜா.

"இந்தியாவில் தற்போதுள்ள எந்த வொரு அரசியல் தலைவரையும்விட துணிச்சலானவர் பூலான். அவர் அமெரிக்கா வந்தால் புகலிடம் கொடுக்க அமெரிக்க அரசைக் கோருவோம்," என்று கலீம் கவாஜா தனது பேட்டியில் தெரி வித்திருக்கிறார்.

# குழந்தை வரமும் கொடூரப் பலியும்



அஜிதா

நம்பமுடியாத கொடூரம்தான். ஆனாலும் நடந்துதான் இருக்கிறது.கொடூரம் நடந்த இடம் தமிழ்நாடு கன்யாகுமரி மாவட்டம்.

அஜிதா என்ற சிறுமி இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். அஜிதாவுக்கு தன் தாய், தந்தையாரைவிட சித்தப்பாவின் மகன் விக்கிரமன்மீதும், அவன் மனைவி துளசி மீதும்தான் பாசம் அதிகம்.

விக்கிரமன்-துளசி தம்பதிக்கு பிள்ளைகள் கிடையாது. பிள்ளைவரம் கேட்க ஒரு மலையாள மாந்திரீகரை நாடினார்கள்.

மலையாள மாந்திரீகரின் பெயர்: நடராஜன். மந்திரித்துக் கயிறு கட்டுவது, தகடு செய்து கொடுப்பது என்று புரளிவிட்டே பணம் சம்பாதிப்பவன்.

விக்கிரமன்-துளசி தம்பதிக்கு நடராஜன் சொன்ன யோசனை பயங்கரமானது.

"உங்கள் இரத்த பந்தத்தில் பிறந்த ஒரு மூத்த பிள்ளையாகப் பார்த்து பலியிட வேண்டும். பௌர்ணமிக்கு பின்னால் வரும் அஷ்டமி தினத்தில் பலி கொடுத்தால் போதும். துளசி கருத்தரிப்பது உறுதி" என்றானாம் அந்தச் சண்டாள மாந்திரீகன்.

விக்கிரமன்-துளசி தம்பதிக்கு உடனே நினைவுக்கு வந்தவள் அஜிதாதான். ஏனெனில் விக்கிரமனிதன் பெரியப்பாவுக்கு மூத்த பிள்ளை அஜிதா.

அந்தப் பிஞ்சைப் பலிகொடுக்க இரண்டு கல்நெஞ்சக்காரர்களும் முடிவு செய்தனர்.

அன்று அஷ்டமிதினம். பள்ளிக்கூடத்தி லிருந்து நேராக வழக்கம்போல விக்கிரமன்- துளசி வீட்டுக்குப்போய் செல்லம் கொஞ்சினாள் அஜிதா.

சரியாக இரவு பன்னிரண்டு. ஊரின் ஒதுக்குப்புறமான பகுதியில் உள்ள மலைக்கு அஜிதாவை தூக்கிப்போனார்கள். முன் கூட்டியே அஜிதாவுக்கு மயக்க மருந்து கொடுத்துவிட்டனர்.மலையில் பலிபீடத்தில் சிறுமியை நிர்வாணமாகப் படுக்கவைத்து நடராஜன் பூஜை செய்தான். திடீரென்று பூஜை நடுவே மயக்கம் தெளிந்த அஜிதா கத்தியிருக்கிறாள். கத்தாமல் வாயில் துணியைத் திணித்தான் நடராஜன். மூச்சுமுட்டித் திணறி அஜிதா செத்துப் போனாள்.

அதன் பின்னர் நடந்தது அதைவிடக் கோரம். அஜிதாவின் உடலை வெட்டி இரத்தத்தை எடுத்துக் கொண்டான் நடராஜன். அந்த இரத்தத்தை பச்சரிசி சோறுடன் கலந்து மூன்று தலைவாழை இலைகளில் படைத்து துளசி-விக்கிரமன் தம்பதிக்கு விருந்து கொடுத்தான் பாதகன். அந்தச் சண்டாளத் தம்பதியும் ருசித்து சாப்பிட்டிருக்கிறது.

இறுதியாக கிளைமாக்ஸ்! குழந்தையின் இரத்தத்தை ஒரு போத்தலில் கொடுத் தானாம் மந்திரவாதி நடராஜன்.

"வீட்டுக்குப் போய் இதனை உடலில் பூசிக்கொண்டு ஒன்றுசேருங்கள்! கோழி கூவ முன்னர் எழுந்து குளியுங்கள்!" என்று அட்வைஸ் கொடுத்தானாம்.

குழந்தை அங்கே செத்துக் கிடக்க வீட்டில் அதன் அண்ணன் விக்கிரமனும், மனைவியும் கட்டிலில் ஆடியிருக்கிறார்கள்.


இத்தனை கொடூரங்களும் எப்படி வெளியில் வந்தது தெரியுமா?

குளம் ஒன்றில் கிடந்த அஜிதாவின் உடலைப் பார்த்த பொலிசாருக்கு, உடலில் கிடந்த காயங்களால் சந்தேகம் ஏற்பட்ட தாம். அதைத் தொடர்ந்து விசாரணையை முடுக்கிவிட நடராஜன் மாட்டினான். அந்தப் பாவிக்கு கொடுத்த உதையில் உண்மைகள் வெளிவந்தன. இப்போது நடராஜன், விக்கிரமன், துளசி மூவரும் கைதாகியுள்ள னர். கைது மட்டும் போதுமா?



படிப்பகம்

www.padippakam.com



# நிழல் நிஜமாகிறது

## 'ஸ்பைடர் மேன்'

↑ தொலைக்காட்சிகள் மூலமாகவும் சித்திரக் கதைகள் மூலமாகவும் பிரபலமான பாத்திரம் 'ஸ்பைடர் மேன்'. வானை வருடும் மாடிக் கட்டிடங்களில் தாவிச்செல்லும் 'ஸ்பைடர் மே'னைக் கண்டு மூக்கில் விரலை வைத்திருப்பீர்கள். ஆனால் அதெல்லாம் கற்பனையும், கமரா சாகசமும் கலந்த வித்தைகள்தான்.

ஆனால் உண்மையிலேயே 50வது மாடிவரை ஜன்னல் விளிம்புகளால் தாவித்தாவிச் சென்று உலக சாதனை படைத்திருக்கிறார் ஒரு இளைஞர்.

மேலே பாருங்கள்; ஜன்னல் விளிம்பு வழியாகத்தாவிச் செல்லும்போது கிளிக்கிய படம்தான் இது. படத்தில் அவரது நிழல் ஜன்னலில் பிரதிபலிக்கிறது.

இந்த அசாத்திய துணிச்சல்காரரின் பெயர்; ஆலெய்ன் ரேமாண்ட். 34 வயது. பாரிஸ் நகரைச் சேர்ந்தவர்.




குளோசப் போட்டோ

இவர் சாகசம் காட்டியது ஹொங்கொங்கில் உள்ள 50 மாடிக் கட்டித்தில். மூன்றாவது மாடியில் ஏறிய முப்பதாவது நிமிடத்தில் 50வது மாடியின் உச்சிக்குச் சென்றுவிட்டார். அதாவது படுவேகமான தாவல். விளிம்புகளை உறுதியாக உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொண்டு தாவியிருக்கிறார். பிடி நழுவியிருந்தால் எலும்புப் பொடிகூட மிஞ்சியிருக்காது.

இவரது சாதனைக்கு கிடைத்த பாராட்டு என்ன தெரியுமா? 50வது மாடியை அடைந்ததும் பொலிசார் வரவேற்றனர். அப்படியே பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிப்போய்விட்டனர். இவ்வாறான முயற்சிகள் சட்ட விரோதமாம். பாவம் தாவியும் பயன் இல்லாமல் போய் விட்டது. என்றாலும் தம்பி சூரர்தான்.

# பெரிய கண்கள்



→ கண்களைப் பார்த்ததும் கலக்கம் வருகிறதா? என்ன இது என்று நினைக்க வைக்கிறதல்லவா?

சிலந்தி தெரியுமா சிலந்தி. அது தான் இது. 'நெட் காஸ்ட்டிங் ஸ்பைடர்' என்பது இதன் பெயர். உலகில் மிகச் சிறிய சிலந்திதான் இது. அவுஸ்திரேலியாவில் இது காணப்படும்.

ரொம்பப் பெரிசாகத் தெரிகிறதே? என்று பார்க்கிறீர்களா? மைக்ரஸ்கோப்பினால் உருப்பெருக்கிய போது தான் இப்படிப் பயங்கரமான கண்கள் கொண்டதாக காட்சியளிக்கிறது.

இரவு நேரம்தான் இதற்கு பிரியமானது. ஏனெனில் இரவில்தான் விருந்து தேடி வேட்டை நடத்தும். எறும்புகள் என்றால் கொள்ளைப் பிரியம். இரவில் வேட்டை நடத்த வசதியாக இதன் கண்கள் பெரிதாக இருக்கின்றன. அதனால் கும்மிருட்டிலும் கச்சிதமாக விருந்தை அமுக்கிக் கொள்ளும்.

# தகவல் பெட்டி

# கொஞ்சம் கொரில்லா



↑ பெற்ற பிள்ளையை கைவிடும் தாயைக் கல்நெஞ்சக்காரி என்றழைக்கலாம். படத்தில் உள்ள கொரில்லாவின் தாய்க்கும் கல் நெஞ்சுதான். இக் கொரில்லா பிறந்தபோது ஆக இரண்டு கிலோ எடைமட்டுமே இருந்ததாம். தனது குட்டிகளைப் போல் அல்லாமல் இது சிறியதாகவும், பலவீனமாகவும் காணப்பட்டதால் தாய்க் கொரில்லா இதனை கைவிட்டுச் சென்றுவிட்டது. ஏதோ இதன் நல்ல நேரம், வனவிலங்கு காப்பாளர்களின் கண்களில் பட்டதால் காப்பாற்றப்பட்டது. தற்போது ஜெர்மனில் உள்ள முனிச் நகர மிருகக்காட்சிச் சாலையில் செல்லமாக வளர்க்கப்படுகிறது. இந்தக் குட்டிக் கொரில்லாவுக்கு வியுனா என்று பெயர் சூட்டியுள்ளனர். மிருகக்காட்சிச் சாலையின் பெண் ஊழியருடன் செல்லமாக ஒட்டிக்கொண்டு குறும்பு பண்ணுகிறது வியுனா.

# வீச ஐந்துபேர்



→ நகரப் புறங்களில் ஃபான் இல்லாத வீடுகள் அரிது. ஆனால் ஃபான் காற்று உடல் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல.

அந்தக்காலத்தில் விசிறிகள் மூலம்தான் வியர்வையைப், புழுக்கத்தை விரட்டுவார்கள். மன்னர்கள் மற்றும் பெரும் செல்வந்தர்கள் வீட்டில் விசிறி வீசுவதற்கு பணியாட்கள் இருப்பார்கள்.

இப்போதெல்லாம் விசிறிகள் அரிதாகி வருகின்றன. அதிலும் அழகான விதம் விதமான விசிறிகள் கிடையாது. (நடிகர்களுக்குத்தான் அழகான விசிறிகள் இருக்கிறார்கள். ரசிகர் ரசிகைகளையும் விசிறிகள் என்று அழைக்கிறார்கள் அல்லவா? அதைச் சொன்னோம்)

படத்தில் இருப்பதுதான் உலகின் மிகப் பெரிய விசிறி. மரத்தால் செய்யப்பட்டது. நீளம் 10அடி 9 அங்குலம். உயரம் 6அடி. சீனாவைச் சேர்ந்த ஹியான்பாவோ என்பவரால் தயாரிக்கப்பட்டது. விசிறி கச்சிதமாக, அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒரு சிக்கல், இதனை தூக்கிவீச ஐந்துபேர் தேவை. இதனை மடித்து வைக்கவும் முடியாது.



படிப்பகம்

# "எனக்கு என்ன வயசாச்சு?"

## திருமணம் பற்றி குஷ்பு

குஷ்புவும்-சுந்தரும் விரைவில் திருமணம் செய்யப்போவதாக தமிழக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. செய்தியைப் படித்ததும் குஷ்புக்கு கோபம் ஜில்லென்று ஏறிவிட்டது. செய்தியை மறுத்து வெளியாகியுள்ள குஷ்புவின் பேட்டி இது.

**கே: உங்கள் திருமணம் விரைவில் நடக்கப்போவதாக செய்தி வெளியாகியுள்ளதே?**

**குஷ்பு:** அப்பட்டமான பொய்! எங்க மேரேஜ் பத்தி ஏற்கனவே தெளிவாய் சொல்லிவிட்டோம். மூணு வருசம் கழிச்சுத்தான் மேரேஜ். அப்படியும் ஆளாளுக்கு இஷ்டப்படி எழுதுறாங்க. நாங்க உடனே மேரேஜ் பண்ணிக்கணும் என்று நீங்க ஆசைப்பட்டா உங்க செலவிலேயே எங்களுக்கு வீடு கட்டிக் கொடுங்க. மேரேஜ் பண்ணிக்கறோம்.

**கே: திருமணத்திட்டம் தள்ளிப்போக வீடுதான் காரணமா?**

**குஷ்பு:** ஆமா! சொந்தவீடு கட்டின பிறகு அங்கேதான் புதுவாழ்க்கையை ஆரம்பிக்கலாம் எண்ணு பிளான் பண்ணியிருக்கோம். இப்பதான் நிலம் வாங்கியிருக்கோம். வீடு கட்டி முடிக்க ஒண்ணரை வருசம் ஆகும்.

**கே: திட்டமெல்லாம் சரிதான். வயதாகிக் கொண்டே போகிறதே வருத்தமில்லையா?**

**குஷ்பு:** எனக்கு என்ன வயசாயிடுச்சுன்னு நினைக்கிறீங்க? இப்ப எனக்கு 27 வயசு. சுந்தருக்கு 29 வயசு. இதெல்லாம் பெரிய வயசா என்ன? மேரேஜ் பண்ணிக்கிட்டு வாழ எவ்வளவோ காலம் இருக்கு. அதனால் வயசு பத்தி கவலையில்லை.

**கே: இப்படிச் சொல்லிவிட்டு ஸ்ரீதேவிபோல அம்மாவான பிறகு அறிவிப்பு செய்ய மாட்டீர்களே?**

**குஷ்பு:** நிச்சயமா அப்படிச் செய்யமாட்டேன். அவங்க அப்படிச் செய்ததுக்கு எத்தனையோ பிரச்சனைகள் இருக்கலாம். ஆனால் எங்களுக்கு ஃபேமிலி சைடுல எந்தப் பிரச்சனையும் இல்லை.

**கே: திருமணத்தின் பின்னர் நடிப்பீர்களா?**

**குஷ்பு:** நிச்சயமா நடிக்க மாட்டேன். நானே விரும்பினாலும் மாமா (சி.சுந்தர்) விரும்பமாட்டார். மீறி நடிக்கணும்னா டைவோர்ஸ் பேப்பர்ல கையெழுத்துப் போட்டுட்டுத்தான் நடிக்கணும்.

# ராமராஜன் - சுவாதி தயாராகிறார் 'அண்ணன்'

ராமராஜன்-சுவாதி இணைந்து நடிக்கும் படம்- 'அண்ணன்'.

அஜித்குமாருடன் காதலாகி கசிந்துருகிப் பின்னர் குட்பை சொன்னவர் சுவாதி. அதன்பின்னர் வேறு சில இளம் நடிகர்களுடன் நெருக்கமாகப் பேசப்பட்டவர்.

அஜித்குமார் ஏமாற்றியதால் சினிமா உலகைவிட்டே விலகிவிட நினைத்தார் சுவாதி. இளம் இயக்குநர் ஒருவர்தான் தட்டிக்கொடுத்து மீண்டும் நடிக்கவைத்தார்.

தற்போது 'மாப்பிள்ளைக் கவுண்டர்' படத்தில் பிரபுவின் ஜோடியாகவும் நடித்துக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் திரைக்கு வந்த 'செல்வா' படத்தில் விஜய் ஜோடியாக கவர்ச்சியில் தாராளம் காட்டினார். மாப்பிள்ளைக் கவுண்டரில் அதைவிட பல படி மேலே போய்விட்டாராம். குளியல் காட்சி ஒன்றில் கவர்ச்சி அழகுகள் பளிச்சிட நடித்துள்ளார்.

சுவாதியின் சிறப்பு அம்சங்களை அறிந்த ராமராஜன் தனது புதிய படத்தில் அவரை நடிக்க வைத்துள்ளார்.

சுவாதி ராமராஜனுடன் ஜோடி சேர்ந்துள்ள படத்தின் பெயர்: 'அண்ணன்'. கதை, வசனம், இயக்கம்: அனுமோகன். இசை: இளையராஜா.

மணிவண்ணன், ஆர்.சுந்தர்ராஜன், பாண்டு, வடிவுக்கரசி உட்பட பலர் நடிக்கின்றனர்.

காி

ரசிகைகளின்
திண்டாடிக்கொண்டி
ரசிப்பவர்களும் இரு
அஜித்குமார்
என்பது தெரிந்த ச
தெரியாத சமா
வித்தியாசமான
இருக்கிறார்கள்.
யார் அந்த
தாய்க்குலங்கள்தான்
மின் நடிகையின்
உருகிப்போய்விடுகி
நடிகையின் தாய்க்கு
'ராசி'யான பட
படப்பிடிப்பு முடிந்து
மாட்டிக்கொண்டு
வேடிக்கையான கா
'வீட்டுக்கு வாரு
அழைப்பைக் கேட்டு
நடிகைகள் எட்டி ப
அம்பிக நடிகை
ரஞ்சித நடிகையு
இருக்கின்றனராம்.
கொடுப்பதாக இரு
யால் வாய்ப்புப் பறி
தன்னைப் போட்டிரு

❖❖❖ 'அ

விக்னேஷ் கத
சூட்டப்பட்டுள்ள
விக்னேஷ் ஜோட
மற்றொரு நாயகி
நடிக்கிறார். திரைக்க
பாடல்கள்: வாலி.
வடிவேலு, விசி
விஜூச்சக்கரவர்த்தி,
ஜெயந்த் ஆகியோரு
விக்னேஷ் புதி
பல படங்களில்
இரண்டு ஜோடிகள்.
பள்ளி', 'காதலி', 'ஆள
தாமரை' மூன்றிலும்
இரண்டு ஜோடி
கள்தான்.

★



குஷ்பு
படம்: கோபாலா கோபாலா




அஞ்சு அரவிந்த்
படம்-காங்கேயம் காளை

# ரஜினிக்கு விக்?

'அருணாச்சலம்' படத்தில் ரஜினி விக் அணிந்து நடிப்பதாக தமிழக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தலையில் 'விக்' வைத்து நடிப்பது என்றால் ரஜினிக்கு அலர்ஜி. டென்ஷன் ஆகிவிடுவார். அதனால் ஜூலியஸ் சீசர், கிருஷ்ண தேவராயர் வேடங்களில் நடித்தபோதும் 'விக்' அணியாமல் நடித்தார்.

ஆனால் இப்போது தன் முடிவை சற்றுத் தளர்த்தி விட்டார். அவரது தலைமுடியைப் போன்ற 'விக்'கை அயல் நாட்டில் இருந்து தருவித்துள்ளனர். அதை அணிந்துதான் நடிக்கிறார். பார்வைக்கு ரஜினியின் ஒரிஜினல் முடிபோலவே இருக்கும்" என்று செய்தி வெளியாகி உள்ளது.

# சண்முகி தோல்வி

தமிழில் சூப்பர் ஹிட்டான படம் கமலின் 'அவ்வை சண்முகி'. தெலுங்கில் 'பாமா சத்யபாமா' என்ற பெயரில் மொழி மாற்றி வெளியிட்டனர். ஆனால் படம் படு தோல்வி. காரணம் என்ன தெரியுமா? 'மிஸ்ஸஸ் டவுட் ஃபயர்' படத்தின் தழுவல்தானே அவ்வை சண்முகி. தெலுங்கில் சில வருடங்களுக்கு முன்னரே 'மிஸ்ஸஸ் டவுட் ஃபயரைத் தழுவி 'மேடம்' என்றொரு படம் வெளியாகி விட்டது. அதுதான் சண்முகி அங்கே சறுக்கிவிட்டதாம்.

# தாமதம்

பொங்கலுக்கு வருவதாக இருந்த 'அரவிந்தன்' படம் திடீரென்று தடைப்பட்டு விட்டது. பாடல் காட்சிகளையெல்லாம் பத்திரிகையாளர்களுக்கு போட்டுக் காண்பித்தனர். படமும் ரெடியாக இருந்தது.

ஆனால் தயாரிப்பாளருக்கும் இயக்குநருக்கும் ஏற்பட்ட பிரச்சனையால் படம் வெளியாக முடியாமல் முடங்கிக் கிடக்கிறது.

பாவம் நக்மா. சரத்குமாருக்காக உருகி உருகி நடித்தும் படம் வெளியாகத் தாமதமாகிறதே என்று வருந்திக்கொண்டிருக்கிறார்.



நகமா
படம் அரவிந்தன்

# மினி சினி

* இந்தியில் அமிதாப்பச்சனுடன் 'ஆஜ்கா அர்ஜுன்' என்ற படத்தில் இணைந்து நடித்துள்ள ராதிகா, மீண்டும் அமிதாப்பச்சனுடன் 'லால் பாட்ஷா' என்ற படத்தில் இணைந்து நடிக்கவுள்ளார்.

* செல்வா இயக்கத்தில் அர்ஜுனுக்கு ஜோடியாக 'தெனாலிராஜா' படத்தில் ரவீனா டான்டன் நடிப்பதாக இருந்தது. ஆனால் இப்போது ரவீனாவுக்குப் பதிலாக சிம்ரான் நடிக்கவிருக்கிறார்.

* லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்த 'கோகுலத்தில் சீதை' படத்தில் நடித்த கார்த்திக், மீண்டும் இந்த நிறுவனம் தயாரிக்கும் படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* 'மனசு' படத்தை இயக்கியுள்ள ஒளிப்பதிவாளர் அப்துல் ரகுமான் இப்போது, மூன்று படங்களுக்கு ஒளிப்பதிவு செய்து வருகிறார். விரைவில் இவர் புதிய படமொன்றை இயக்கவுள்ளார்.

* மலையாளத்தில் முகேஷும், ஷோபனாவும் சுமார் 15 வருடங்களாக நடித்து வருகின்றார்கள். எனினும் இருவரும் இதுவரை ஜோடியாக ஒரு படமும் நடிக்கவில்லை. முதன் முறையாக இருவரும் புதிய படமொன்றில் இணைகின்றனர்.

* கே.பாலச்சந்தர் தயாரிக்கும் 'காதல் மன்னன்' படத்தில் நடிகராக அறிமுகமாகும் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன், இதைத் தொடர்ந்து 'பாசம்' படத்திலும் முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கிறார்.

* பாரதிராஜாவின் 'சிறகுகள் முறிவதில்லை' படத்தில் கதாநாயகிகளைத் தொடர்ந்து வில்லனையும் மாற்றிவிட்டார்கள். முதலில் வில்லனாக நடிப்பதாக இருந்த பிரகாஷ்ராஜிற்குப் பதிலாக தற்போது பொன் வண்ணன் நடிக்கிறார்.

* காதல் அவசியமா? இல்லையா? என்பதை மையமாக வைத்து உருவாகும் படம் 'மாணவ மாணவிகளே'. சிற்பி இசையமைக்கும் இப்படத்தை நர்மதராஜன் என்பவர் இயக்குகின்றார்.

* தமிழில் பிஸியாக நடித்து வரும் ஊர்வசி, சிறிதுகால இடைவெளிக்குப் பின்னர் புதிய மலையாளப்படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். படத்தின் பெயர்-'ஜனாதிபத்யம்'.

* பாண்டியராஜன்-குஷ்பு நடித்து வெற்றிகரமாக ஓடிய 'கோபாலா கோபாலா' படத்தை இதேபெயரில் தெலுங்கிலும் மொழிமாற்றி வெளியிடவிருக்கிறார்கள்.

# மகன் அங்கே

பாரதிராஜா பல நடிகர் நடிகைகளுக்கு கற்றுக் கொடுத்த வாத்தியார். அவரது மகன் மனோஜ் கதாநாயகனாகப் போகிறார் அல்லவா. மகனுக்கு நடிப்புப் பயிற்சி கொடுக்க அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்துள்ளார் பாரதிராஜா. மகன் என்பதால் வாத்தியாராக இருக்க விரும்பவில்லையாம் பாரதிராஜா.



பாண்டியராஜன்-ஜெயராகினி
படம் நல்ல மனசுக்காரன்



www.padippakam.com
படிப்பகம்

## ...தோடு சொல்லுகிறோம்

### ...வித்தியாசமான ரசிகைகள்

...தொல்லை தாங்க முடியாமல் இளம் நடிகர்கள் ...ருக்கிறார்கள். சுவாரசியமான தொல்லை என்று ...க்கிறார்கள்

...பண் ரசிகைகளின் மனம் கவர்ந்த நாயகன் ...மாச்சாரம்தான்.

...ச்சாரமும் ஒன்று இருக்கிறது. சமீபகாலமாக ...சிகைகள் சிலர் அஜித்குமாரை நெருங்கி

...ரசிகைகள்? சில முன்னணி நடிகைகளின் ... அந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் ... தாய்க்குலம்தானாம். அஜித்குமார் என்றால் ...ாராம். இதனை எப்படியோ அறிந்துவிட்ட ரம்ப ...லமும் அஜித் ரசிகையாகி விட்டாராம்.

...தில் அஜித் ஜோடியாக ரம்ப நடிகை நடிக்கிறார். ...திரும்பும் அஜித் ரம்ப நடிகையின் தாய்க்குலத்திடம் ...முழிப்பதுதான் படப்பிடிப்புக் குழுவினருக்கு ...ட்சியாம்.

...ங்கள்' என்று தாய்க்குலங்கள் விடுக்கும் அன்பான ... கதிகலங்கிப் போயிருக்கிறாராம் அஜித்குமார். ...ாய்ந்தால் தாய்க்குலம் பதினாறடி பாய்கிறார்கள். ...க்கு வாய்ப்புக் கொடுத்த சத்யமான நடிகர் மீது ...ம், பா-பிரிய நடிகையும் வருத்தத்தில் ...பா-பிரிய நடிகைக்குத்தான் முதலில் வாய்ப்புக் ...ந்ததாம். அம்பிகமானவரின் அயராத முயற்சி ...போய்விட்டதாம். ரம்பமான நடிகைக்கு பதிலாக ...க்கலாம் என்பது ரஞ்சித நடிகையின் வருத்தமாம்.

## மந்த்ராவின் மந்திரம்

மந்த்ரா கதாநாயகியாக நடித்த படங்கள் எல்லாம் பெட்டிக்குள் சுருண்டு விட்டன. அப்படியிருந்தும் மந்த்ராவுக்கு வாய்ப்புக்கள் குவிகின்றன. ஒரு படம் தோல்வி கண்டாலே போதும். ராசியில்லாத நடிகை என்று ஓரம் கட்டிவிடுவார்கள். ஆனால் மந்த்ரா விஷயத்தில் நேர்மாறாக இருக்கிறது.

மந்த்ராவின் மந்திரம்தான் ஹீரோக்களையும், இயக்குநர்களையும் அவரை நாடச் செய்கிறதாம்.

இதற்கிடையே மந்த்ரா உடல் வளர்ச்சியைக் குறைக்க பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டதாக செய்தி பரவியுள்ளது. மந்த்ரா அதை மறுத்துள்ளார்.

"மும்பை நடிகைகள் காட்டாத கவர்ச்சியையா நான் காட்டுகிறேன். இயற்கையாகவே என் உடல் வளர்ச்சி அப்படி. அதற்காக நான் ஏன் பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்போகிறேன். பட வாய்ப்புக்காக இணைந்து நடிக்கிற நடிகர்களுடன் நான் நெருக்கமாகப் பழகுவதாகவும் கதை கட்டி விடுகிறார்கள். அதெல்லாம் உண்மையல்ல" என்று வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார் மந்த்ரா.

## 'அட்ரா சக்கை'

படங்களுக்கு சூட்டப்படும் பெயர்கள் ஒரு தினுசாக இருப்பதுதான் தற்போதைய பாஷன். பாண்டியராஜன் சங்கீதா இருவரும் ஜோடியாக நடிக்கும் புதிய படத்தின் பெயர்: 'அட்ராசக்கை'.

கதை, திரைக்கதை இயக்கம்: வி.சி.குகநாதன். இசை: சிற்பி. பாடல்கள்: பழனிபாரதி.

மணிவண்ணன், வடிவேலு, விவேக் ஆகியோரும் நடிக்கின்றனர். சித்திரைப் புத்தாண்டுதினத்தில் வெளியிடுவதற்காக படப்பிடிப்பு வேகமாக நடந்துவருகிறது.

## துர்க்கா பூஜை

காதல் கதைகளுக்கு மவுசு ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையிலும் பக்திப் படம் ஒன்று தயாராகிறது. படத்திற்கு 'துர்க்கா பூஜை' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

'கல்கி' படநாயகி சுருதி கதாநாயகியாக நடிக்கிறார். மற்றொரு நாயகி வினாய் பிரசாத். இவர் முன்னர் 'தாய்குலமே தாய்க்குலமே' படத்தில் நடித்தவர். கதை-வசனம், இயக்கம் ஜெகதீசன். இசை: குன்னக்குடி வைத்தியநாதன்.



ரூபஸ்ரீ

## ...ளான தாமரை

...நாயகனாக நடிக்கும் படம் ஒன்றுக்குச் ...பயர்: 'ஆளான தாமரை'.

...டியாக புதுமுகம் சகுந்தலா நடிக்கிறார். ...ாக சுப்ரஜா என்னும் புதுமுகம் ...தை-வசனம், இயக்கம் சி.ஆர்.மணி. ...இசை: தேவா.

...த்ரா, காந்திமதி, கவிதா, ...னகராஜ் மற்றும் சின்னி ...ம் நடிக்கின்றனர். ...ாக நடிக்கும் ... அவருக்கு ...'காதல் ...ன

## ரூபஸ்ரீயின் ஏமாற்றம்

கதாநாயகியாகும் கனவோடு வந்தவர் ரூபஸ்ரீ. கட்டான உடல்வாகு இருந்தும் ஹிட்டான வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லையே என்று வருந்துகிறார்.

'ஜானகிராமன்' படத்தில் சரத்குமாரின் முறைப் பெண்ணாக நடித்துக் கொண்டிருக்கிறார். ரூபஸ்ரீயின் துடிப்பான நடிப்பைப் பார்த்து சரத்குமாரே வியந்து பாராட்டினாராம்.

'இனிமேலும் கதாநாயகியாக நடிக்கலாம் என்ற நம்பிக்கை கிடையாது. கிடைக்கும் பாத்திரத்தில் நன்றாக நடித்தால் போதும்' என்கிறார் ரூபஸ்ரீ.

கதாநாயகியாக சான்ஸ் தருவதாகக் கூறிய பல இயக்குநர்களிடம் எக்கச்சக்கமாக ஏமாந்து போனாராம்.



கார்த்திக்-ரோஷினி
படம் சிஷ்யா

## விக்னேஷ்-தேவயானி புதியபடம் 'காதலி'

விக்னேஷ்-அம்ரிதா நடித்து சமீபத்தில் வெளியாகிய படம் 'டேக் இட் ஈஸி ஊர்வசி' படம் வந்த வேகத்தில் திரும்பி ஓடிவிட்டது.

விக்னேஷ் நீண்டகாலமாக நடித்துக் கொண்டிருக்கிறார். எனினும் இதுவரை சூப்பர் ஹிட்டான படம் எதுவும் அவருக்கு அமையவில்லை.

பாலுமகேந்திரா இயக்கத்தில் 'ராமன் அப்துல்லா' மற்றும் 'வாணிமஹால்', 'ஆளானதாமரை', 'காதல்பள்ளி' உட்பட பல படங்கள் கைவசம் இருக்கின்றன. வெற்றிப்பட ஹீரோ என்று பெயர் எடுக்காவிட்டாலும் புதிய பட வாய்ப்புக்கள் அவரைத் தேடிச் செல்கின்றன.

சமீபத்தில் மற்றொரு அசத்தலான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இரண்டு கதாநாயகிகளுடன் நடிக்கப் போகிறார். படத்தின் பெயர்: 'காதலி'. தேவயாணி, மும்பாய் அழகி திவ்யா ஆகியோர் ஜோடிகளாக நடிக்கின்றனர்.

'காதலி' படத்தை புதிய இயக்குநர் சித்து இயக்கப்போகிறார். இசை: தேவா. பாடல்கள்: பழனிபாரதி. வடிவேலு, சின்னிஜெயந்த், வினுச்சக்கரவர்த்தி, ஆர்.சுந்தர்ராஜன், ஜெயசித்ரா, கவிதா ஆகியோரும் நடிக்கின்றனர்.



## சினி விசிட்

### சினிமா விமர்சனம்

படம்-ஹிட்லர்
ஹீரோ-மம்முட்டி
ஹீரோயின்-ஷோபனா

மலையாளத்தில் இருந்து மொழி மாற்றப்பட்ட படம்தான். ஆனால் கச்சிதமான மொழிமாற்றம். சமீபகாலமாக வெளியாக தமிழ்ப் படங்களை ஹிட்லர் தூக்கிச் சாப்பிட்டுவிட்டது. அந்தமாதிரி தூள் கிளப்பியிருக்கிறது படம்.


சிரித்து சிரித்து வயிறு புண்ணாகிவிடுகிறது. படம் ஆரம்பித்ததில் இருந்து முடியும் வரை செம விறு விறுப்பு.

மம்முட்டிக்கு ஐந்து சகோதரிகள். அத்தனைபேரிலும் கொள்ளைப் பிரியம். ரோட் சைட் ரோமியோக்கள் மம்முட்டியின் சகோதரிகளுக்கு வலை வீசுவதும், மம்முட்டியிடம் வாங்கிக் கட்டுவதும் ஒரே கல கலரகம்.

மம்முட்டியின் தந்தையாக வருபவரும் அசத்தல்தான். பாத்திரங்களோடு ஒத்துப் போகக்கூடிய நடிகர்களைத்தான் தெரிவு செய்து போட்டுள்ளார்கள்.

மம்முட்டியின் காதலியாக ஷோபனா வருகிறார். வாணி விசுவநாத் மம்முட்டியின் தங்கைகளில் ஒருவராக வருகிறார்.

மம்முட்டியின் நடிப்பு இயல்பாக அமைந்து அசத்தோ அசத்தென்று அசத்துகிறது. குடும்பத்துடன் அமர்ந்து ரசிக்கக்கூடிய நிறைவான படம். நம்நாட்டில் வீடியோவில் வந்திருக்கிறது. நம்பிப் பார்க்கலாம். ஹிட்லர் ஏமாற்றமாட்டார்.



மம்முட்டி
படம்: அரசியல்

## ரம்பா சீஸன்

ரம்பாவுக்கு மவுசு ஏற்பட்டுவிட்டதால் ரம்பா தெலுங்கில் நடித்த படங்களையெல்லாம் மகா வேகத்தில் மொழி மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

'பம்பாயில் ரம்பா', 'கோவாவில் ரம்பா', 'ரம்பா என் காதலி' என்று பெயர்களை வைத்து வெளியிடப் போகிறார்கள். அந்தப் பட்டியலில் ஒன்பது படங்கள் வரப்போகின்றன. அவற்றில் சில படங்களில் ரம்பா ஒரு சில காட்சிகளில்தான் முகம் காட்டியிருக்கிறாராம். ரசிகர்கள் ஏமாறப்போகிறார்கள்.

## இரண்டுநாள் விரதம்

'இருவர்' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடியுள்ளார் மதுபாலா. அவரது உடல் அழகை மறக்காத மணிரத்னம் விரும்பி அழைத்து சான்ஸ் கொடுத்தாராம்.

மதுபாலாவின் உடல் அழகுக்கு என்ன காரணம்? "உடற்பயிற்சியெல்லாம் செய்ய மாட்டேன். நன்றாக மூக்கு முட்டச் சாப்பிடுவேன். ஆனால் வாரத்தில் இரண்டு நாட்கள் கண்டிப்பாக விரதம் இருந்துவிடுவேன். அதுதான் அழகின் இரகசியம்" என்கிறார் மதுபாலா.

## மாப்பிள்ளை ரெடி

நாற்பது நாட்களுக்குள் பிரபு நடித்துள்ள 'மாப்பிள்ளைக் கவுண்டர்' படத்தை சுட்டு முடித்துவிட்டார்கள். சூடாக தயார் நிலையில் இருக்கிறது படம். சூட்டை மேலும் அதிகரிக்க சாக்ஷியும், சுவாதியும் போட்டி போட்டு கவர்ச்சி விருந்து படைத்திருக்கிறார்களாம்.

சாக்ஷியையும், சுவாதியையும் கவர்ச்சியில் நனைத்தெடுத்துள்ள இயக்குநர் பிரபுவை நகைச்சுவையில் நனைத்து எடுத்துள்ளாராம். விரைவில் திரைக்கு வருகிறது.

## ஹிட் பாடல்கள்

'சூரியவம்சம்' படத்தில் இரண்டு சரத்குமார்கள். ஒருவர் அடிதடி சரத்குமார். இன்னொருவர் அமைதியான சரத்குமார்.

எஸ்.ஏ.ராஜ்குமார் இசையில் எட்டுப் பாடல்கள் பதிவாகியுள்ளன. எட்டும் ஹிட்டாகக்கூடிய பாடல்களாம். இயக்குநர் விக்கிரமனும் ராஜ்குமாரும் இணைந்த படங்களின் பாடல்கள் முன்னரும் ஹிட்டாகியுள்ளன.

'புது வசந்தம்', 'பூவே உனக்காக' இரண்டும் விக்கிரமன் இயக்கத்தில் ஹிட்டான படங்கள். இரண்டுக்கும் இசை ராஜ்குமார்தான். இப்போது சூரிய வம்சத்திலும் அதே கூட்டணி இணைந்துள்ளது.

| முகப்பில் | |
|---|---|
| | சத்யராஜ்–மீனா<br>படம்:–'வள்ளல்' |
| | யுவராணி<br>படம்:–சக்தி |



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# காதலில் வெற்றிபெற சில வழிகள்



காதலர்களே...! காதலில் வெற்றிபெற சில அரிய குறிப்புக்கள். இதன்படி நடந்தால் காதலில் வெற்றி நிச்சயம்.

* காதலிக்கு முதல் கடிதம் எழுத சிறந்த நேரம் பௌர்ணமி நடுநிசி.
* காதல் கடிதம் எழுதியவுடன் காதல் கடிதத்தின் கீழே மூன்று குறுக்குக் கோடுகள் போட வேண்டும். மூன்று மட்டும்தான். அதற்கு மேல் கூடாது.
* காதல் கடிதம் எழுதி, அதைக் காதலிக்கு, தபாலிலோ, நேரில் சேர்க்கும் பொழுதோ எதிரில் சண்டை, கலகம் ஏதேனும் நடந்தால் கடிதத்தை அனுப்பக்கூடாது.
* காதலர்கள் முதன் முதலில் நேரில் சந்திக்கவேண்டிய இடங்கள்: மலைப்பகுதி, அருவி, ஆறு, குளம் போன்ற நீர் நிலைகள் இருக்கும் இடங்கள்.
* முதலில் சந்திக்கப் போகும்போது நீலக்கலர் உடை அணிய வேண்டும். காதலுக்கு நீலக்கலர் இராசியானது. வளர்பிறையில் சந்திக்க வேண்டும்.
* வெள்ளிக்கிழமை காதலுக்கு மிகவும் நல்லநாள். காரணம்- அது சுக்கிரனுடைய கிழமை. காதலுக்கு அதிபதி சுக்கிரன். எனவே காதலில் வெற்றி பெற சுக்கிரனை வணங்கவேண்டும்.
* காதலர்கள் தங்கள் முதல் சந்திப்பை பௌர்ணமி அன்று வைத்துக்கொள்ள வேண்டும்.
* காதலர்கள் ஒரு நாணயத்தை இரண்டாக உடைத்து, இருவரும் சரிபாதியாக வைத்துக்கொண்டால், காதல் இனிமையான முறையில் தொடரும்.
* பெப்ரவரி 14ம் திகதி காதலர்கள் தினம். அன்று, முதன்முதலில் காதலைத் தெரிவித்தால், அந்தக் காதல் வெற்றி பெறும். அன்று ஒருவருக்கொருவா பரிசு வழங்கிக் கொள்ள வேண்டும். (இம்முறை தவற விட்டவர்கள் அடுத்த பெப்ரவரி-14 வரை காத்திருக்கவும்.)
* நேர்நோக்கு நாள், வளர்பிறை நாட்களில் முதல் காதல் கடிதத்தை எழுதவோ, அனுப்பவோ வேண்டும்.
* நல்ல சகுனத்தைப் பார்த்துக் காதல் கடிதத்தை அனுப்ப வேண்டும்.
* காதலர்கள் எந்தக்காரணத்தைக் கொண்டும் பேனாவைப் பரிசாகக் கொடுக்கக்கூடாது. பேனாவைப் பரிசாகக் கொடுத்தால் பிரிவு ஏற்படும்.
* காதலர்கள் ஜோடியாக உலவும்போது, எதிரே கறுப்புப் பூனை வந்தால் உங்கள் காதல் நிச்சயம் வெற்றிபெறும். காதல் பலம் பெற்று விரைவில் திருமணம் நடக்கும்.
* காதலர்கள் மாடிப்படிகளில் நின்று கட்டித் தழுவக்கூடாது. பிரிவு ஏற்படும்.
* காதலர்கள் திருமணத்திற்கு முன்பு மோதிரம் மாற்றிக்கொள்ளக்கூடாது. இது காதலைப் பிரிக்கும். தீமை ஏற்படும்.
* பௌர்ணமி அன்று இரவு காதலர்கள் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்த்தால் காதலர்களுக்குள் ஊடல், சண்டை ஏற்படும்.
* காதல் கடிதத்தைக் கறுப்பு மை கொண்டு எழுதக்கூடாது. காதலி அல்லது காதலன் பெயரைக்கூட கறுப்பு மையில் எழுதக் கூடாது.
* காதலைத் தெரிவிக்க சிவப்பு ஒற்றை ரோஜா கொடுக்க வேண்டும்.

மேலே சொன்ன காதல் சாஸ்திரங்களைக் கடைப்பிடித்து காதலில் வெற்றி பெற வாழ்த்துக்கள். வெற்றிபெற முடியாதவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## ஐந்தில் வளைந்தால் தான்...!



குழந்தைகள் திறமை மிகுந்து காணப்படுகின்றனரா? இதனைக் கீழ்க்கண்ட பண்புகள் மூலம் அறிந்து கொள்ளலாம். இக்குணங்கள் குழந்தைகளிடம் காணப்பட்டால் அவற்றை மென்மேலும் ஊக்குவித்து, மிகச் சிறந்த அறிவுள்ளவர்களாக வளர்க்க முற்படவேண்டும்.

1. நுண்ணறிவு அதிகம் இருக்கும்.
2. எளிதாகவும், விரைவாகவும் எதையும் கற்றுக் கொள்கின்றனர்.
3. சிரமமின்றியும் அதிகப் பயிற்சி இன்றியும் அவர்களால் கற்றதை நினைவில் நிறுத்திக் கொள்ள முடியும்.
4. புதியவைகளை ஆராய்வதிலும், கற்றுக் கொள்வதிலும் துடிப்பு உள்ளது.
5. சுயசிந்தனை, வெளிப்பாடு, புதிய சொற்களை அறிந்துகொள்ளும் ஆர்வம் காணப்படும்.
6. படிப்பதில் ஆர்வமும், ஈடுபாடும் ஒரு முதிர்ந்த நிலையும் காணப்படும்.
7. அகராதி, பொது அறிவுகளை அறிவதில் துடிப்பு.
8. எண்ண ஓட்டம், தெளிவான சிந்தனை, ஆய்வு மனப்பான்மை கொண்டிருப்பர்.
9. பொதுமைப்படுத்துவதும், தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு சிந்தனை செய்வதும், அவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்வதிலும் ஆர்வம் இருக்கும்.
10. ஒத்த வயதுக் குழந்தைகளுக்குத் தெரியாத விஷயங்களை அறிந்திருப்பதும், அவற்றைப் பாராட்டுதலும் இயல்பாக அமையும்.
11. ஈடுபாடும், மனிதர்களிடம் ஆர்வமும், மரியாதையும் காணப்படும்.
12. பெரியவர்களோடும், மூத்த குழந்தைகளோடும் பழகவும் விரும்பும்.
13. நகைச்சுவை உணர்வும், பிறரை விடச் சிறந்து விளங்க வேண்டும் என்ற துடிப்பும் காணப்படும்.

# பாலும் பயனும்



புதிய புதிய மருந்துகள் கண்டுபிடிக்க, கண்டுபிடிக்க புதிய நோய்களும் வருகின்றன. முற்காலத்து மனிதன் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து வந்தான். நோய்தீர்க்கும் பொருட்கள் எவ்வாறு நோயைக் குணப்படுத்துகின்றன என்பதை 'வர்ம சூத்திரம்' என்ற நூல் வழிகாட்டுகின்றது. அதில் சில வகைப் பால்கள் தரும் நலன்கள் என்ன என்பதைக் கூறியுள்ளது.

**பசுவின் பால்:**
புண், சூலை, வெள்ளை, வலுவின்மை, மெலிவு ஆகியவற்றைப் போக்குகின்றது.

**வெள்ளாட்டுப்பால்:**
வாத பித்தம், உயிர்ப்பு நோய், சளி, சீதபேதி, வாதவீக்கம் போன்றவற்றை நீக்கிப் பசியை ஏற்படுத்தும்.

**செம்மறியாட்டுப் பால்:**
இது சிலேத்தும நோய், பித்தநோய், வயிற்றுப் பொருமல் ஆகியவற்றைக் குணப்படுத்தும்.

**ஒட்டகப்பால்:**
இது பசி மந்தம், வாத சூலை, பலவகைக் கரப்பான், இருமல், இளைப்பு ஆகியவற்றைக் குணப்படுத்தும். உடலுக்கு வலுவைக் கொடுக்கும்.

**எருமைப்பால்:**
திமிர்வாதம் ஏற்படுத்தும். அறிவுக் கூர்மையைக் குறைக்கும். மந்தகுணம் ஏற்படும்.

# கையளவு மனசு மலையளவு சுமை



உள அழுத்தம் பொதுவாக நம் ஒவ்வொருவருக்கும் இருக்கவே செய்யும். அழுத்தத்தினால்தான் நாம் செயற்படுகிறோம். எதற்கும் ஊக்கம் தருவதும் அழுத்தம்தான். ஆனால் அதே உள அழுத்தம் குறிப்பிட்ட எல்லையைத் தாண்டும்போது பலதரப்பட்ட பிரச்சனைகளைக் கொண்டு வந்துவிடும்.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் இருதயக் கோளாறுகள் ஏற்படவும் உள அழுத்தம் வழிவகுத்துவிடும், என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அழுத்தத்தினால் ஏற்படும் நோய்களையும் அவற்றை நிவர்த்தி செய்ய சுலபமான மார்க்கங்களையும் உளவியல் நிபுணரான டாக்டர் ஸ்வாதி பிராமல் கூறுகிறார்:

### அழுத்தம் என்றால் என்ன?

ஒவ்வொருவரையும் உடல் ரீதியான பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்க அழுத்தம் உறுதுணைபுரிகிறது. ஏதாவது ஒருவகையில் நாம் அச்சமூட்டப்பட நேர்ந்தால் அதற்கான எதிர்ப்பை எமது உடல் பெற்றுக்கொள்ளத் தூண்டப்படுகிறது. எமது மூளையுடன் தொடர்புடைய சில சுரப்பிகள் 'அட்ரநேலின்' போன்ற ஹோமோன்களைச் சுரக்கின்றன. இதனால் எமது நரம்பு மண்டலம் தூண்டப்படுகிறது; தசைகள் துடிக்கின்றன; இருதயத் துடிப்பு வேகமடைந்து, இரத்த நாளங்கள் இறுக்கமடைந்து குருதியின் சீனிச்சத்து அதிகரிக்கிறது.

சுயமரியாதை பாதிப்படையும்போது, பாதுகாப்பைப் பற்றிய சிந்தனை தூண்டப்படும்போது, செய்யும் தொழிலில் காலக்கெடுவுக்குள் கடமை முடிவடையாதபோது, போக்குவரத்து நெரிசலின்போது- இக்கால கட்டங்களின்போதுதான் அழுத்தத்தின் தாக்கம் ஏற்படுகிறது.

சிலருக்கு சில சந்தர்ப்பங்களில் அழுத்தத்தின் தாக்கம் வெளிப்படையாகத் தோன்றுவதில்லை. இருப்பினும், இதனால் உடல் நலக்கேடு விளைந்துவிடப் போவதில்லை என்று கருதிவிடமுடியாது.

நீங்கள் விரும்பும் ஒரு தொழிலில் நீங்கள் மனப்பூர்வமாக ஈடுபட்டு அதில் வெற்றிபெற வேண்டும் என்ற வேகத்துடன் ஈடுபடும்போது ஏற்படும் அழுத்தம் பாதிப்பினை ஏற்படுத்தப்போவதில்லை. மாறாக ஆரோக்கியமான நிலையினையே தரும்.

ஒருவருக்கு அழுத்தம் தரும் ஒரு சம்பவம் மற்றொருவருக்குப் பெரும் பாதிப்பைத் தராதிருக்கலாம். உங்களை நீங்கள் கட்டுப்படுத்தவும் உங்களுடைய எல்லைகளை நிர்ணயித்து சீராக நிறைவேற்றவும் தெரிந்திருந்தால் சிக்கல் ஏற்படப்போவதில்லை. ஆனால் இதிலும் உங்கள் கவனம் மேலதிகமாக ஈர்க்கப்படும் பட்சத்தில் அதுவே பாதிப்பினை ஏற்படுத்தி விடவும் கூடும்.

### அழுத்தத்தை அகற்றும் வழிகள்

அழுத்தத்தின் பாதிப்புகளை சாதாரணமாக எவராலும் கண்டுபிடித்து விட முடியாது. தலைவலி, வயிற்றுவலி, இடுப்புப் பிடிப்பு போன்றவை அழுத்தம் காரணமாக அல்லாமல் வேறுபல காரணங்களினாலும் ஏற்படக் கூடும் என்பதனால், உங்களுக்குச் சந்தேகம் ஏற்படும்போது உங்கள் மருத்துவரைக் கலந்தாலோசிப்பதே நல்லது.

அழுத்தம் காரணமாகவே பாதிப்பு ஏற்படுகிறது என்பதனை அறிந்தால், புகை பிடித்தல், மது உண்ணல், போதை வஸ்துக்கள் பாவித்தல் போன்ற பழக்கங்களைப் படிப்படியாக நிறுத்திவிட வேண்டும். தேனீர், காப்பி போன்றவற்றையும் நிறுத்திவிடவேண்டும். அடிக்கடி கண்டது கடியதான உணவுகளை உண்பதை விட்டுவிட வேண்டும்.

அழுத்தம் எனும் கொடியவனுடன் போரிட நம்பகமான ஆயுதங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

* தியானம் மற்றும் யோகாசனப் பயிற்சிகள் உடனடிப் பயன் அளிக்கவல்லன.
* சிறு தேகப்பயிற்சிகளைத் தொடர்வதன் மூலம் நரம்பு மற்றும் இரத்த நாளங்களிலுள்ள இறுக்கங்கள், சுருக்கங்கள் அகல வகை செய்யும். அத்துடன் சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்படையவும் உதவும்.
* உளவள ஆற்றுப்படுத்தல் போன்ற மனோதத்துவ ரீதியான சிகிச்சை மூலம் அழுத்தச் சுமையை அகற்றி உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்கலாம். பொறுமை உணர்வினைத் தூண்டக்கூடிய சாதனங்களின் உதவியை நாடலாம்.

**உதாரணம்:**
நல்ல நண்பர்களுடன் இணைந்து மகிழ்வுதரும் உரையாடல்களில் ஈடுபடுதல், சிறு சிறு விளையாட்டுக்களில் கலந்து கொள்ளுதல், கவலைகளை மறக்கக்கூடிய வேறு சாதனங்களுடன் தொடர்பு கொள்ளுதல் (திரைப்படம், தொலைக்காட்சி ஆகியவைகூட உதவலாம்), ஆலயவழிபாடு, யாத்திரை, இடம்மாறி இருத்தல் போன்றவை மனச்சுமையை நீக்க உதவக்கூடும்.

வேலைக்கும் ஓய்வுக்கும் தகுந்த சமநிலை அவசியம். நமது மனம் இறுகிய கயிற்றைப் போன்றது. இறுக்கம் அதிகரித்து அக்கயிறு அறுந்துவிடாமல் பார்த்துக் கொள்வதே இன்றியமையாததாகும்.

# குடும்ப நேரம்



* பொருளீட்டும் நேரம் போக மிஞ்சும் நேரத்தில் ஒரு பகுதியைக் குடும்ப உறுப்பினர்களுடன் செலவிட்டுப் பாசப் பிணைப்பை வளர்த்துக்கொள்ளுங்கள்.
* புதிதாக ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் முன்னர் குடும்பத்தினரைக் கலந்து ஆலோசியுங்கள். மனம் விட்டுப் பேசச் சொல்லுங்கள்.
* குடும்பத்தினர் அனைவருக்கும் அவரவர் வயதுக்கேற்ப பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்து, அவர்களிடம் தன்னம்பிக்கையை வளரச் செய்யுங்கள்.
* குடும்பத்தினரின் சிறு சிறு வெற்றிகளைத் தட்டிக் கொடுங்கள்.
* பிள்ளைகளின் படிப்பில் அக்கறை செலுத்தி அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
* நல்ல பழக்க வழக்கங்களைக் கையாண்டு பிறருக்கு முன்மாதிரியாக விளங்குங்கள்.

# வலன்டைன் டே என்றால் என்ன?



பெப்ரவரி-14 என்றால் காதலர் தினம் என்று எல்லோருக்கும் தெரியும். ஏன் பெப்ரவரி-14ல் காதலர் தினம் கொண்டாடுகிறார்கள் தெரியுமா?

சென்ட் வலன்டைன் என்ற துறவியின் நினைவாகத்தான் கொண்டாடுகின்றனர். சென்ட் வலன்டைன் துறவிக்கும் காதலுக்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா?

சென்ட் வலன்டைன் ஒரு பாதிரியார். இவர் வெகுகாலத்திற்கு முன் ரோம் நாட்டில்- இரண்டாம் கிளோடியஸ் என்பவருடைய காலத்தில் வாழ்ந்தார். மன்னன் கிளோடியஸ் தன் படையில் இருந்த போர் வீரர்கள் திருமணம் செய்து கொண்டால், தங்கள் வேலையில் அக்கறை செலுத்த மாட்டார்கள் என்று எண்ணி, அவர்களைத் திருமணம் செய்ய அனுமதி அளிக்க மாட்டார். ஆனால் வலன்டைன் அவர்களுக்கு இரகசியமாகத் திருமணம் செய்துவைத்தா.

இதற்காக அவரை, மனனன் சிறையில் அடைத்தார். அங்கே வலன்டைன், சிறையதிகாரியின் மகளைக் காதலித்தார். அவருக்கு மரண தண்டனை அளித்த நாளில், தன் காதலிக்குச் சிறு கடிதம் எழுதி, 'உன் வலன்டைன்' என்று கையழுத்திட்டார்.

அந்தநாளே இன்று 'வலன்டைன் டே' என்று கொண்டாடப்பட்டு வருகிறது.

# கடைக்குப் போகலாம் வாங்க

வீட்டுக்குத் தேவையான பொருட்களை நாம் கடைகளில் வாங்கும்போது சில விஷயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

* முதலில் என்ன பொருட்கள் தேவை என்று பட்டியல்போட வேண்டும். அந்தப் பட்டியலில் மிக முக்கியமானவற்றைப் பரிசீலித்து, தேவையற்றவைகளை அகற்றலாம்.
* பொருட்களை ஒரே கடையில் தொடர்ந்து வாங்குதல் நல்லது.
* சில பொருட்களின் உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதிகளைப் பார்க்க வேண்டும்.
* பொருட்கள் வாங்கியதற்கான ரசீதைச் சரிபார்க்காமல் பணத்தை எண்ணிக் கொடுக்காதீர்கள்!
* பொருட்களின் தரம், விலை பற்றி நண்பர்களிடம் அவ்வப்போது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ஏமாற்றத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

| | |
|---|---|
| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| இவர்தான். | விழாசினி அன்பழகன்<br>6, வைத்தியசாலை வீதி,<br>கதிரேசன் கோயில் வீதி, தலவாக்கலை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BE

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01-03-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




படிப்பகம்

www.padippakam.com

## வந்து போன உபவாசம்

வானம் தூத்துப் போட்ட
மேகக் குப்பை
அடிவான மலை முகடுகளில்
அப்பிக் கிடக்க,
அரையாகி...
பிறையாகி..
ரமழான் நிலவு
தேய்ந்து போனது!
-o-
கடைசி வானத்துக்
கதவுகள் யாவும்
பூட்டப்படலாயின!
-o-
தேவ தூதர்கள்
அணி அணியாக
ஆகாய கங்கைக்குள்
மூழ்கியிருப்பார்கள்!
-o-
சாத்தான் தன்னைச்
சூழ்ந்திருந்த
தளைகளை விட்டுத்
தப்பித்து வந்திருப்பான்!
-o-
திறந்திருந்த
ஆகமங்கள்
அறைந்து மூடப்பட்டன:
முத்தங்களால்
முத்திரையிடப்பட்ட
திருமறைகள்
நீண்ட துயிலில்
விழத் தயாராயின!
-o-
பிரார்த்தனைகளின்
முணுமுணுப்புக்கள்
ஆண்டவன்- முன்னிலையில்
மங்கி மறைந்தன!
-o-
அந்தோ...!
கிருபைக் கதவுகள்
காற்றோடு போயின!
-o-
இறுதியாக
கடைசி வானத்திலிருந்த
கண்ணுக்குப் புலப்படாத
கதவுகள் எல்லாம்
மூடப்பட்டன!
-o-
உபவாசம்- சிலரை
பசியில் போட்டது- சிலரை
நிசியில் போட்டது!
அன்றியும்
அற்பமானவர்களை
உயர் வழிகளில்
உந்தித் தள்ளியது!

## தேன் கிண்ணம்

-o-
மனங்களில் பெரிதாக
மாற்றங்கள் இல்லை!
சிலருக்கு நோன்பு
கேடயமானது:
சிலரால் நோன்பே
கேவலமானது!
-o-

பஹீமா ஜஹான்,
மெல்சிரிபுர.

## அகதிகள் அழுவதில்லை

நான் எழுதும் கடிதம் அம்மா....!
நீ எழுதிய கடிதம் ஒன்று
என்னிடத்தில் வந்து இருக்கு:
அக்காவை கூப்பிட்டு அவுஸ்திரேலியாவில்!
அண்ணனை கூப்பிட்டு அமெரிக்காவில்!
அண்ணி பிள்ளைகள் கனடாவில்!
தங்கைமார்கள் டென்மார்க்கில்!
••
இவ்வளவும் செய்து இருக்கேன்!
இன்னும் என்ன வேண்டும்?- அம்மா
கொழும்பிலே வீடு வாங்கி,
கை தொலைத் தொடர்பு,
கொழும்பை சுற்றி வர
புது கார் வீட்டோடு....!
••
நான் படும் வேதனைகள்,
நீ அறிந்தால் அழுதுடுவாய்.....!
காலையிலே பனி குளிரடிக்க
வேலைக்கு நான்போனால்,
அங்கு உள்ள வேலை எல்லாம்
நான் தனியே செய்யவேண்டும்!
••
கறுப்பு வெள்ளை என்று
தோல் பார்க்கும்; வெள்ளைத்தோல்!
கரு நாகம் போல் கடிக்க
வரும் சில பார்வை;
பஸ்சினிலே சீற் இருந்து
பக்கத்தில் இருக்க(ப்) போனால்,
பயித்திய காரன் போல்
தன்னந் தன்னியே முணுமுணுப்பு!
••
நான் விட்ட கண்ணீர்தான்
சுவிஸ் ஆற்றில் ஓடுதம்மா:
இனி அழ கண்ணீர் இல்லை.
என் தலையில் மயிரும் இல்லை.
நீ கோயில் கட்ட
கேட்ட தொகை
நான் இறந்தால் வந்து சேரும்...!
நிச்சயமாய் நம்பி இரு!
இங்கு அகதிகள் அழுவதில்லை.

குமாரசாமி செந்தி-சுவிஸ்.

## பொய்மையானது

வாழப்பிடிக்காமல்
வந்து விட்டால்
வாழா வெட்டி!
தோள் சேர்ந்தவன்
போய்விட்டால்
கோதையவள்
விதவை!
காதல்
தோற்றுவிட்டால்
காரிகை
கெட்டவள்!
...
பெண்மை
என்பதென்ன
கணக்கு?
காலத்தின்
கணக்கா?
...
அவளுக்கு
இருக்கின்ற
அத்தனையும்
அவனுக்கும்
உண்டே....?
அப்பால்
எதற்கு
இந்த
வைப்புகள்
எல்லாம்?
...
எல்லாம்
பெண்
பேதையென
முடங்கி
தேவையென
கை நீட்டும்
காலம் வரை
அழியாது.
...
மாயைகள்
அகன்று,
போலிகள்
கழன்று,
உரிமையோடு
உயர்ந்து
வாழும்வரை,
பெண் வாழ்வு
பொய்யானது
என்பதே
மெய்யானது.

ஜெயமணி.

## நிரந்தரமில்லாத நினைவுகள்

இந்த
அந்திமாலை பொழுது
மனதுக்கு
இதமாக
சுகம் தருகிறது.
o-o-o
எத்தனை
நினைவுகளை-நான்
கரு கலைப்பு
செய்யாமல்-என்
மனம் எனும்
கருவறையுள்
பத்திரப்படுத்தியுள்ளேன்!
o-o-o
யுத்தம்! -அது
தந்த
எத்தனை
கசப்பனுபவங்கள்.....
உன், நினைவுகளால்
மறைக்கப்பட்டுள்ளது?
o-o-o
யுத்த மேகம் அற்ற
தெளிந்த
வானம்!
ஆகா...இது
எப்போதும் நிலைக்குமா?
o-o-o
இந்த
தெளிந்த வானம்
அது தரும் அமைதி
எல்லாமே....
அப்போதும்.
இருந்திருந்தால்....
எத்தனை
உறவுகளை,
பாதுகாத்திருப்பேன்?
o-o-o
யுத்தம்!-இந்த
அழிவுகள்!
தொடருமானால்...
நாளை,
நானும் இருக்கமாட்டேன்!
உன்னருகே,
இருந்து
இயற்கையை ரசிப்பதற்கு.

உன்னவன்,
வட்டவளை.

## கவி- விதைகள்

**விபசாரம்**
களவுகொடுத்தவன்
கள்வன் ஆகிப்போனான.
குறையாடியவன்
சத்தவாளி.

**ஏகாதிபத்தியம்**
இலவசமாய்
சவப்பெட்டி தருவார்கள:
இரகசியமாய்
ஆயுதம் விற்று.

**எரி நட்சத்திரங்கள்.**
விஞ்ஞான கலத்தில்
விரைந்தவர்கள்
அயல் கிரகத்தில்
அடிதடி!

**மதம்**
யானைகளுக்கு
தப்பித்தவறி வரும்:
மனிதர்களுக்கு
எப்போதும் வரும்.

**நிவாரணம்**
ஒப்பாரி வைத்ததற்கு
எதிர்மாறாய
ஒப்புக்கொண்டதன்
காரணம்!

**தீர்வு**
சமாதானப்
பாலகறக்க
தயாராகிறது
வைக்கோல் கன்று.

கவியூரன்.

## ஒரு பெரிய கோளமும் சின்னக் கேள்விக் குறியும்

ஓடாத நீரூற்றாய்
என் சங்கதிகள்
தேங்கிப் போய்...!
எனினும்
தொடர்ந்தும்...
▫▫
வாழ்க்கை,
ஒரு பூந்தோட்டமா?
எந்த முட்டாளுக்கு?
▫▫
தள்ளித் தள்ளியும்
பக்கம் வந்துமாய்
அது பதற்றப்பட்டுக்
கொண்டிருக்கிறது....!
கேள்விக்குறியான எனக்கோ
சிதம்பர சக்கரமாய்....
▫▫
ஒரு கால் முன்னெடுக்க
நாலடிச் சறுக்கல்;
வாழ்க்கை,
விசித்திரங்களைத்
தன்னிஷ்டப்படி
கை நிறையவே வைத்திருக்கிறது.
▫▫
நான் ஓர்
அல்ப்ப மானுடன்.....
எந்த மூலைக்கு?
வாழ்க, வையகம்!

பா. மகாலிங்கம்.

## பூலோக சொர்க்கத்தில்....!

முஷ்டி
முகத்தில் இறங்கியது:
இறுகிப் போன மனங்களை
தலையில் சுமந்து கொண்டு...
***
முழங்கால் மடிக்கப்பட்டு
அடிவயிற்றுக்கு கீழே
வேகமாய்த் தொட்டுத்
தடவியது:
மனித வாசனையை
சற்றே
மறந்து விட்டு-
***
நகக் கண்களை
சத்தமில்லாமல்
முத்தமிட்டன ஊசிகள்:
பின் வந்த
மரண ஓலத்தின்
அவலம் புரியாமல்....
***
மேசை லாச்சிகள்
ஆண்மையின் அடையாளத்தோடு
ஸ்பரிசித்தன:
உயிர்களுக்கும் உணர்ச்சிகள்
இருப்பது தெரியாமல்....
***
தலை முடியை
இறுகப் பற்றி
சுவற்றில் மோதியது:
பட்டுத்தெறித்த இரத்தத்தில்
மிருகம் தெரிந்தது!
அதற்குள் இருந்த
மனிதம்
மறைந்து போய்...
***
நிர்வாணமாய்
தலைகீழாக
தொங்கவிடப்பட்டபோது,
தெரிந்தது
வானுலக நரகமல்ல:
பூலோக சொர்க்கம் என்று...!!!

கலஹா- பெ. புண்ணியமூர்த்தி.



↑ யார் என்று தெரிகிறதா? குஷ்புவேதான். சுலபமாக கண்டுபிடித்திருப்பீர்கள். தனது தாயாருடனும், தந்தையுடனும் அந்தக்கால குஷ்பு. இப்போதும் சின்னப் பருவச் சாயல் மாறவேயில்லை.

## அந்தநாள் ஞாபகம்



← பிரபல பாடகி லதா மங்கேஷ்கருடன் இணைந்து நிற்பவரும் ஒரு பிரபல பாடகிதான். தனியாக நிற்பவரும் அவர்தான். எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



↓ யார் இந்தச் சுட்டிப் பையன்? இன்று பெரிய கில்லாடி. அநேகமாக கண்டுபிடித்திருப்பீர்கள்தானே?! உங்கள் விடைகளைச் சரிபார்க்க பக்கம் 18 ஐ நாடவும்.



## இந்த வாரம் உங்கள் பலன்

(23.02.1997 தொடக்கம் 01.03.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், புதன், வெள்ளி. |
| மீனம் | - சனி, கேது. |
| கன்னி | - இராகு, செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |

★ சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி தடை, அந்நியர் பகை. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- கௌரவக் குறைவு, காரியத்தடை. | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 | மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- தொழில் கஷ்டம், மனக் குழப்பம். | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- உறவினர் உதவி, பலவித பேறு. | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. | 3 | மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, வெளியிடப் பயணம். | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், காரியசித்தி. | பி.ப | 2 | மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- வீண் முயற்சி, காரியக்கேடு. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், பகையதிகம். | மு.ப. | 9 | மணி |
| **சனி**- மனக் கலக்கம், இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- வெளியிடப் பயணம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- பெரியோர் பகை, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- தூரஇடப் பயணம், பெரியோர் உதவி. | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- மன மகிழ்ச்சி, அந்நியர் சகவாசம். | பகல் | 12 | மணி |
| **சனி**- பலவித பேறு, கடன் தொல்லை நீங்கும். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- துன்பம் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- கௌரவம், இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| **புதன்**- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | மு.ப. | 9 | மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- பொருள் வரவு. முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், கடன் தொல்லை. | பகல் | 11 | மணி |
| **புதன்** - முயற்சி பலிதம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- இனசன விரோதம், மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| **வெள்ளி**- உறவினர் பகை, தொழில் மந்தம். | பி.ப. | 2 | மணி |
| **சனி**- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனக் கலக்கம், அந்நியர் பகை. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், காரியத்தடை. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, செலவுமிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- முயற்சி பலிதம், வீண் மனஸ்தாபம். | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- வீண் குறை கேட்டல், அந்நியர் சகாயம். | பி.ப. | 1 | மணி |
| **சனி**- கடன் தொல்லை, மனக் கவலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் கஷ்டம், மனக் குழப்பம். | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- வீண் முயற்சி, அந்நியர் பகை. | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- கடன் தொல்லை, வெளியிடப் பகை. | பகல் | 12 | மணி |
| **சனி**- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- பலவித நன்மை, பண வரவு. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- கடன் தொல்லை நீங்கும், காரியசித்தி. | பி.ப. | 3 | மணி |
| **புதன்**- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- தொழில் உயர்ச்சி, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| **சனி**- மன மகிழ்ச்சி, கடன் தொல்லை நீங்கும். | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. | 4 | மணி |
| **திங்கள்**- பலவித பேறு, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- உயர்ந்த நட்பு, கடன் தொல்லை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- பெரியோர் நட்பு, அந்நியர் பகை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 7 | மணி |
| **செவ்வாய்**- பலவித பேறு, உறவினர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| **புதன்**- முயற்சி பலிதம், பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- அந்நியர் சகாயம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- பலவித பேறு, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 4 | மணி |


அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்

www.padippakam.com





## இடம் பிடிக்கணும் தம்பி

குயிலைப் பாரு தம்பி- அது
கூவி மகிழுது தம்பி.
மயிலைப் பாரு தம்பி- அது
மகிழ்ந்து ஆடுது தம்பி.

நிலவைப் பாரு தம்பி - அது
நித்தம் ஓடுது தம்பி.
தென்றலைப்பாரு தம்பி- அது
தீண்டித் தழுவுது தம்பி.

இயற்கைச் செல்வம் எல்லாமே
ஏதோ ஒன்று செய்யுது பாரு!
சும்மா இருக்கலாமா? - நீ
சோம்பித் திரியலாமா?


நல்லாப் படிக்கணும் தம்பி- நீ
நல்லது செய்யணும் தம்பி.
எல்லோர் மனதிலும் தம்பி- நீ
இடம் பிடிக்கணும் தம்பி!

இலட்சமி காந்தன்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை
என்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்!
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி
வைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்!
–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## சேவலும் நரியும்



ஒருநாள் காலையில் ஒரு மரத்தின் மீது ஒரு கொழுத்த சேவல் உட்கார்ந்திருந்தது. காலை நேரம் மிகவும் இரம்மியமாய் இருந்தது. சேவலுக்கு மிகவும் உற்சாகமாய் இருந்தபடியால் பல தடவைகள் கூவியது.

சேவல் கூவும் சத்தம் தொலைவில் இருந்த நரிக்குக் கேட்டுவிட்டது. உடனே சத்தம் கேட்ட இடத்தை நோக்கி ஓடி வந்தது.

சேவல் மரத்தின் மீது இருந்தபடியால் அதைப் பிடிக்க நரியால் முடியவில்லை. எப்படியாவது சேவலைக் கீழே இறக்கிப் பிடித்துத் தின்றுவிடத் திட்டம் போட்டது.

உடனே சேவலைப் பார்த்து,

"நண்பா! வணக்கம். இன்று காலையில் நீ ஒரு நல்ல செய்தியைக் கேள்விப் பட்டாயா? இன்று முதல் பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் இடையில் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இனிமேல் நாம் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது. அன்பாய் நடந்து கொள்ள வேண்டும் என்பது தான் இந்த ஒப்பந்தத்தின் நோக்கம்.

நட்பு மனப்பான்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். நீ கொஞ்சம் கீழே இறங்கி வா, இந்த நல்ல செய்தியைப் பற்றிப் பேசுவோம்," என்று கூறியது நரி.

நரியின் தந்திரப் பேச்சை சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல தலையைத் தூக்கி அப்படியும், இப்படியும் பார்த்தது.

இதைக் கண்ட நரி,

"நண்பா! மிகவும் அக்கறையாக எதையோ பார்க்கிறாயே? அங்கே என்ன இருக்கின்றது?" என்று கேட்டது.

அதற்குச் சேவல்,

"அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரித் தெரிகிறது. அவை வேட்டை நாய்கள்தானா என்பதைப் பார்த்தேன்," என்றது.

நரிக்கு உதறல் எடுத்தது. 'வேட்டை நாய்களிடம் நான் மாட்டினால் அவ்வளவு தான். கடித்துக் குதறிவிடும்,' என்று மனதிற்குள் நினைத்த நரி சேவலிடம்,

"நண்பா! நான் போய் வருகிறேன்," என்று கூறியது.

"போகாதே நண்பா! இதோ நான் கீழே வருகின்றேன். வேட்டை நாய்களைக் கண்டு நீ ஏன் பயப்படுகிறாய்? இப்போது தான் சமாதான ஒப்பந்தம் என்று சொன்னாயே?" என்று கேட்டது சேவல்.

"அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேகம் பேர் இன்னும் கேள்விப்பட்டு இருக்க மாட்டார்கள் சிலவேளை அந்த நாய்களுக்குத் தெரியாமல் இருந்தால் என் கதி என்னாவது? நான் போகிறேன்,"

என்று நரி ஓட்டம் பிடித்தது. சேவல் அதைப் பார்த்துச் சிரித்தது.

## வாரம் ஒரு நாடு
### தாய்லாந்து



தலைநகர் - பாங்கொக்
பரப்பு - 5,42,373 சதுர கிலோ மீட்டர்.
மக்கள் தொகை - 5.88 கோடி.
மொழி - தாய், சீனம், ஆங்கிலம், மலாய்.
எழுத்தறிவு - 89%
சமயம் - புத்தம், இஸ்லாம்.
நாணயம் - பாத்
தனிநபர் வருமானம் - 1840 டொலர்.

**அமைவிடம்:**

சையாம் என முன்னர் அழைக்கப்பட்ட தாய்லாந்து தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

தொன்மையான ஏகாதிபத்திய நாடான இது, 1932ல் அரசியல் சட்டமுள்ள முடியாட்சி நாடாயிற்று. 1941ல் ஜப்பானின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. அடுத்து சிறிது காலம் இராணுவ ஆட்சி. 1978ல் புதிய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது. 1990ல் இராணுவக் கலவரம். 1991ல் ஜனநாயக ஆட்சி வேண்டிக்குரல் எழுப்பப்பட்டது. 1992ல் மீண்டும் பொதுத் தேர்தல். ஜனநாயக அரசு பதவியேற்றது.

**பொருளாதாரம்:**

வாகன உற்பத்தி, துணியாலைகள், எலெக்ரோனிக் பொருள் உற்பத்தி போன்றவை முக்கியமானவை. நெல் முக்கிய ஏற்றுமதிப் பொருள். இரப்பர் பயிரிடப் படுகிறது. சுற்றுலாத்துறை முக்கிய வருமான மூலம்.

## ரைட் சகோதரர்கள்



காற்றை விட இலேசான வாயுக்களை நிரப்பிய மிகப் பெரிய பலூன்களின் உதவியால் நூறு ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வானத்தில் பறந்து வந்தார்கள். பின்னர் பலூன்களில் ஒருவகை இயந்திரத்தை இணைத்துப் பறக்கலானார்கள். இதற்கு ஆகாயக்கப்பல் என்று பெயர்.

ஆனால் முதன் முதலாக ஒரு இயந்திரத்தைப் பொருத்தி விரும்பிய திசையில் ஓட்டிச் செல்லக் கூடிய விமானத்தை அமைத்த பெருமை ரைட் சகோதரர்களைச் சாரும். அமெரிக்காவைச் சேர்ந்த இவர்களில் மூத்தவரின் பெயர் வில்பர் ரைட். இவர் 1867ல் பிறந்தார். இளையவர் ஓர்வில் ரைட். இவர் 1871ல் பிறந்தார்.


வட கரோலினாவில் உள்ள கிட்டிஹொக் கிராமமே இவர்களுடைய பரிசோதனைகளுக்கு ஏற்ற இடமாக அமைந்தது. அங்கு 1903ல் இவர்கள் ஒரு விமானத்தைச் செய்து, பெட்ரோலில் இயங்கும் ஒரு இயந்திரத்தை அதில் பொருத்தினார்கள்

முதன் முதலில் இந்த விமானம் தரையில் இருந்து சுமார் 3 மீட்டர் உயரம் கிளம்பி 12 வினாடிகளே பறந்து, 36 மீட்டர் தூரம் சென்றது. பின்னர் 1905ல் ரைட் சகோதரர்கள் வேறொரு விமானத்தை அமைத்து, அதில் 39 நிமிடங்கள் பறந்தனர். இந்த விமானம் 38 ஆயிரம் மீட்டர் தூரம் சென்றது.

இந்த அரிய சாதனைகளை மக்கள் முதலில் பொருட்படுத்தவில்லை. அமெரிக்க அரசாங்கமும் இதற்கு ஆதரவு காட்டவில்லை. 1908ல் ஃபிரெஞ்சு நாட்டினர் இவர்களுடைய பறக்கும் இயந்திரத்தைப் பாராட்டிப் பரிசளித்தனர். அதன் பிறகே அமெரிக்க அரசாங்கத்திற்கு இதன் முக்கியத்துவம் விளங்கியது. 1909ல் ரைட் சகோரர்கள் தங்கள் பெயரில் தொழிற்சாலை ஒன்றை அமைத்து ஆகாய விமானம் தயாரிக்கத் தொடங்கிப் பெரும் புகழ் பெற்றனர்.

ரைட் சகோரர்களில் வில்பர் 1912ம் ஆண்டிலும், ஓர்வில் 1948ம் ஆண்டிலும் காலமானார்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.03.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 181
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 179

பரிசுக்குரியவர்:
எஸ். காஸிம்.
அல்– அஸ்ரப் மகா வித்தியாலயம், வத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ராஜா– நிரேஷ், கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. | எல். ஜெமீனா, கம்மலவத்தை, வெலம்பொட. |
| தர்ஷிகா தெய்வேந்திரன், இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி, கொழும்பு-04. | ஆர். மதுசூதனன், உடப்பு தமிழ் வித்தியாலயம், உடப்பு. |
| செல்வி எவ். றிஸ்வியா, அல்-ஹிலால் ம.த.வித்தியாலயம், நீர்கொழும்பு. | எம். ஜெனிட் தர்ஷினி, நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு-13. |
| எஸ். கார்த்திகன், வெப்ரிஸ் மிஷன் தமிழ் பாடசாலை, கெக்கிராவை. | முகமட் நிலாம், அக்பர் கிராமம், மருதமுனை. |
| மதிவதனி பரமசிவம், தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா. | எஸ். குகநேசன், இறம்பைக் குளம், வவுனியா. |

## பெரிய நாடுகள்

உலகின் மிகப் பெரிய 10 நாடுகளும் அவற்றின் பரப்பளவுகளும் பின்வருமாறு:

| நாடு | | சதுரகிலோ மீட்டர் |
|---|---|---|
| 1. | ரஷ்யா | 1,70,75,000 |
| 2. | கனடா | 99,76,139 |
| 3. | சீனா | 95,61,000 |
| 4. | அமெரிக்கா | 93,72,614 |
| 5. | பிரேசில் | 85,11,965 |
| 6. | அவுஸ்திரேலியா | 76,82,300 |
| 7. | இந்தியா | 32,87,263 |
| 8. | ஆர்ஜென்டினா | 27,76,654 |
| 9. | கஜகஸ்தான் | 27,17,300 |
| 10. | சூடான் | 25,05,813 |

## ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

உலகிலேயே மிக உயரமான இடத்திலிருந்து பாயும் நீர்வீழ்ச்சி இதுதான். இதன் முழுப்பெயர் சல்ரோ ஏஞ்சல் என்பது.



வெனெஸுவெல்லா நாட்டின் கறோனி ஆற்றிலிருந்து பிரிந்து பாயும் இந்த நீர்வீழ்ச்சியின் உயரம் 979 மீட்டர் (3,212 அடி) ஆகும். முதன் முதலில் எர்னஸ்ரோ சான்செஷ் லா குறூஸ் என்பவரால் 1910ல் கண்டுபிடிக்கப்பட்டாலும் அமெரிக்க விமானி ஜிம்மி ஏஞ்சல் என்பவர்தான் இதனை முழுமையாக- 1933 நவம்பர் 16ம் திகதி அறிந்து தகவல் தந்துள்ளார்.

செவ்விந்தியர்களால் சூருன்- மேரு என்றும் இது அழைக்கப்பட்டதாம்.

## அறிவோம் மனதில் பதிவோம்



ஆபிரிக்காவில் உள்ள ஒருவகை நுளம்புகள், சிலவகை எறும்புகளின் வாயைத் தேடிப்பிடித்துக் கடிக்கின்றன. இரத்தம் குடிப்பதற்காக இல்லாமல் வாயில் உள்ள தேனைக் குடிப்பதற்காகவே அவ்வாறு கடிக்கின்றன.



'ட்ரண்ட்லஸ்' எனப்படும் ஒரு வகை வண்டு 2 1/2 வருடங்கள் வரை உணவுத் தேவையின்றி உயிர் வாழும் வகையைச் சேர்ந்தது.

1987ம் ஆண்டு ஜூலை மாதம் எடுத்த கணக்கெடுப்பின்போது உலக மக்கள் தொகை 500 கோடி. 1900ம் ஆண்டு இது 160 கோடியாக இருந்தது.





கடல் சிங்கம் என்று அழைக்கப்படும் சீல்கள் கடல்களில் வசித்தாலும் இனப்பெருக்கம் செய்வதற்காகத் தரைக்கு வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

"எனக்குத் தூக்கம் வருகிறது கணேஷ்."
"உடை மாற்றிக் கொள்ளவேண்டாமா? சாப்பிட்டாயா?"
"சாப்பிட்டுவிட்டேன். இப்படியே படுத்துக் கொண்டுவிடுகிறேன். ஒரு தலையணைகொடு. அல்லது கனமான புத்தகம்கூடப் போதும்....."
"எல்லாம் சௌகரியமாகத் தருகிறேன். கவலைப் படாதே!"
"கணேஷ் நீ ஓர் ஆதர்ச இளைஞன். இதே சந்தர்ப்பத்தில் ஓர் இளம் பெண் ஓர் ஆணுடன் தனியாக இருந்தால் நிச்சயம் ஆண் சபலப்படுவான். ஏதாவது அசட்டுத்தனமாக முயல்வான்."
"மோனிக்கா, இந்தக் குழப்பமான சூழ்நிலையில் உனக்கு இந்த எண்ணங்களா ஏற்பட வேண்டும்?"
"கணேஷ், எனக்குப் பயமாக இருக்கிறது. என் இதயம் எப்படி அடித்துக்கொள்கிறது பார்!"
"இதயம் அல்ல. உன் இளமை."
"கணேஷ்!" என்று மிக அருகில் வந்தாள் மோனிக்கா. அவள் மெல்லிதான உதடுகள் பிரிந்து அவள் பல் வரிசையின் ஒழுங்கில் ஏதோ ஒரு பிசகு இருப்பதைப் பார்த்தான், கணேஷ். பற்கள் ஒளிர்ந்தன. அவள் மூச்சில் பெப்பர்மெண்ட் வாசனை கலந்திருந்தது.
"கணேஷ், என்னைக் காப்பாற்று கணேஷ்."
"எப்படி" என்றான்.
அவள் அவன் கையைப் பற்றினாள்.
டெலிஃபோன் மணி அடித்தது.
மோனிக்காவின் அருகில் அடித்தது. மோனிக்கா சபித்துக்கொண்டு எழுந்தாள். "ஹலோ" என்றாள்.
"கணேஷ்! எனக்கு கணேஷ் வேண்டும்!" என்றது குரல்.
"உனக்கு," என்று அவனிடம் கொடுத்தாள்.
தெளிவாக வார்த்தைகள் வந்தன. "கணேஷ்! முட்டாளே! கவனி! பாஸ்கருக்கு என்ன ஆயிற்று தெரியுமா? அது உனக்கும் நேரப் போகிறது. குரங்கு வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டு மறுபடியும் மதறாஸுக்குப் போய்விடு."
"ஹலோ! ஹலோ!"
டெலிஃபோனைத் தட்டினான்.
"வைத்து விட்டார்கள்!" என்றான்.
"யார் அது?" என்றாள்.
"யார்?" என்று திருப்பிக் கேட்டான்.
"யூ மீன்?"
"ஸம்படி என்னை மதறாஸுக்குச் செல்லுமாறு உபதேசம்."
"எதற்கு?"
"சாகாமல் இருப்பதற்கு."
"பயமுறுத்தலா?"
"ஆம்! இந்தக் கேஸில் பயமுறுத்தல்கள் சற்று அதிகமாகவே இருக்கின்றன....."
"கணேஷ், '-நான் முதலில் எடுத்தேனல்லவா. அந்தக் குரல் நான் எங்கோ கேட்ட குரல் போல இருந்தது எனக்கு. "
"எங்கே? எங்கே? ஞாபகப்படுத்திப் பார். உன்னிடம் அவன் என்ன கேட்டான்?"
"கணேஷ், 'எனக்கு கணேஷ் வேண்டும்!' என்று."
"யார் குரல் போல இருந்தது?"
"யோசித்துப் பார்க்கிறேன்.... ம்......"
கணேஷ் காத்திருந்தான். அவளையே பார்த்துக் கொண்டிருக்க அவள் பிரயத்தனத்துடன் யோசிக்க, "கோவிந்த்?" என்று கேட்டுப் பார்த்தான்.
"எனக்குச் சொல்ல முடியவில்லையே கணேஷ். இரு!"
மோனிக்காவை இவ்வளவு நம்புகிறேனே. இவள் சொல்வது எத்தனை பொய்யோ எத்தனை நிஜமோ! உண்மை தெரியும்வரை எல்லோரையும் சந்தேகி.
"குரங்கு வேலை!" எங்கே பார்த்தோம் அந்த வார்த்தைப் பிரயோகத்தை!

கணேஷ் எழுந்தபோது (7.30) மோனிக்கா இன்னும் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவள் மேல் ஒரு போர்வையைப் போர்த்திவிட்டு உள்ளே சென்று காப்பி தயாரித்தான். அவளைக் கூப்பிட்டுப் பார்த்தான். முனகிக் கொண்டே புரண்டு விட்டு மறுபடித் தூங்கிப் போனாள். மறுபடி போர்த்திவிட்டு, சட்டென்று அனிதாவின் ஞாபகம் வர, டெலிஃபோன் டைரக்டரியை அவசர அவசரமாகப் புரட்டினான்.
சுநந்தா ரேக்களையும் சுந்தர ராஜன்களையும் கடந்து சுந்தர் ஏஜன்ஸியில் வந்து அவன் விரல் நின்றது. விலாசத்தைக் குறித்துக்கொண்டான். குளித்தான். பால் கலக்காமல் காப்பி குடித்தான், இரண்டு மென்மையான ஸ்லைஸின் நடுப் பாகத்தைக் கடிக்கும் போது அனிதாவின் ஞாபகம் மறுபடி வந்தது. செய்தித்தாளை மேய்ந்தான்? வங்காளத்தில் இன்னும் இரண்டு பேர் கொலை, 'ஸீயூ லேட்டர்'- என்று ஒரு காகிதத்தில் குறிப்பு எழுதி மோனிக்காவின் அருகில் வைத்துவிட்டு வெளியே வந்தான்.
கணேஷின் மெஷின்தனம் ஸ்டியரிங்கைச் செலுத்த மெலிதான பனிப்படலத்தின் ஊடே தன்னைப் பற்றி நினைத்தான். வயதாகிக் கொண்டிருக்கிறேன். இன்னும் தொழில் சவுடால் தனத்திலேயே ஓடிக்கொண்டிருக்கிறது. பம்பாய், டில்லி என்று அலைந்தாகி விட்டது. ஹரிணி, நீரஜா, அனிதா, மோனிக்கா என்று சம்பவங்களைத் தொடர்ந்தாகிவிட்டது.
அனிதா! இரண்டே இரண்டு 'ஸிலபிள்கள்' அந்தத் 'தா'வில் இருந்த வேட்கை, ஏக்கம்- அனிதா அனி தருவாள், அனி தந்தாள், என்று விதவிதமாக அமைத்துப் பார்த்தான்.
அனிதாவுக்கு ஷர்மாவின் மேல் வெறுப்பு இருந்திருக்கிறது. அந்த வெறுப்பு, தன் அபரிமிதமான செல்வத்தினால் அவளை வாங்கிக் கூட்டில் அடைத்ததற்கு; அவளை வெளியே விடாமல் ஓர் இன்ப சாதனமாகப் பிரயோகித்ததற்கு. அந்த வெறுப்பு எல்லை மீறி, கொலை செய்யும் துணிச்சல் வரை சென்றிருக்குமா? அனிதாவா? ஒரு பெண் உமர்கய்யாம் படிக்கும், கவிதை வரிகளை அறையில் ஆணியடித்து மாட்டியிருக்கும், ஒரு பெண்- அப்படிச் செய்வாளா? பயப்படுகிறாள், சொத்து வேண்டாம் என்கிறாள்.
அனிதா எங்கே?
தர்யாகஞ்சில் கோல்சா தியேட்டர் அருகே இருந்த சந்தில் இருந்தது அந்த ஏஜன்ஸி. அப்பொழுதுதான் திறந்து ஓர் ஆள் தூசி தட்டிக்கொண்டிருந்தான். சில ஸ்டீல் நாற்காலிகள், ஸ்டீல் அலமாரி, ஓர் அனுமார் படம். (தன் மார்பைக் கிழித்து ராமரைக் காட்டிக் கொண்டிருந்தது) டெலிஃபோன்.
"நான் தான் சுந்தர்," என்றவருக்கு வழுக்கை எற்பட ஆரம்பித்தது. மீசையில் ஒரே ஒரு நரை மயிர் தென்பட்டது. காதில் மயிர். கண்களில் சந்தேகம்.
"நமஸ்தே. என் பெயர் கணேஷ். நான் உங்கள் விளம்பரத்தைப் பார்த்தேன். ஷாத்ராவில் இருக்கும் அந்த வீட்டைப் பார்க்க விரும்புகிறேன்," என்றான் கணேஷ்.
சுந்தர் கணேஷைப் பார்த்த பார்வையில், 'உன் மூஞ்சியைப் பார்த்தால் வீடு வாங்குகிறவனைப் போல இல்லை' என்கிற செய்தி தெரிந்தது.
"ஷாத்ரா விட்டை விற்றாகிவிட்டதே!" என்றார்.
"அப்படியா? எவ்வளவுக்கு போயிற்று?"
"அதை நான் சொல்ல வேண்டியதில்லை."
கணேஷ் சுற்றும் முற்றும் பார்த்தான். "மிஸ்டர் சுந்தர், நாம் தனியாகப் பேசலாமா?"
சுந்தரின் கண்களில் மேலும் சந்தேகமும், ஜாக்கிரதையும் தென்பட்டன.
"என்ன பேச வேண்டும்?"
"விஷயம் இதுதான் எனக்கு- எனக்கு என்றால் என் க்ளையண்டிற்கு. நான் ஒரு லாயர். ஷாத்ராவில் இண்டஸ்ட்ரியல் ஏரியாவில் ஒரு பி.வி.ஸி. ஃபாக்டரி இருக்கிறது. அவருக்கு ஷாத்ரா வில் ஒரு வீடு மிக அவசியமாகத் தேவையாக இருக்கிறது. நீங்கள் விளம்பரம் கொடுத்த வீடு இன்னும் விலை போகவில்லை என்றால் எழுபத்தைந்து, நூறு வரைக்கும் போவார். உங்களுக்கும் கமிஷன் தருகிறேன்."
கமிஷன் என்ற வார்த்தையில் சுந்தரின் முகம் மலர்ந்தது.
"உட்காருங்கள்! டீ சாப்பிடுகிறீர்களா?"
"வேண்டாம். அந்த வீடு என்ன ஆயிற்று?"
"பார்ட்டி யார்?" என்றார் சுந்தர்.
"ஷா, குஜராத்தி."
"அந்த வீடு விற்றுப் போய்விட்டதே."
"பார்ட்டி யார்?" என்றான் கணேஷ்.
"ஷர்மா என்று ஒருவர் வாங்கினார் அதை."
"ஆர்.கே.ஷர்மா?"
"ஆம்."
"அவரை எனக்குத் தெரியும், அவரே வந்திருந்தாரோ?"
"இல்லை. அவர் செக்ரட்டரிதான் எல்லாவற்றையும் பேசி முடித்தார், பாஸ்கர் என்று பெயர்; ஸேல் டீல் எல்லாம் கையெழுத்தாகிவிட்டது. அட்வான்ஸ் எல்லாம் வாங்கியாகிவிட்டது. வெரிஃபிகேஷனுக்குப் பிறகு இன்னும் சில காகிதங்கள் பாக்கி இருக்கின்றன. தொண்ணூறு பர்ஸெண்ட் பேமெண்ட் ஆகிவிட்டது. பாஸ்கர் இன்று வந்தாலும் வருவார்; அவரை நீங்கள் சந்திக்கலாம்."
"பாஸ்கர் வரக்கூடிய நிலையில் இல்லை" என்றான் கணேஷ்.
"பாஸ்கரையும் தெரியுமா உங்களுக்கு?"
"சுமாராகத் தெரியும். நான் அவர்களுடன் பேசிக் கொள்கிறேன். வீட்டை எப்பொழுது வாங்கினார்கள்?"
"விளம்பரம் வந்த மறுதினமே வந்து பேசி முடித்து விட்டார்கள்."
"வீடு எங்கே இருக்கிறது?"
"ஷாத்ராவில்."
"ஷாத்ராவில் தான் இருக்கிறது. இன்னும் நகர்ந்து போகவில்லை. ஷாத்ராவில் எந்த இடத்தில்?"
"இண்டஸ்ட்ரியல் ஏரியா இருக்கிறதல்லவா? அதைத் தாண்டி மெயின்ரோடில் வடக்காக ஒரு ஃபர்லாங் போனால் தியேட்டர் ஒன்று வரும். அப்ஸராவோ என்னவோ பெயர், அதைக் கடந்ததும் இடதுபுறம் திருப்பி ஒரு மைல் உள்ளே சென்றால் தனியாக ஒரு வீடு அது. 'யமுனா' என்று பெயர். பக்கத்தில் எல்லாம் பொட்டல். அந்த ஏரியாவிலேயே இரண்டோ மூன்றோ தான் வீடுகள் வந்திருக்கின்றன. டெவலப் ஆகவில்லை இன்னும்."
"தாங்க் யூ மிஸ்டர் சுந்தர். நான் அவர்களைப் போய்ப் பார்க்கிறேன்."
கணேஷ் அங்கிருந்தே ஷாத்ராவுக்குப் போக நினைத்தான். செங்கோட்டையைத் தாண்டியதும் மனம் மாறித் திரும்பினான். இன்ஸ்பெக்டர் ராஜேஷைச் சந்திக்கச் சொன்ன மற்றொரு போலிஸ் ஆபீசரைப் போய்ப் பார்த்தான். அவர் இருந்தார்.
"காலஞ்சென்ற ஆர்.கே.ஷர்மாவின் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வேண்டும்."
"நீங்கள் லாயர்?"
"ஆம். அவர் எஸ்டேட் விவரங்களைக் கவனிக்கிறேன். அந்த ரிப்போர்ட்டை நான் பார்க்க வேண்டும்!"
"அதை நான் உங்களுக்குக் கொடுப்பது சிரமம்."
"ஏன்?"
"என்ன விளையாடுகிறீர்களா? பொலிஸ் ரிகார்ட்கள் அவ்வளவு சுலபத்தில் கிடைத்து விடுமா?"
"நான் பார்க்க வேண்டும். அவ்வளவுதான்."
"நீங்கள் எதற்கும் எங்கள் எஸ்.பி.யிடமிருந்து ஒரு கடிதம் வாங்கிக்கொண்டு வந்து விடுங்களேன்."
"எஸ்.பி.யின் அறை எங்கே இருக்கிறது?"
"திலக் மார்க் போக வேண்டும், அவர் ஆபீஸ் இங்கே இல்லை."
"போச்சுடா!"
"ஸாரி, என்னால் ஒன்றும் செய்யமுடியாது."
"இன்ஸ்பெக்டர் ராஜேஷ் சொன்னார்....."
"ராஜேஷுக்கு ரூல் தெரியாது."
ஏமாற்றத்துடன் பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியில் வந்தபோது ஓர் ஆசாமி அவனருகில் வந்தான்.
"உங்களுக்கு என்ன வேண்டும்?"
"ஒரு போஸ்ட் மார்ட்டன் ரிப்போர்ட்டைப் பார்க்க வேண்டும். அவ்வளவுதான். நீங்கள் யார்?"
"கேஸ் என்ன?"
"ஷர்மா-ஆர்.கே.ஷர்மா- என்று ஒருத்தர். சென்ற 20ம் திகதி போஸ்ட் மார்ட்டம் நடந்திருக்கிறது."
"தனியாக வாருங்கள் இப்படி. இதற்கெல்லாம் இன்ஸ்பெக்டரைப் போய்க் கேட்கலாமா? எவ்வளவு கிளார்க் இருக்கிறார்கள்!"
'லஞ்சம் வாழ்க' என்று கணேஷ் நினைத்துக் கொண்டான்.
அந்த ரிப்போர்ட் முதலில் அவனுக்கு ஏமாற்றத்தைத் தந்தது. அவன் விரும்பிய விஷயங்கள் எதுவும் இல்லை. ஷர்மாவின் உடல் அடையாளங்கள், அவர் இறந்ததற்குக் காரணம் இவைகள் போன்ற விஷயங்கள் லத்தீன் கலந்த வாக்கியங்களில் இருந்தன.
மெதுவாக அந்த ஃபைலைப் புரட்டினான். ரிப்போர்ட்டின் முன் எவ்வளவோ சர்க்கார் காகிதங்கள்; கைப்பட எழுதின வாக்குமூலங்கள்; கையெழுத்துக்கள்; சாட்சியங்கள்.
கணேஷ் சற்று நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தான். நெற்றியைச் சுருக்கிக் கொண்டான். பெருமூச்சு விட்டான்; புறப்பட்டான்.
ஒரு பப்ளிக் கால் ஆபிஸிற்குச் சென்று மறுபடி இன்ஸ்பெக்டர் ராஜேஷைக் கூப்பிட்டான். இப்பொழுது அகப்பட்டார்.
"கணேஷ் ஹியர், நான் டில்லியை விட்டு ஷாத்ரா வரை செல்ல வேண்டும். மாலை திரும்பி வருவேன். உங்களிடம் சொல்லிக் கொள்ளவேண்டும்."
"ஷாத்ராவில் என்ன?"
"ஒரு 'ஹன்ச்' பேரில் போகிறேன். ஷர்மாவின் கேஸ்தான்."
"ஏதாவது உங்களுக்குத் தெரிந்ததா?"
"இன்னும் குழப்பம்தான். குழப்பம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்று மாலைக்குள் ஒன்றில்லை ஒன்று தெரிந்துவிடும்."
"அவ்வளவு நிச்சயமாக நீங்கள் சொல்வதைப் பார்த்தால்....."
"அப்படியில்லை பட்சி சொல்கிறது, இன்று தீர்ந்துவிடும் என்று. நான் அங்கே போக அனுமதி வேண்டும். பாஸ்கர் கொலையுண்டிருக்கையில் நான் எங்காவது ஓடிப் போய்விட்டேன் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள்."
"சரி, போய்ச் சீக்கிரம் வந்து விடுங்கள். பாஸ்கரின் உடல் ஆடப்பஸிக்குப்போயிருக்கிறது."
யமுனை நதியைக் கடந்து தார்ச்சாலையில் பறந்தான் கணேஷ். உத்தரப்பிரதேச சர்க்காரின் பஸ்கள் நீல நிற அசுரர்களாக விரைந்து கொண்டிருந்தன. இந்திரா மரத்துக்கு மரம் புன்னகைத்துக் கொண்டிருந்தார். ஜீப்களில் ஜனசங்கத்து மஞ்சள் கொடிகள் வோட் தாகத்தில் துடித்துக் கொண்டிருந்தன.
ஷாத்ரா டவுனுக்குள் நுழைந்ததும் மஞ்சள் அடித்த சுவர்களில் முக்கோணங்கள். அருகில் பொம்மைத் தலைகள் சிரித்தன. அருகிலேயே இழந்த சக்தி வைத்தியர்கள் வாலிபர்களை எழுந்து நிற்குமாறு விளம்பரங்களில் அறை கூவினார்கள். ஒலி பெருக்கி தந்த 'ஆராதனா' கணேஷின் கார் வேகத்தினால் டாப்ளர் எஃபெக்டில் சுருதி மாறியது. தலைப்பாகை அணிந்த விவசாயிகள் முட்டாள்தனமாகக் குறுக்கே கடந்தார்கள். முதன்மந்திரி போல் ஒரு மாடு தன் இடத்தை விட்டு நகர மறுத்தது. புழுதிப் படலங்களின் ஊடே எண்ணற்ற சிறுவர்கள் தேர்தல் நோட்டீஸுக்காக ஸ்பீக்கர் கொண்டை வைத்த அம்பாஸிடரைத் துரத்தினார்கள்.

**(தொடர்ந்து வரும்)**

# 15 அனிதா இளம் மனைவி



## சென்றவாரம்

அங்கே அனிதாவைக் காணவில்லை.
அங்கு வந்த மோனிக்காவிடம் பாஸ்கர் கொலையானதைப்பற்றிக் கூறுகிறான் கணேஷ்.
மீனாட்சியிடம் அனிதாவைப் பற்றிக் கேட்க, பாஸ்கருடன் நேற்று வெளியில் போனதாகக் கூறுகிறாள்.
மீனாட்சியை வாசலில் இருக்கச் சொல்லிவிட்டு ஷர்மாவின் அறையைச் சோதனையிடுகிறான் கணேஷ்.
முதல் பக்கத்தில் சிறிய சதுரமாய் வெட்டப்பட்ட டைம்ஸ் செய்தித்தாளை மட்டும் எடுத்துக் கொண்டு தனது அறைக்கு வருகிறான். கூடவே மோனிக்காவும் வந்துவிடுகிறாள்.
மாடிப்போர்ஷன்காரரிடம் அதே செய்தித்தாளைக் கேட்டுப்பெறும் கணேஷ், 'வெட்டப்பட்டிருந்த விளம்பர'த்தில் 'ஷார்தாவில் வீடு விற்பனைக்கு' என்ற விபரத்தைக் காண்கிறான்.
மறுநாள் விசாரிக்கத் திட்டமிடுகிறான். இனி...

நாவல் உலகின் நவீன எழுத்துவேந்தன் சுஜாதா

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: ஷப்ரி பெய்சால்.
வயது: 19
முகவரி: 45, ஶ்ரீதர்மராம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு-10.
பொழுது போக்கு: வழமையானவை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெயர்: ஏ.குமார். | பெயர்: ரி. கலா. | பெயர்: கே. நவநீதராஜ். | பெயர்: முஹமட் பயாஸ். | பெயர்: ஜ. சக்கியா. | பெயர்: ஜே. உபைதுல்லா. | பெயர்: ஆர். மஹ்றூப் ஜவ்ஸீர். |
| வயது: 29 | வயது: 20 | வயது: 25 | வயது: 18 | வயது: 16 | வயது: 23 | வயது: 18 |
| முகவரி: 46/1, மோதர வீதி, கொழும்பு-15. | முகவரி: 20, பெம்.சி.சி.கம, வாகக்குல, ருவான்வெல்ல. | முகவரி: ST. GELLEN STR-80, 7320. SARGANS, SWITZERLAND. | முகவரி: 46, பிரதான வீதி, தலவாக்கலை. | முகவரி: 139, பட்டினப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று-06. | முகவரி: P.O.BOX - 26154, CODE NO - 13122, SAFAT, KUWAIT. | முகவரி: 9/35, வெஸ்ரன் சோல்ரன் வீதி, புத்தளம். |
| பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி. | பொழுதுபோக்கு: வானொலி, பேனாநட்பு. | பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி. | பொழுதுபோக்கு: பேனாநட்பு, ரீ.வி. | பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை. | பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு. | பொழுதுபோக்கு: ரீ.வி., வானொலி. |

| | | | |
|---|---|---|---|
| பெயர்: ஏ. குகன். | பெயர்: சி. காண்டீபன். | பெயர்: ஏ. கிருஷ்ணகுமார். | பெயர்: முகமட் ஷப்ரி. |
| வயது: 25 | வயது: 18 | வயது: 17 | வயது: 19 |
| முகவரி: P.O.BOX-5700, JEDDAH-21432, SAUDI ARABIA. | முகவரி: 49/19, சிவன் வீதி, திருகோணமலை. | முகவரி: கிளைஸ்டெல், அக்கரப்பத்தனை. | முகவரி: 5, ஜே.எச். மாவத்தை, கங்கனங்கொட, பேருவளை. |
| பொழுது போக்கு: கதைப்புத்தகம், ரீ.வி. | பொழுது போக்கு: ரீ.வி. | பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம். | பொழுது போக்கு: வழமையானவை. |


படிப்பகம்

www.padippakam.com



# தூக்கு மேடைக் குறிப்பு — 17

ஜூலியஸ் பூசிக்

**1941,** பெப்ரவரியில், மத்திய கமிட்டி அங்கத்தினர்கள் அத்தனைபேரும் கைது ஆகவில்லை. ஒரு அங்கத்தினர் தன்னந் தனியாய் நின்றார். அவர்தான் ஜிகா.

அவரை எனக்கு வெகு காலமாகத் தெரியும். அவர் பேரில் எனக்கு அமோக மான பற்று எப்போதுமே உண்டு. ஆனால் இப்போதுதான் நாங்கள் ஒருவரையொருவர்–நாங்கள் கூட்டாக மேற்கொண்ட காரியத்தில்–நன்கு புரிந்து கொண்டோம்.

அவர் கட்டை குட்டையானவர். எப்போதும் முகத்தில் புன்னகை தவழும். வேலையில் ஈடுபாடும், ஊசலாடா உறுதியும், சளைக்காமல் உழைப்பதும், விட்டுக் கொடுக்காது போராடுவதும் அவர் குணங்கள். அவருக்குத் தன்னுடைய வேலையைத் தவிர வேறு விவகாரங்கள் தெரியாது. வேறு விவகாரங்களைத் தெரிந்து கொள்ள அவர் விரும்புவதுமில்லை. தன் கடமையைச் செய்வதற்காக. அவர் தன் சுய சௌகரியங்கள் அனைத்தையும் விட்டுவிட்டார்,

## இதுவரை

செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்.


ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார்.

அவர் இறந்து விட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள்.

அவளை மட்டும் போலந்துக்கு கடின வேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப்போகிறார்கள். சிறையில் சித்திரவதைகள் மத்தியில் உறுதியோடு தாக்குப் பிடித்தவர்களைப் பற்றி விபரித்த பூசிக், சிறை அதிகாரிகள் பற்றியும் விபரிக்கிறார்.

தமது இயக்க வரலாறுபற்றிக் கூறும் பூசிக், மத்திய கமிட்டி உறுப்பினர்கள் கைது பற்றிச் சொல்கிறார்.

இனி....



ஜனங்களை அவர் நேசித்தார். ஜனங்கள் அவரை நேசித்தனர். ஆனால் எவனையும் அவனுடைய குறைபாடுகளைக் கவனியாமல் விடுவது மூலம், அவர் தன் வசப்படுத்தியதில்லை.

சில நிமிடங்களில் நாங்கள் ஒரு முடிவைக் கண்டு விஷயத்தை முடித்துக் கொண்டோம், அதிக நேரம் வேண்டியிருக்கவில்லை. சில நாட்களில்– மே மாதம் முதல் ஜிகா தொடர்பு வைத்திருந்த புதிய தலைமையின் அங்கத்தினர் ஒருவரையும்–மூன்றாவது நபரை–நான் தெரிந்து கொண்டேன்.

அவர்தான் ஹொன்சாசெர்னி. அவரும் அபூர்வமான தோழர்களில் ஒருவர். ஸ்பெயினில் போர் புரிந்தார். யுத்தம் மூண்டபிறகு அங்கிருந்து நாஜி ஜெர்மனியைத் தாண்டி இங்கு வந்து சேர்ந்தார். வரும்போது சுவாசப்பையில் ஒரு காயம். எப்போதுமே ஒரு படை வீரனாகவே இவர் இருந்திருக்கிறார்.

தலைமறைவு வாழ்க்கையில், நிறைய அனுபவம் இவருக்கு உண்டு. ஆற்றலும் உண்டு. எப்போதுமே முன் முயற்சி செய்து காரியத்தைத் துவங்குகிறார்.

கடுமையான போராட்டம், மாதக் கணக்கில் நீடித்தது. எங்களை முதல்தரமான தோழர்களாக உருவாக்கிற்று. நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் விசேஷப் பயிற்சி பெற்றிருந்ததானது முற்றிலும் பொருத்தமாக இருந்தது. மனப் போக்கும் எங்களுக்குள் ஒத்ததாகவே இருந்தது.

ஜிகாதான் அமைப்பாளர். யதார்த்த உண்மை அவர் கண்ணில் சட்டென்று தைத்து மூளையில் ஏறும். பேச்சு வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் இருக்கும். அலங்கார அடுக்குச் சொற்களால் அவரை ஏமாற்றிவிட முடியாது; எந்த ரிப்போர்ட்டானாலும் சரி, அதன் முழு முக்கியத்துவம் விளங்கும்வரை துருவித் துருவிப் பார்ப்பார்.

ஒவ்வொரு யோசனையையும் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் கவனித்து பார்சிப்பார். பிறகு மிகவும் கனிவாக, ஆனால் உறுதியாக, கோஷ்டியின் தீர்மானத்தை நிறைவேற்றுவார்.

நாச வேலைகளைக் கவனிப்பதும், ஆயுதமேந்திய புரட்சிக்கு ஆயத்தம் செய்வதும், செர்னி வகித்த பொறுப்புகளாகும். அவர் எப்போதுமே இராணுவ பாஷையில்தான் சிந்திப்பார். புதிய முறைகளைச் சுலபமாகக் கண்டுபிடிப்பார். திட்டமிடுவதெல்லாம் பெரிய அளவில்தான் இருக்கும். உழைப்பதில் களைப்பதில்லை. புதிய ஆட்களையும், சாதனங்களையும் தேடிக் கண்டுபிடிப்பதில் சமர்த்தர்.

நான் பத்திரிகைக்காரன். என் மூக்கின் உதவியைக் கொண்டு–மோப்பம் பிடித்து–அரசியல் கிளர்ச்சி செய்ய வேண்டும் நான். சில சமயம் கற்பனை ரதம் கட்டவிழ்த்து ஓடிவிடும். தராசுத் தட்டுகளைப் பிடித்து முள்ளுக்கு, நேராக நிறுத்துவதுபோல், இரு பக்கங்களையும் சமப்படுத்துவதும் ஒற்றுமையை உண்டு பண்ணுவதும் என் பழக்கம்.

எங்கள் வேலைப் பிரிவினை, உண்மையில் வேலைப் பிரிவினை அல்ல; அது பொறுப்புப் பிரிவினையேயாகும். எல்லோரும் எல்லா சமயங்களிலும் கூடி, எல்லா விஷயங்களையும் விவாதிப்பது என்பது முடியாது. ஆகையால் ஒவ்வொருவரும் தத்தம் காரியத்திற்குப் பொறுப்பு வகிக்கும் போதே, அவசியப்படுகிறபோது மற்றவருடைய துறையிலும், அவரைக் கலக்காமலே முடிவு எடுக்க வேண்டியிருக்கும்.

அப்படி எடுக்கும் முடிவுக்கும், செய்கைக்கும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். பெப்ரவரியில் நம் கட்சியின் பேரில் விழுந்த பேரிடி, எங்களுடைய தொடர்புகள் அனைத்தையும் அறுத்துவிட்டது.

ஸ்தாபனத்தில் சில பகுதிகள் பூராவுமே நசுக்கப்பட்டுவிட்டன. வேறு சில தலைதூக்கித் தம்மைத் திருத்தி அமைத்துக் கொண்டன. ஆனால் அவற்றைத் தேடித் தொடர்பு கொள்வது சாத்தியமாக இல்லை. தொழிற்சாலைகளிலிருந்து அனேக அமைப்புகள், சில பிரதேசக் கமிட்டிகள் கூட, யாருடனும் தொடர்பு இல்லாமல் தனிமையில் பல மாதங்கள் இயங்கின. அவர்களுக்கு அப்போதைக்கப்போதைய நிலவரத்தைப் பற்றி வழிகாட்ட முடியவில்லை. மத்திய கமிட்டியின் பத்திரிகையை அவர்கள் பெற்று, அதில் குறிக்கப்படும் பொதுக்கொள்கையைப் புரிந்து, அவர்கள் பின்பற்றுவார்கள் என்று, இருந்த இடத்தில் இருந்தபடியே நம்புவதைத் தவிர, எங்களால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

வசிப்பதற்கே இடமில்லாமல் நாங்கள் தவித்த அந்தச் சமயத்தில், வேலை செய்வது மிகமிகக் கஷ்டமாக இருந்தது. பழைய இருப்பிடங்களை எங்களால் பயன்படுத்த முடியவில்லை. அவை, ஒரு வேளை எதிரியின் கண்பார்வையில் ஒவ்வொரு வினாடியும் இருக்கக்கூடும். முதலில் எங்களிடம் துளிப் பணம் கூட இல்லை. ரேஷன் கார்டு இல்லாமல் உணவு பெற முடியவில்லை. ரேஷன் கார்டு பெற்றால், நாங்கள் யார் என்று எதிரிக்குத் தெரிந்துவிடும். இந்த முட்டுக்கட்டைகளை எல்லாம் தாண்ட வேண்டியிருந்தது. எந்தச் சமயத்தில்? தயாரிப்புச் செய்யவும், கட்டுவதற்கும் காலம் கடந்துவிட்ட சமயத்தில்! போராட்டத்தில் முழுவதும் ஈடுபட வேண்டிய நேரத்தில்! சோவியத் யூனியன் தாக்கப்பட்டுவிட்ட வேளையில்! ஆக்கிரமிப்பாளனை எதிர்த்து உள்நாட்டு யுத்தத்தை நடத்துவது– நாச வேலைகள் மூலம் சிறுசிறு போராட்டங்களை நடத்துவது–எங்களுடைய வேலையாகும்.

எங்களுடைய சக்தியைக் கொண்டு மட்டுமல்ல; முடிந்த அளவுக்குச் செக் தேசம் பூராவும் சக்தியையும் திரட்டித் தாக்குவதன் மூலம் 1939–லிருந்து 1941-வரையில், தயாரிப்புக் காலத்தில், ஜெர்மன் போலிஸுக்கு எதிராக மட்டுமல்லாமல், செக் அரசாங்கத்திற்கு எதிராகவும் கட்சி, தன் இரகசிய வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது

கொடூரமான அடக்கு முறைக்கு ஆளான போதிலும், கட்சி தன்னை வலுப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது; ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராக தன் ஸ்தாபனத்தை பரிசுத்தமாக்கி உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. அதே சமயம், தேச மக்களின் நம்பிக்கையையும் பெற வேண்டியிருந்தது. அப்படியென்றால், ஒரு கட்சியையும் சேராத ஜனங்களை அணுக வேண்டியிருந்தது. சுதந்திரத்திற்காகப் போராட உறுதிகொண்ட ஒவ்வொருவருடனும் பேச வேண்டியிருந்தது.

தேசமக்கள் அனைவரையும் போராடும்படி அறைகூவி அழைக்க வேண்டியிருந்தது; தயக்கத்தை விடாதவர்களைக் கவனிக்க வேண்டியிருந்தது.

1941–ம் வருடம் செப்டம்பர் மாதத் தொடக்கத்தில், முடமாக்கப்பட்ட நம் ஸ்தாபனத்தை நாம் பூரணமாகத் திருப்பிக் கட்டி விடவில்லை என்றாலும், அதற்குள் குறிப்பிடத்தக்க அளவு பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்றக் கூடிய உறுதியான தோழர்கள் பலரை நாம் தயாரித்து விட்டோம்.

கட்சியின் பிரசாரம் ஜனங்களின் கவனத்தைக் கவர ஆரம்பித்தது. நாச வேலைகள் பரவின. எங்கும் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள் நடந்தன. செப்டம்பர் மாத முடிவில், அவர்கள் ஹைட்ரிச்சை நம் பேரில் பழி வாங்க ஏவி விட்டனர்.

(தொடர்ந்து வரும்)

> "பழைய இருப்பிடங்களை எங்களால் பயன்படுத்த முடியவில்லை. முதலில் எங்களிடம் துளிப் பணம்கூட இல்லை. ரேஷன்கார்டு இல்லாமல் உணவு பெற முடியவில்லை. ரேஷன்கார்டு பெற்றால், நாங்கள் யார் என்று எதிரிக்குத் தெரிந்துவிடும்". — பூசிக்


**195 வது முரசில் ஆரம்பமாகிறது**

**புதிய தொடர்**

விபரங்கள் அடுத்த முரசில்


# அப்பா தப்பே செய்ததில்லையா?

ரூபராணி

"அற்ப விஷயங்களுக்கெல்லாம் அப்பா இப்படி ஏன் கோபிக்கிறார்? இவங்கெல்லாம் அப்பாவா வர்றதுக்கு முந்தி தப்பே செய்திருக்க மாட்டாங்களா? என்ர சினேகிதருக்கு முன்னால அப்பா என்னத் திட்டினாரே..? அது என்னை எவ்வளவு தாக்கியிருக்கும் என்று ஏன் அப்பாவால் யோசிக்க முடியேல்ல? எண்ணைக்காவது ஒருநாள் அப்பா அன்பாகப் பேசி நாம பார்த்தமா?" தினேஷ் ஒரு சட்டத்தரணிபோல் தன் தாயைப் பார்த்து வாதிட்டான்.

அவன் தாய் பாக்கியத்தின் கண்கள் பயத்தால் விரிந்தன. தினேஷின் அப்பா சுந்தரத்தின் காதுகளில் இந்த வார்த்தைகள் விழுந்துவிடக்கூடாதே என்று நடுங்கினாள்.

சுந்தரம் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தார். பாக்கியத்துக்குக் கணவனைக் கேள்விகேட்டு பழக்கமில்லை. அவர் கோபிக்கும்போதெல்லாம் அவளால் அமைதியாக இருக்க முடிகிறது. அழாமல் சிரிக்க முடிகிறது.

இந்தப் பண்புகளை மகனிடம் எதிர்பார்த்த பாக்கியம் ஏமாந்து போனாள். மகனுக்கும் அப்பாவுக்கும் சின்ன விஷயங்களில் கூட வாதவிவாதங்கள்.

"உங்களைப்போல்தான் உங்கள் பிள்ளைகள் இருப்பார்கள் என்று எப்டிம்மா எதிர்பார்ப்பீங்கள்? எங்களுக்கும் தன்மானம் இருக்கு. மத்தவங்களும் எங்கள மதிக்க வேணும் என்கிற ஆசையிருக்கு, எல்லாத்துக்கும்மேல பெற்றார் பிள்ளைகளப் புரிஞ்சுக்க வேணும் என்ற எதிர்பார்ப்புமிருக்கு. ஏம்மா உங்களால இதையெல்லாம் யோசிக்க முடியிறதில்ல? சொல்லும்மா?"

தாயின் தோள்பட்டையை உலுக்கிய தினேஷ் கடைசியில் உடைந்துபோனான்.

'அப்பா சத்தம் போடுறவர்தான். அவரு 'நல்லவர்' எண்டது எனக்கு எப்போதோ புரிஞ்ச விஷயம். நான் அவருடைய வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுப்பதில்ல.' பாக்கியம் தனக்குள்ளே முணுமுணுத்தாள். தினேஷ் தன் அறைக்குள் போய்ச் சாப்பிடாமல் இருந்துவிட்டான்.

அவன் ஏ.எல்.முடித்துவிட்டு, கொம்பியூட்டர் டிப்ளோமாப் படித்துக் கொண்டிருந்தான்.வயசு இருபத்திரண்டைத் தாண்டவில்லையானாலும் வாட்ட சாட்டமாயிருந்தான்.

குடும்பத்தில் ஒரே பிள்ளை. தகப்பனின் சிடுசிடுப்பைத் தாங்க முடியாது போனால் அம்மாவோடு அதைச் சொல்லிக் காட்டுவதில் தினேசுக்கு அப்படியொரு திருப்தி.

> ஆனால்.... அவர் மனதில் முள்ளாகக் குத்திய விசயம் அவரை வேதனைப்பட வைத்தது.



சுந்தரம் கிணற்றடியில் இருந்து குரல் கொடுத்ததும் பாக்கியம் தோளில் துவாயைப்போட்டுக் கொண்டு விரைந்தாள். அவர் குளிக்கப் போகும்போது துவாய் கொண்டு போகும் பழக்கமில்லை என்று நினைத்த பாக்கியத்தின் உதட்டில் புன்னகை தவழ்ந்தது.

சுந்தரத்துக்குப் புறமோஷன் கிடைத்த செய்தி பாக்கியத்தின் காதில் தேனாகப் பாய்ந்தது. அன்று மாலை அவருடைய ஆபீஸ் நண்பர்களுக்குப் பார்ட்டி. ஆட்டமும் பாட்டும் இல்லாவிட்டாலும் அமர்க்களம் பண்ணிவிட்டார் சுந்தரம். ஆனால் அவர் மனசில் ஒரு முள்ளாய்க் குத்திய அந்த விஷயம், அவரை வேதனைப்படவைத்தது.

அவர் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாகக் கூடத்தில் நடந்தார். "பாக்கியம்...." சுந்தரத்தின் கர்ஜனை கேட்டு அவள் இயல்பான அமைதியுடன் வந்து நின்றாள்.

"உன்ர மகன் செய்த காரியத்தைப் பார்த்தியா? என்ர மானம் போச்சு கௌரவம் போச்சு...ச்சீ சிகரட் பாக்கட் வாங்கியா என்று சொன்னன்பார்... வெட்டொன்று துண்டு ரெண்டாய் "மாட்டேன்" என்று சொல்லிற்றில்லையா போனான்? ச்சே நம்மப்பத்தி வந்தவங்க என்ன நெனச்சிருப்பாங்க? இடியட்" அருகில் இருந்த மேசையில் ஓங்கியடித்துக் கத்தினார் சுந்தரம்.

"தினேஷின்ர பிறெண்ட்ஸ் நேத்து நம்மப்பத்தி என்ன நெனச்சிருப்பாங்களோ... அதையேதான் உங்க பிறெட்ன்சும் இண்ணைக்கி நெனச்சிருப்பாங்க!" முதல் முறையாக பாக்கியம் நிதானமாகச் சொன்ன பதில் சுந்தரத்தின் தலையில் ஓங்கி அடித்தது போல் இருந்தது.



படிப்பகம்

**வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களின் பலவீனத்தைப் புரிந்துகொண்டு பணம் பறிக்க முயலும் சிலருக்காக இக்கதை.**

# மீண்டும் அம்மா

கழுவாஞ்சிக்குடி யோகன் — சுவிஸ்



அதிகாலைப் பொழுது புலர்ந்துகொண்டிருந்தது. முரளி தூக்கம் வராமல் புரண்டு, புரண்டு படுத்தான். சற்றுமுன்தான் அவனது நித்திரை கலைந்துபோனது. மறுபடியும் கண்கள் அயர்ந்து போக மறுத்தன. கட்டிலில் கிடந்தவாறு கைகளை உயர்த்தி ஒரு சோம்பல் முறித்துவிட்டு, பக்கத்தில் வைத்திருந்த மணிக்கூட்டைப் பார்த்தான். அது நான்கு மணிக்குப் பத்து நிமிடங்கள் எனக் காட்டியது.

'ஓ......ஆறு மணிக்கு எலாம் அடிக்கத் தொடங்கும். இடையில் இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் படுக்கலாம்' என நினைத்துக்கொண்டவன், இரட்டைப் போர்வையை காலிலிருந்து தலைவரை இழுத்துவிட்டு கண்களை இறுக மூடி தூக்கத்தை வரவழைக்க முயன்று கொண்டிருந்தான். எதிர்பாராத அந்த வேளையில் ரெலிஃபோன் அலறல் திடுக்கிட வைத்தது. போர்வையை விலத்திவிட்டு எழுந்து ரெலிஃபோனைத் தூக்கினான் முரளி.

"வவுனியாவில் இருந்து கதைக்கிறம். இந்த நம்பருக்கு உடனே கோல் எடுங்கோ!" என்று மறுமுனை நம்பரைச் சொன்னது.

இலக்கங்களை எழுதிக் கொண்டிருக்கும் போதே அவனது மனம் படபடக்கத் தொடங்கிவிட்டது.

'யாருக்கு என்ன நடந்ததோ?

எது நடந்தாலும் இந்த மாதச் சம்பளத்திற்கும் வேட்டு வந்தாயிற்று,' எண்ணிக் கொண்டவன் றிசீவரை தூக்கிக் கொண்டு அவர்கள் சொன்ன இலக்க பட்டன்களை அமுத்தினான்.

"சுவிஸிலிருந்து முரளி கதைக்கிறன். இந்த நம்பருக்கு இப்போ கோல் எடுக்கச் சொன்னீங்கள்?" விசாரித்தான்.

"கொஞ்சம் பொறுங்கோ!" என்ற குரலைத் தொடர்ந்து "தம்பி, நான் பூபாலபிள்ளை பேசிறன்."

"எந்தப் பூ...பா....ல...பி....ள்...ளை?"

"அதுதான் உன்ர வீட்டுக்கு மூணுவீடு தள்ளியிருக்கிற பஞ்சவர்ணத்தின்ர புருஷன்."

அவரை ஞாபகப்படுத்திக் கொண்ட முரளி, "நீங்களா? என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"உன்ர அம்மாவுக்குக் கொஞ்சம் சுகமில்ல. ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கிறம்."

"அம்மாவுக்கா? என்ன நடந்தது?" பதறினான் முரளி.

"தம்பி, பதட்டப்படாமல் கேளும். வயிற்றுக்குள் ஏதோ வருத்தமாம். ஒரு ஒப்பரேஷன் செய்தால் சரிவரும் என்று சொல்றாங்கள், கொஞ்சம் காசு செலவாகும் என்று நினைக்கிறன், அதுதான் உம்மோட கதைக்கலாமென்று," இழுத்தார் அவர்.

"ஐயா, அம்மாவின் உயிர்தான் முக்கியம். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, நான் அனுப்பி வைக்கிறன்; அம்மாவைக் குணமாக்கப் பாருங்கோவன்!" கெஞ்சினான்.

"நீர் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நான் இருக்கிறன்," என்றவரிடம் எக்கவுண்ட் நம்பர், அடையாள அட்டை இலக்கம் இவைகளைக் கேட்டு எழுதிக் கொண்டான் முரளி.

'ஒன்றே ஒன்று என்று என்னைப் பொத்திப் பொத்தி வளர்த்தெடுத்த தெய்வமல்லவா அம்மா? அந்த அம்மாவுக்கா இந்த நிலை? ஆண்டவரே அவவுக்கு எதுவும் நடந்திடக் கூடாது.' மனமுருகிப் பிரார்த்தனை பண்ணினான். அன்றைக்குக் கையில் கொஞ்சமும் பணம் இருக்கவில்லை, சினேகிதன் ஒருவனிடம் கடன் வாங்கிய முரளி உடனே பணத்தை அனுப்பி வைத்தான்.

அவனுக்கு எப்பவுமே சமய அனுஷ்டானங்களில் நம்பிக்கை அதிகம் இருந்தது. இரண்டு நாள் விடுமுறையில் இரு தேவாலயங்களுக்குச் சென்று நேர்த்தி வைத்துவிட்டுக் காத்திருந்தான்.

அப்போது வவுனியாவிலிருந்து திரும்பவும் ரெலிஃபோன் வந்தது.

"தம்பி நான் பூபாலபிள்ளைதான் கதைக்கிறன்."

"சொல்லுங்கோ ஐயா; அம்மாவுக்கு இப்போ எப்படியிருக்கிறது?"

ஆர்வம் பொங்க விசாரித்தான்.

"தம்பி நீர் மனதைக் கல்லாக்கிக் கொள்ளும். அம்மா உன்னைவிட்டுப் போயிற்றா?"

கதறினான். ரெலிஃபோனில் துடித்துக் கொண்டிருந்தான். அவரும் ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

தனிமையில் இருந்த முரளி தனது உள்ளக் கிடக்கைகளையெல்லாம் ரெலிஃபோனிலேயே சொல்லி அழுது தீர்த்தான். ஒரு நிலையில் ஓய்ந்தவன் சட்டென நினைவு வந்தவனாக,

"ஐயா, ஈமக்கிரியைகள் எல்லாம் எப்படிப் பண்ணப்போறீங்க?"

"அதுதான் எனக்கும் தெரியல்ல தம்பி." அவர் சொன்னார்.

"என் அம்மாவின் ஈமைக்கிரியைகளை ஒரு குறையுமில்லாமல் செய்யுங்கோ! அதற்கான செலவுகளை நான் அனுப்பிவைக்கிறன்."

கூறிய முரளி ஒரு கணிசமான தொகைப் பணத்தை தாயின் இறுதிச் சடங்குகளுக்காக அனுப்பினான்.

அவனுக்குச் சொந்தங்களென்று சுவிஸில் யாருமே கிடையாது. சினேகிதர்களுடன் சேர்ந்தே தாயின் துக்கநாட்களை அனுஷ்டித்தான். தாயும் மறைந்து மாதமொன்று ஓடிக்கொண்டிருந்தது. அந்தத் துயர நினைவுகளிலிருந்து மெதுவாக விடுபட்டுக்கொண்டு வந்தான்.

அன்று அவனுக்கு மனநிலை திருப்தியாக இருக்கவில்லை.

வீட்டிலேயே அடைபட்டுக்கிடந்தான்.

அப்பொழுது கொழும்பிலிருந்து 'ரெலிஃபோன் கேல்' என்றார்கள். மறுபடியும் நெஞ்சிடி வந்தது.

நடுக்கத்துடன் தொடர்பு கொண்டான்.

"தம்பி! என்ர ராசா; எப்படியப்பு இருக்கிறாய்?"

முரளி ஆச்சரியத்தில் உறைந்து போனான்.

"நான் உன் அம்மா ராசா, ஏன் பேசாமல் இருக்கிறாய்? என்னுடன் கோபமே?" அவனின் அம்மாதான் கதைத்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா...நீ.... எப்படி அணே?....."

"எப்படியெண்டால்? இவ்வளவு காலமும் சுகமில்லாமல் இருந்தநான், இப்பதான் கொழும்புக்கு வரமுடிஞ்சிது."

"அந்தப் பஞ்சவர்ணத்தின் பூபாலபிள்ளை குடும்பம் எப்படியிருக்கிறது?"

"ஏன் மகன்? அவர் போன மாசந்தான் பெட்டைக்குக் கல்யாணஞ் செய்துவச்சுப் போட்டு சந்தோஷமாக இருக்கிறார்."

'அப்படியென்றால் அம்மாவின் இறப்பு பணம் பறிக்கும் நாடகமா? என்ன கீழ்த்தரமான மனிதர்கள்? எது எப்படியோ என் அம்மா உயிருடன் இருக்கிறாவே, அது போதும் எனக்கு.' மகிழ்ந்துகொண்டவன் தாயுடன் தொடர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தான்.

---

# மேய்ப்பவர் மேய்த்தால்...!

**"மச்சான்! இந்த நாய்க்கும் இங்கிலீஷ் தெரியும்போல கிடக்கு!"**



கல்வியூர்ச் சந்திரன் - கோட்டைக்கல்லாறு

வாசலில் சங்கிலியோடு பிணைக்கப்பட்டிருந்த உயர்ந்த இன நாய் லொள்... லொள்... என்று நிறுத்தாமல் குரைத்துக் கொண்டே இருந்தது.

வீட்டுக்குள் இருந்து எவரும் எழுந்து வெளியே வருவதாகத் தெரியவில்லை.

"அதோ அந்த மூலையில் நிக்கும் தென்னை மரம் நல்ல பொருத்தம்டா மச்சான்," என்றான் ஜெயக்குமார். ஊரில் பொதுவேலை, சிரமதானம், ஏதாவது கொண்டாட்டம் என்றால் ஜெயக்குமார் பின்னாலே கண்ணன், ஆனந்தன், சுதா, தயா, முத்துக்குமார், கிப்பி, வெள்ளை இப்படி சம வயதுடைய எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து விடுவார்கள்.

மதுரா விளையாட்டுக் கழகம் உருவாக்கிய– களியே போடாத கரப்பந்தாட்ட மைதானத்தின் இரண்டு தூண்களும் கறையான் அரித்து பழுதடைந்தமையால் புதிய தூண்கள் மாற்றும் பொதுப் பணியிலே தென்னை மரந்தேடி ஜெயக்குமார் குழுவினர் வீடு தோறும் பவனியில் சென்றனர்.

நாய் குரைத்துக் கொண்டே இருந்தது. சற்று நேரத்தில் "ஏய்... டோண்ட் ஷவுட் லக்கி!" என்றவாறே கந்தப்பு வாத்தியாரின் மூத்தமகள் கதவைத் திறந்து மெதுவாக வாழைப் பொத்தி போல தலையை வெளியே காட்டினாள்.

"தங்கச்சி! அப்பா உள்ள இருக்கிறாரா?" வினவினான் ஜெயக்குமார்.

"அப்பா! இந்தா உங்கள ஆரோ, தேடுறாங்கள்," என்றவாறே வந்தவள் உடனே உள்ளே போனாள்.

"மச்சான், இந்த நாய்க்கும் இங்கிலீஷ் தெரியும்போல. பாத்தா இதுவும் வெளிநாட்டு நாய் மாதிரித்தான் தெரியுது. இங்கயும் எல்லாரும் சுவீஸூம் லண்டனும்தானே?" என்றான் தனது வழமையான பகிடித் தோரணையில், கண்ணன்.

லக்கி மீண்டும் குதிரைபோல் பாய்ந்து லொள்.. லொள்... என்றது.

"ஆரு.. தம்பி நீங்கள்? காலங்கெட்ட நேரம்!" கந்தப்பு வாத்தியாரின் கரகரத்த குரல் தெம்புக் கொடி காட்டவில்லை.

"ஐயா வாங்க.. நான் உங்கட சுந்தரத்திட மகன், ஒண்டுமில்லையா; எங்கட வொலிபோல் மைதானத்துக்கு தூண் ரெண்டு போடுவமெண்டு... அதுதான் உங்களிட்ட...." என்று தியாகராஜர் கீர்த்தனை இழுத்தான் ஜெயக்குமார்.

"எப்ப பாத்தாலும் லிஸ்ரோடதான் வருகுதுகள்... ஆ... எங்க உங்கட கையில பைல், கொப்பி ஒண்டையும் காணல்ல?.. ஆ... பரவால்ல.. புள்ள, இஞ்ச வா மகள்! ஒரு அஞ்சு ரூபாக் காசு கொண்டு இதுகளுக்குக் கொடு...." என்றார் அந்தப் பென்சன் வாத்தியார்.

ஆமாம் அவர் நல்ல பணம் உழைத்தவர். அகதி அந்தஸ்தில் மூன்று ஆண் மக்களை வெளிநாடுகளுக்கும் அனுப்பி இருப்பவர்.

உடைந்து போன ஜெயக்குமார் ஒருவாறு சுதாகரித்துக்கொண்டே, "ஐயா நாங்க காசு சேத்து வரல்ல.. அதோ... அந்த மூலையில நிக்கிற தென்ன மரத்த எங்களுக்கு கிறவுண்டுக்கு தூணுக்குத் தந்தா அது போதும்," என்றான் ஜெயக்குமார் நகைச்சுவை இழையோட.

"அடி சக்கை எண்டானாம்; எழுபத்தியெட்டில பேயாடி அழிச்ச சூறாவளிக்கும் ஆடாத அந்த மரம், அரை லெட்சம் தந்தாலும் அத நான் தரமாட்டன். வேற எங்கையும் பாருங்க, வேணுமெண்டால் இந்த அஞ்சு ரூபாயையும் கொண்டு போங்க!" என்றுவிட்டு உள்ளே போக பின் திரும்பினார் வாத்தியார்.

'ஸர்ர்...' என்ற பிரேக் ஓசையுடன் வாத்தியாரின் முற்றத்தின் நேரே வீதியில் ஒரு 'எல்ப்' ரகத்து ரிப்பர் வாகனம் ஒன்று குலுங்கியவாறு நின்றது. வாகனத்தில் இருந்து ஆயுதம் தாங்கிய ஐவர் பாய்ந்து இறங்கினார்கள்.

இறங்கியவாறே, "பெரியவர் கத்தி, கோடரி தாங்க," என்றனர் வாத்தியாரிடம்.

அவர் ஏன் எதற்கு என்ற கேள்விகள் எதுவும் அவர்களிடம் கேட்கவில்லை. வழமையாகக் கேட்பவர்கள்தானே..? ஓடோடிச் சென்று கத்தி, கோடரி மற்றும் அவர்கள் கேட்காத மண்வெட்டி என்பனவும் கொண்டு கொடுத்தார்.

வந்தவர்கள் அழைத்ததால், இப்பொழுது ஜெயக்குமார் குழுவினரும் ஆயுதபாணிகளோடு பின்னால் இழுபட்டனர்.

மூலைத் தென்னை மரத்தின் ஓலை மட்டையைக் கூடத் தறிக்காமல், வாட்டசாட்டமாய் இருந்த சுதாவிடம் கோடரியைக் கொடுத்து தென்னை அடியை வெட்டச் சொன்னான் ஆயுதபாணிகளில் ஒருவன்.

"ஆண்டவா மதிலுக்கு மேல கீழ உழுந்திடக்கூடாது," என்று வாயாலே அழைத்தாள் எல்லாக் கடவுளையும், வாத்தியாரின் அன்பு மனைவி.

"மைதானத்துக்குப் போட்டாலென்ன, காவலரணுக்குப் போட்டாலென்ன...? எல்லாம் ஒரு அவசிய தேவைக்குத்தானே? இனியென்ன; நாங்களும் கெதியா சுவீஸுக்கோ, லண்டனுக்கோ போறதாத்தான் யோசனை..!" என்றார் வாத்தியார். நூறு மைல் வேகத்தில் காற்று வந்தது அவரின் மூக்கிலிருந்து– அவ்வளவு வேகமான பெருமூச்சு.

---

# சின்ன வயதினில்...

**யாராக இருக்கும் என்று நினைத்து வெளியே வந்தவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது**



யாழ் மு. கலை

சுதா, திருமலைக்கு வந்து வருடம் ஒன்று பூர்த்தியாகிவிட்டது. கரைந்து போன பொழுதுகளைச் சிரமப்பட்டுக் கழித்தாள் சுதா. கூண்டில் அகப்பட்ட கிளியாகவே இருந்தாள்.

சகல வசதிகளுடனும் பெரியம்மாவீட்டில் தங்கியிருந்தபோதிலும், மட்டக்களப்பில் சிட்டாய்ப் பறந்து திரிந்த இனிய காலங்களை அவளால் மறக்க முடியவில்லை. ஆனால் அக்கால நிகழ்வுகளை மறப்பதற்காகவே அவளைத் திருமலைக்கு அனுப்பிவைத்தார்கள்.

ஊரில் கலகலப்பாகக் காணப்பட்ட அவளது முகம், இங்கு வந்ததிலிருந்து பயிர் செய்யப்படாத தரிசு நிலம்போல வரண்டு காணப்பட்டது இன்று,

அக்காவின் கடிதம் சுமந்துவந்த செய்தி சுதாவை கலங்கவைத்துவிட்டது.

"உன்னை வெளிநாட்டு மாப்பிளைக்கு அனுப்ப அண்ணா அலுவல் பார்க்கிறார்," என்ற வரிகள் மீண்டும்... மீண்டும் நினைவில் வந்து பயமுறுத்திக் கொண்டிருந்தன.

நவாவுடன் கொண்ட காதலை மறக்க முடியாதிருந்த சுதாவுக்கு இந்தச் செய்தி வெந்த புண்ணில் வேல் பாய்வது போன்ற உணர்வைக் கொடுத்தது.

'நவாவை மறக்க வேண்டியதுதானா?'

'நவாவை மறந்து என்னால் வாழ முடியுமா?'

சுதாவின் மனதில் விடைகாண முடியாத வினாக்கள் தோன்றி மேலும் அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

உயர்தரம் படிக்க ஆரம்பித்த சில மாதங்களில் பாடசாலையின் ஒரே வகுப்பில் படித்த நவாவுடன் ஏற்பட்ட நட்பு காதலாக மாறியிருந்தது.

காதல் விவகாரம் சுதாவின் அண்ணன் ரமேஷ் காதில் விழுந்தது.

பலதடவை "நவாவுடன் பழகவேண்டாம்!" என எச்சரித்தும் அவள் நவாவுடன் பழகுவதை நிறுத்தவில்லை.

"சுதா, சின்ன வயதில் வாற காதல் நிலைக்காது. இது புரிந்துணர்வில் வராத ஒன்று. கொஞ்சநாள் விலகியிருந்து பார். அதன் உண்மையை நீயே உணர்ந்து கொள்ளுவாய்!" என சுதாவின் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு திருமலைப் பெரியம்மாவின் வீட்டுக்கு ரமேஷ் அவளை அனுப்பி வைத்தான். விருப்பமின்றி திருமலைக்கு வந்தாலும், அண்ணனின் எண்ணத்தைப் பொய்யாக்கிக் காட்ட வேண்டும் என்ற உறுதியுடனேயே வந்தாள். சின்ன வயதில் ஏற்படும் காதல்களும் நிலைக்கும் என்பதை அண்ணன் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காக வைராக்கியத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

ஆனால், நவா மீது கொண்ட காதலில் எவ்விதக்குறைவும் இல்லாதபோதிலும் அண்ணனின் இந்தத்திடீர் முடிவு சுதாவைச் சோர வைத்துவிட்டது.

இதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றியே சுதாவின் சிந்தனை சுழன்று கொண்டிருந்தது.

திருமலைக்கு வந்ததிலிருந்து நவாவுடன் எந்தத் தொடர்புமின்றி இருக்கும் சுதாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

முடிவு எதற்கும் வரமுடியாது பொழுது நகர்ந்து கொண்டிருந்த வேளையில்,–

"சுதா உன்னைத்தேடி ஒரு பிள்ளை வந்திருக்கு!" என்ற பெரியம்மாவின் குரல் சுதாவின் சிந்தனைக்குத் தடைபோட்டது. 'யாராக இருக்கும்?' என்பதை அறியும் ஆவலுடன் வெளியே வந்தவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவளின் உயிர்த்தோழி புவனா சிரித்த முகத்துடன் நின்றாள். புவனாவைப் பார்த்த சுதாவுக்கு, குழப்பமான மனநிலைக்கு ஒத்தடம் கிடைத்தது போலிருந்தது.

சுதாவின் ஊரைச் சேர்ந்த புவனா, சிறு வயது முதல் சுதாவுக்கு நெருங்கிய நட்பாக இருந்து வந்தாள்.

சுதாவின் காதல் விவகாரங்களை முழுமையாக புவனா அறிவாள். அதனால் புவனாவைச் சந்தித்ததனால் தனது பிரச்சனைக்கு தீர்வு ஏதாவது எடுக்கலாம் என்ற சந்தோசத்தில் தோழியைக் கட்டி அணைத்துக்கொண்டாள்.

"நீ எப்படி இங்கை வந்தனி?" என்றாள் சுதா.

"வில்லூன்றி கந்தசுவாமி கோயிலடியில் என்ரை அன்ரி ஒராள் இருக்கிறா; அங்கை வந்த படியாலை தான் உன்னையும்–இவ்வளவு நாளைக்கப்புறம் பார்க்க முடிந்தது," என்றாள் புவனா.

நீண்டநாட்கள் பிரிந்த தோழியர் சந்தித்துக் கொண்டால் சொல்லவும் வேண்டுமா? இனிமையாகப் பொழுது கழிந்து கொண்டிருந்தது.

இடையில்,

"நீ இங்கு வந்ததும் உங்களுக்கிடையில் ஏற்பட்ட இடைவெளி நவாவை உன்னிடமிருந்து பிரித்துவிட்டது," என்று புவனா சொன்னதன் அர்த்தம் புரியாத சுதா கேள்விக் குறியுடன் புவனாவைப் பார்த்தாள்.

"நவா தன்ரை ஊர்ப்பிள்ளை ஒன்றைக் காதலிக்குது," என்ற புவனாவின் வார்த்தைகள் பேரிடியாக சுதாவின் தலையில் இறங்கியது.

"சின்ன வயதில் ஏற்படுகிற காதல் நிலைக்காது" என அண்ணன் கூறிய வார்த்தைகள் அவள் காதுக்குள் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

www.padippakam.com

தருவது ரசிகன்



இலக்கிய நயம்

# வென்றாலும் தோல்வி தான்

தொங்கிய திரையில் அவள் ஓவியம்
சோழனின் மகள்- காலன் நிகர் விழிகள்
ஓவியம் முன்னே உருகினான் பாண்டியன்.

"மான் விழியென்று எவன் சொன்னான்
மாய வலைகளடி. உன்விழிகள்.
தூண்டில்காரியே! தூண்டில்காரியே!
மனக் குளத்திலே கல்லெறிந்த மாயக்காரியே
என்னைப் பிடியடி, என்னைப் பிடியடி
தூண்டில் வீசடி, தூண்டில் வீசடி
உந்தன் மனக் குளத்திலே- என்னை நீந்த அனுமதி!"

பாண்டியன் மனம் உருக- அவன்
உதடு உளறலாய் கொட்டியது.

"உந்தன் இதழ்களில் மயக்கும் மதுக்கடல்தான்
நீ என்றும் இனியவள்தான்
உந்தன் கழுத்துநகை தவழுகின்ற இரு எழிலும்
பெருமலைதான் இடை தாங்கா எடையவைதான்!
கரு முகிலோ-கொடும் பாம்போ உன் கூந்தல்மழை முகில்தான்!

கொழுந்தென்று கிள்ளட்டுமா-உன்
புன்னகையைக் கிள்ளட்டுமா?
கரும்பென்று கடிக்கட்டுமா-உன்
கை விரல்களை நான் கடிக்கட்டுமா?
களிப்பென்று நினைக்கட்டுமா-உன்
முகச் சிவப்பை களிப்பாக நினைக்கட்டுமா?

எழுந்து வரமாட்டாயா?-சித்திரமே
தாவிவர மாட்டாயா?
மலர்ந்து வரமாட்டாயா- மாடப்புறாவே
பறந்துவர மாட்டாயா?

சிலந்திவலை உன் அழகு-நான்
சிக்கிக்கொண்ட சிறு எறும்பு!
உண்டுவிட வேண்டுமடி-நீ
உண்டுவிட வேண்டுமடி!
உனக்குள்ளே நான் இருக்க-என்னை
உதறாமல் உண்டுவிடு!"

ஓவியத்தைப் பார்த்தபடி-தன்
கரமிருந்த ஓலையிலே கவி வடித்தான்!
தூதுவனின் மூலமாக- தன்
காதல் மடலாக அனுப்பி வைத்தான்!

சோழ மகள் முகம் சுளித்தாள்
மனக்கோலம் காட்டி மடல்வரைந்தாள்.

"ஓவியத்தை கண்டவுடன்- நீர்
ஒரு தலையாய் காதலித்தீர்!
என் முகத்தை கண்டவுடன்- நீர்
ஏதேதோ கவிவடித்தீர்!
பெண் உள்ளத்தை அறியாமல்-நீர்
காதல் எண்ணத்தை வளர்க்கலாமா?
மன்னிக்க வேண்டுகிறேன்-நீர்
என்னை மறந்துவிட வேண்டுகிறேன்!
என் உள்ளத்தில் காதல் விதை- நீர்
போட முன்பே முளைத்தாச்சு!
என் காதல் வாழ்கவென்று-நீர்
வாழ்த்துவதை விரும்பி நிற்பேன்!"

பதில் மடல் கண்ட பாண்டியன்
பாம்பெனச் சீறிச் சினந்தெழுந்தான்!

"மறப்பதா? சோழன் மகளே!-நான்
உன்னை மறப்பதா?
இறக்கச் சொல்லடி இனியவளே-நான்
உடனே இறந்து போகிறேன்.
மறக்கமட்டும் சொல்லாதே-நான்
உன்நினைவை துறக்க மாட்டேன்!"

சோழனுக்கு தூது விட்டான்.
"மகளைக் கொடுத்தால்-நான்
உமது மருமகனாகிவிடுவேன்!
என்றும் நமக்குள் பகை இருக்காது.
திருமண பந்தம் உறவுக்கு விதையாகிவிடும்!
ஏற்பதும் இதை மறுப்பதும் உம் விருப்பம்.
மறுத்தால் போர் என்பது என் இஷ்டம்.

களத்தில் சந்திப்பது என்றால்
கேட்கட்டும் போர் முரசம்!
களிப்பாக சந்திப்பது என்றால்
கேட்கட்டும் மங்கள முரசம்!
சோழ மன்னா! உம்மகளும் நானும்
மண மாலை மாற்றிக்கொள்ளலாமா?
உம் படையும், என் படையும்
வாள் முனையில் பேசிக்கொள்ளலாமா?"

பாண்டியன் பலம் சோழன் அறியாததல்ல.
சதுரங்கக் காய்களாக திருமணங்கள்
நடப்பது ஒன்றும் மன்னர் மரபுக்கு மாறல்ல!
சோழன் சம்மதித்தான். பாண்டியன் சந்தோசித்தான்!

'காதல் பொய்த்தது- கனவு பொய்த்தது
மன்னன் மகள் என்றால் மனது இல்லையா?
காட்டிய இடத்தில் கழுத்தை நீட்ட
நான் என்ன பொதிசுமக்கும் கழுதையா?

சோழன் மகள் சோகத்தில் சுருண்டாள்
காலன் வந்து அழைக்கானோ என நினைத்தாள்.
மனம் கலக்காத மணம் மரணத்துக்கு சமம்
பிணம் என நினைத்தாரோ பெண்ணை?
அழுதாள் புரண்டாள் அழகு கெட்டாள்.

சாவது மேல்தான்- ஆயினும் வேண்டாம்
எடுத்துச் சொல்லியும் கெடுக்க வந்த
கெடுமதியாளனை வதைக்க வேண்டாமா?
உயிரைக் கட்டிப்போட்டுக் காத்திருந்தாள்!

மாலை மாற்றினர்- மங்கல மாலை!
மங்கையின் மனமோ செங்கல் சூளை!

காரிகையாளின் கட்டிளம் மேனியில்
செவ்விள நீரோடு மாங்கனி உண்டு
பொங்கிய களிப்பில் கண்விழித்திருந்து
மங்கிய ஒளியினில் புதுமைகள் அறியும்
கனவுகள் சூடி பாண்டியன் வந்தான்!

"தேவி" என்று தேனொழுக அழைத்தான்.
"யார் நீ? இங்கே யாரை அழைத்தீர்?"
சீறிய பாம்பின் ஓசையாய் கேள்வி.
"ஊடலா தேவி- நன்று நன்று
கூடலுக்கு இனிது ஊடுதல்தானே!"

"ஊடலும் கூடலும் உனக்கொரு கேடா?
மனிதருக்குரியது பிணத்துக்கு ஆகுமா?
நீயொரு மனிதனா?- நீதான்
பேயொரு மனிதனாய் வந்த உருவமா?
போய்விடு! போய்விடு!- தொட்டாய்
என்றால் நான் செத்தே போவேன்!"

"நான் உன் கணவன்- உனக்கு
மாலையிட்ட மணவாளன்!"

"உயிரில் கலந்த எந்தன் காதலை
ஒரு சடங்கால் மாற்ற முடியுமா?
மனதும் மனதும் கலந்த காதலை
ஒரு மாலையைப் போட்டு மாற்றமுடியுமா?
கடிவாளம் போட்டு சொந்தம் கொண்டாட
மங்கையர் என்ன மாடென நினைத்தீரோ?"

சீறினாள் சோழன் மகள்.
சினந்தாள் மனம் காயம்பட்ட அவள்.

"மலரே! மலரே! முள்ளாகாதே!
கனியே கனியே கல்லாகாதே!
திருவே உருவே தேளாகாதே
தரவே உன்னை நீ மறுக்காதே!"

சோழன் மகளின் முகத்தில் மின்னல்.
"என்மேல் உமக்கு ஈடற்ற ஆசையா?
உம் தேன் வார்த்தைகள் யாவும் உண்மையா?
கண்போல் என்னை காத்து நிற்பீரா?
மென் பூபோல் என்னை நீர் மதிப்பீரா?"

"பூவே உன்னை வலிக்காமல் கிள்ளுவேன்
மென்மலரே உன்னை வாடாமல் சூடுவேன்
மலரே உன்னை நாடியே வாழுவேன்
பொன்வண்டாய் உந்தன் மீதினில் ஆடுவேன்!"

கண்களில் தாபம் எரிய-பாண்டியன்
நெருங்கினான் பாவையை!

"வா! வா! மன்னா வா!
பார்! பார்! என்னைப் பார்!
தா! தா! எல்லாம் தா!"
அழைத்தாள் இதழ் குவித்து!

கைகளை விரித்து நெருங்கினான்
சோழமகள் கரத்தில் குறுவாள் ஏந்தினாள்
மன்னன் திகைக்க- அவள்
குறுவாள் தன் வயிற்றினில் செருகினாள்!

"அய்யோ கண்மணி!"
பாண்டியன் புரண்டு கலங்கினான்.
பாதி இமை திறந்திருக்க
பாதி உயிர் பிரிந்திருக்க
பாதி இதழ் திறந்து அவள் சொன்னாள்;

"ஆகாத செயலில்
நீ பெறும் வெற்றியும்
இறுதியில் துன்பத்தில் தொலைந்துவிடும்!"
சொன்னவள் கண் மூடினாள்.

அவள் சொன்ன உண்மைக்கு
குறள் தரும் பொருள் இது:

"கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பிழை தரும்"

அதிகாரம்-66, குறள்-658

---

ஸ்போர்ட்ஸ்

## செஸ் வீரர் வரிசையில்...

உலக செஸ் வீரர்களின் வரிசைப் பட்டியலை தொழில்முறை செஸ் வீரர்கள் சங்கம் (பி.சி.ஏ) வெளியிட்டுள்ளது. ரஷ்ய வீரர் காஸ்பரோவ் முதலிடத்தில் இருந்தாலும், அவருக்கு அருகில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், மற்றொரு ரஷ்ய வீரர் கிராம்னிக் இருவரும் உள்ளனர். இவர்களுக்கிடையே மிகக் குறைவான புள்ளி வித்தியாசமே இருக்கின்றது. காஸ்பரோவின் முதல் இடத்திற்கு ஆனந்த், கிராம்னிக் இருவரும் நெருக்கடி ஏற்படுத்துவார்கள்.



ஆனந்த்

**வரிசைப்பட்டியல் விபரம் வருமாறு:**

1. காஸ்பரோவ்- ரஷ்யா -2809 புள்ளிகள்.
2. ஆனந்த் - இந்தியா-2779 புள்ளிகள்.
3. கிராம்னிக் - ரஷ்யா -2742 புள்ளிகள்.
4. டோபரோவ் - பல்கேரியா-2731 புள்ளிகள்.
5. இவான்சுக் - உக்ரைன்-2725 புள்ளிகள்.
6. கார்பரோவ் - ரஷ்யா -2710 புள்ளிகள்.
7. கடா கமஸ்கி- அமெரிக்கா-2701 புள்ளிகள்.
8. ஜெல்பாந்த் - பெலாரஸ்-2688 புள்ளிகள்.
9. அலெக்ஸி - ஸ்பெயின் - 2674 புள்ளிகள்.
10. நைலால் சார்ட்- இங்கிலாந்து-2669 புள்ளிகள்.

## வெற்றி தென்னாபிரிக்காவுக்கு

தென்னாபிரிக்காவில் இந்தியா, ஸிம்பாப்வே, தென்னாபிரிக்கா ஆகிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற முத்தரப்பு கிரிக்கெட் போட்டிகளில் தென்னாபிரிக்க அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இந்தியா, ஸிம்பாப்வேயுடன் நடைபெற்ற லீக் போட்டிகள் அனைத்திலும் தென்னாபிரிக்கா வெற்றியீட்டியது. இந்தியா, ஸிம்பாப்வேயுடன், ஒரு போட்டியில் வெற்றியும், ஒரு போட்டியில் தோல்வியும் அடைந்தது. ஒரு போட்டி சமமாக (Tie) முடிவடைந்தது. எனவே இந்தியாவும், ஸிம்பாப்வேயும் சமமான புள்ளிகளுடன் இருந்தன.

இருப்பினும் ரன் விகிதத்தில் இந்தியா கூடுதலாக இருந்ததால் தென்னாபிரிக்காவுடன் இறுதிப்போட்டியில் கலந்து கொண்டது.

பெப்ரவரி 12ம் திகதி நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 191 ரன்கள் எடுத்தது. தென் ஆபிரிக்கா 14.3 ஓவர்களில் 1 விக்கெட் இழப்பிற்கு 42 ரன்கள் எடுத்தது. மழையால் இந்தப் போட்டி கைவிடப்பட்டது.

மறுநாள் 13ம் திகதி மாற்றுப் போட்டி தொடங்கியது. முதலில் தென்னாபிரிக்கா துடுப்பெடுத்தாடியது. 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 278 ரன்கள் எடுத்தது. (கேர்ஸ்டன்-51, கல்லினன்-60, கல்லிஸ்-41, பிரசாத், கும்ளே, ரொபின் சிங்க் தலா 2 விக்கெட்டுகள்.)

இந்தியா பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தபோது மழை பெய்ய ஆரம்பித்தது. இதனால் 10 ஓவர்கள் குறைக்கப்பட்டது. 40 ஓவரில் 252 ரன்கள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இறுதியில் இந்தியா 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

டெண்டுல்கர் 33 பந்துகளில் 45 ஓட்டங்கள், அசாருதீன் 44 ஓட்டங்கள், ராகுல் திராவிட் 84 ஓட்டங்களைக் குவித்தனர். டொனால்ட் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## இவர்கள்தான் அவர்கள்



வாணி ஜெயராம்



கமல்

---

## சிந்தியா பதில்கள்

* பொதுஜன முன்னணி பா.உ. நாலந்த எல்லாவெல கொல்லப்பட்டது குறித்து என்ன நினைக்கிறீர்?

சி. சங்கரதாஸ், கொழும்பு-06.

கையிருக்கிறது; கையால் அடிபட்டுக் கொண்டார்கள். பின்னர் கல் இருக்கிறது; கல்லால் எறிபட்டுக் கொண்டார்கள். இப்போது கையில் துப்பாக்கி இருக்கிறது சுடுபட்டுக் கொள்கிறார்கள். வருத்தம் தரும் வளர்ச்சி.

✉ ✍

* உள்ளூராட்சித் தேர்தல் அரசாங்கத்திற்கு எவ்வகையில் நன்மையாகும்?

டி. ராஜ்குமார், பெல்மதுளை.

உள்நாட்டு மக்கள் நம் பக்கம் என்று சொல்லி வெளிநாட்டில் கடன்வாங்கக் கோடி கோடி நன்மைதரும்.

✉ ✍

* எதிரிகள் நண்பர்களாக முடியுமா?

அ. சித்தி பஹீமா, சாய்ந்தமருது-08.

முடியும்! சுலபமான உதாரணம் தேவையெனில், அரசியலை அவதானிக்கவும்.

✉ ✍

* தமிழ்நாட்டில் புதுக்கோட்டைத் தேர்தல் முடிவுகள் எப்படி? கலைஞருக்கு ஏறுமுகம் தானா?

சி. திவாகர், வவுனியா.

சோகமும்தான்! சென்ற தேர்தலில் 43 ஆயிரம் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்ற தி.மு.க., இம்முறை 12 ஆயிரம் வாக்குகளால்தான் கோட்டையை தக்கவைத்துள்ளது. அதிகாரபலம் இருந்தும், அமைச்சர்கள் பலர் தொகுதியை முற்றுகையிட்டும் சறுக்கல்தான். காரணம்: கடந்த ஆட்சியை கண்டித்துக்கொண்டு மட்டுமே இருப்பது மக்களுக்கு சலித்துவிட்டது. விலைவாசி உயர்வுக்கு கலைஞர் சொல்லும் அழகு தமிழ்க் காரணங்கள் பரிகாரமாக வில்லை. விஷயம் அதுதான்.

✉ ✍

* சிந்தியா! காதல் செய்யும் மாயம் என்ன?

எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07.

இப்படியான கேள்விகள் எழுவதும்கூட.....!

✉ ✍

* டியர் சிந்தியா! நாசூக்காகக்குத்துவது என்று முரசில் படித்தேன்; அப்படியென்றால் என்ன அர்த்தம்?

ஆர். இராமநாதன், புத்தளம்.

சுவாமி தயானந்த சரஸ்வதி என்பவர் புகழ்பெற்ற மகான். அவரைப் பார்க்க ஒரு பண்டிதர் வந்தார். தான் ரொம்ப நல்லாப் படித்தவர் என்று பண்டிதருக்கு தலையில் கனம் அதிகம், பண்டிதரை வரவேற்று உபசரித்தார் தயானந்தன் சரஸ்வதி. ஆசனத்தில் அமர்ந்ததும் பண்டிதர் முகத்தில் கோபம். தயானந்த சரஸ்வதி அமர்ந்திருந்த ஆசனத்தைவிட பண்டிதர் அமர்ந்திருந்த ஆசனம் சற்றுச் சின்னதாக இருந்தது.

"நீர் என்னை அவமதித்துவிட்டீர். நான் படித்த படிப்புக்கு இப்படித் தாழ்வான இருக்கையில் அமரலாமா?" என்று சீறினார் பண்டிதர்.

உடனே தயானந்தர் எழுந்து தன் ஆசனத்தை பண்டிதருக்குக் கொடுத்தார்.

சற்று நேரத்தில் அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்தில் இருந்த மரத்தின் மேல் ஒரு குருவி வந்து அமர்ந்தது.

அதைக் கவனித்த தயானந்த சரஸ்வதி பேச்சோடு பேச்சாகப் பண்டிதரிடம் கேட்டார்:

"பண்டிதர் அவர்களே! அதோ உச்சியில் அமர்ந்திருக்கும் குருவி தங்களைவிட அதிகம் படித்திருக்குமோ?"

இதுதான் நாசூக்கான குத்து. குத்துவது தெரியாமல் நயமாகக் குத்தவேண்டும்.

✉ ✍

* டியர் சிந்தியா! கதிரையில் யானை உட்கார்ந்தால் இலங்கையில் மாற்றம் வருமா?

ஐ.எல். அப்பாஸ், அட்டாளைச் சேனை-10.

கதிரையில்தான் மாற்றம் வரும்.

✉ ✍

* ரியூசன் கொடுத்து பணம் சம்பாதிக்கும் இன்றைய ஆசிரியர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

செல்வி எஸ். சியாமளா, சிலாபம்.

500 ஆண்டுகளுக்கு முற்பட்ட கதை இது:

புதிதாகப் பாடசாலைக்கு சேரவந்தான் ஒரு மாணவன். குருதட்சணையாக பத்து ரூபாயைக் கொடுத்தான்.

கொடுக்கும்போது "குருவே, இந்த பத்து

# சிந்தியா

பதில்கள்



ரூபாயை 100 வணக்கங்களுடன் சமர்ப்பிக்கிறேன்," என்று சொன்னான்.

உடனே ஆசிரியர் சொன்னார்: "ரூபாயில் 10ஐக் கூட்டிக்கொண்டு வணக்கத்தில் 10ஐக் குறைத்துக்கொள்."

அந்தக் காலத்திலிருந்து இதுதான் கதை. விதிவிலக்குகளும் இல்லாமல் இல்லை.

✉ ✍

* நடிகர் சரத்குமாருக்கும் நக்மாவுக்கும் காதல் என்று சினிவிசிட்டில் செய்தி வந்ததே! உண்மைதானா சிந்தியா?

மா. அன்பழகன், நீர்கொழும்பு.

முரசில் வந்தால் பொய் இருக்குமா அன்பழகன்?

சரத்குமாரின் மனைவி சாயாவும் இரண்டு பிள்ளைகளும் சரத்தைவிட்டுப் பிரிந்து தனியாகச் சென்றுவிட்டனர். சமீபத்தில் தமிழகத்தின் பிரபல சஞ்சிகையில் சாயாவின் சோகமான பேட்டியும் வெளியாகியுள்ளது.

தனியாகச் சென்ற சாயா வாடகை வீட்டில் குடியிருக்கிறார். நக்மாவுக்கு சரத்குமார் ஒரு பங்களா வாங்கிக் கொடுத்திருக்கிறார். அதில் தான் நக்மாவும் சரத்தும் குடியிருக்கிறார்கள்.

ஆக, வெறும் கிசுகிசுவல்ல; ருசுவான சமாச்சாரம்.

✉ ✍

* டியர் சிந்தியா! 1997 ஆரம்பமே விமானப்படைக்கு பேர் இழப்புத்தானே?

என். பிரபா, பெரிய நீலாவணை-02.

பேர் இழப்போ இல்லையோ; போர் இழப்புத்தான். போர் என்றாலே இழப்புத் தான்!

✉ ✍

* காலம் பொல்லாததா பொன்னானதா?

சி.எம். அஹமட், கந்தளாய்.

பொன்னைவிட பொல்லாதது; மேலானது.

ஒரு செல்வந்தன் பயங்கரக் கஞ்சன். மூன்று இலட்சம் சவரன்கள் சேர்த்து வைத்திருந்தான். யார் உதவி கேட்டாலும் செய்யமாட்டான்.

ஒருநாள் திடீரென்று எமன் வந்தார். "உன் காலம் முடிந்துவிட்டது புறப்படு!" என்றார்.

"ஐயா! என்னிடமுள்ள மூன்று இலட்சம் சவரனில் ஒரு இலட்சம் தருகிறேன். மூன்று நாட்கள் உயிர்வாழ அவகாசம் தாருங்கள்!" என்றான்.

எமன் சிரித்தார்.

"இரண்டு இலட்சம் பொன் தருகிறேன். இரண்டு நாள் அவகாசம் தாருங்கள்!" என்றான்.

அதற்கும் எமன் சிரித்தார்.

"தயவு செய்து அவகாசம் கொடுங்கள் எல்லாச் சவரன்களையும் தருகிறேன்!" என்றான்.

மீண்டும் எமன் சிரித்தார்.

அவன் உடனே அழத் தொடங்கினான். "ஒரே ஒரு நிமிடம் அவகாசம் தாருங்கள். ஒரு செய்தியை உலகத்துக்கு சொல்லிவிட்டு உம்மோடு வருகிறேன்!" என்றான்.

மனம் கசிந்து அனுமதி கொடுத்தார் எமன்.

உடனே அவன் எழுதியது இது;

"தயவு செய்து வாழும்போதே காலத்தின் மதிப்பைப் புரிந்து கொள்ளுங்கள். எனது மூன்று இலட்சம் சவரன்களாலும் ஒரு நிமிட நேரத்தைக்கூடப் பெற முடியவில்லை. அதனால் காலம் பொன்னைவிடப் பொன்னானது!"

✉ ✍

* தலைமுடியைக் காணிக்கை செலுத்துவது ஏன்?

ஆ. பெமீலா, நுவரெலியா.

தலைக்கனம் குறைக்கத்தான்!

✉ ✍

* அன்பு சிந்தியா! இன்றையத் திரைப் படப்பாடல்களில் தத்துவப் பாடல்கள் இடம்பெறுவதில்லையே, ஏன்?

சி. ஸ்ரீதேவி, இரத்தினபுரி.

'டேக் இட் ஈஸி ஊர்வசி'கூட ஒரு தத்துவப்பாடல் தானுங்களே!

✉ ✍

* பூலான் தேவியை கைதுசெய்ய முயல்வது நியாயமா?

எம்.சீ.எம். சன்பரா பாஹிர், கொட்டாரமுல்லை.

அநியாயம்! உயர் ஜாதி வெறிகொண்ட நீதிமன்ற உத்தரவுகள் இந்தியாவில் புதியவையல்ல. பெண் ஒடுக்குமுறை, சாதி அடக்குமுறை என்பவற்றை நியாயப்படுத்தும் தீர்ப்புக்கள் முன்னரும் வெளியாகின. அது போலத்தான் இதுவும்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 71

## அரக்கர்கோன் அரசவையில் ஆஞ்சநேயர்

இராமபிரானால், தான் இருக்குமிடத்தைக் கண்டு வருவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட ஆஞ்சநேயர், அரக்கவீரர்களிடம் பிடிபட்டார் என்ற செய்தி பேரிடி போல் கேட்டது, சீதாப்பிராட்டியாருக்கு. திரிசடைதான் இச்செய்தியைப் பிராட்டியாரிடம் கூறினாள். தான் சிறைவைக்கப்பட்டிருந்த அசோகவனத்தின் பெரும் பகுதியையும் அவ்வனத்துடன் இணைந்த வேறுபல இடங்களையும் அனுமன் அழித்தார் என்ற செய்தி கேட்டு சீதாப்பிராட்டியார் உள்ளூர மகிழ்வுற்றார்; பல்லாயிரக் கணக்கில் அரக்க வீரர்களையும் படைக் கலன்களையும் அழித்தொழித்தார் என்ற தகவலும் அவருடைய காதுகளில் தேனாகப் பாய்ந்தது.

அவ்வாறு மகிழ்ச்சி அடைந்தவர், அனுமன் அரக்க வீரர்களால் கைதானார் என்ற செய்தி அறிந்ததும் மிகவும் வருந்தினார். இராமபிரானிடத்திலிருந்து நற்செய்தியைக் கொண்டுவந்து தனக்கு நம்பிக்கை ஊட்டிய மாருதி, மாற்றானின் கையில் அகப்பட்டுக் கொண்டதை அவரால் அங்கீகரிக்க முடியவில்லை. வான்முட்ட வளர்ந்து விசுவரூப மெடுத்து, சேதுக் கடலைத்தாண்டி வந்த



## இராஜகுமாரன்

மாவீரன், எவ்வாறு அரக்கரிடம் அகப்பட்டார் என்பதை அவரால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.

தனக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை என்ற முடிவுடன் தன்னுயிரை மாய்ப்பதே ஒரே வழி என்று இறுதி முடிவெடுத்திருந்தவேளை, திடீரெனத் தோன்றி-நல்வார்த்தைகளைக்கூறி, உயிரினைப் போகவிடாமல் தடுத்த அந்த அறவீரனுக்கு 'என்றும் அழிவே வராது' என்று 'சிரஞ்சீவி' வரம் அளித்து சில நாளிகைகள் கூடச் சென்றிருக்காது; அதற்கிடையில் இத்தகைய செய்தி வந்து எட்டியதே, என்று எண்ணி சீதாப்பிராட்டியார் கலங்கினார்.

சீதாப்பிராட்டியாரின் நிலையினை வெளிப்படுத்தும் கம்பர்பெருமானின் வார்த்தை அலங்காரத்தைப் பார்ப்போம்:

**ஆழி காட்டி என் ஆர் உயிர் காட்டினாய்க்கு**
**ஊழிகாட்டிவென் என்று உரைத்தேன், அது**
**வாழி காட்டுவது உண்டு; உன் வரைப் புயப்**
**பாழிகாட்டி பழியையும் காட்டினாய்!**

(சுந்தரகாண்டம்–1078)

பொருள்:

***"இராமபிரானது மோதிரத்தைக் கொண்டு வந்து காட்டினாய். இதன் மூலம் என் உயிர் பிரிந்து விடாமல் தடுத்தாய். இதன் பயனாக 'என்றும் சிரஞ்சீவியாக அழிவற்று வாழக் கடவாய்!' என்று வரமளித்தேன்; அந்த வரம் பலிக்கும் என்பது உறுதி. எனினும் மலையைப் போன்ற உன் தோள்களால் அரக்கர்களிடம் உன் வலிமையைக் காட்டி, அவர்களால் கட்டுண்டு பழிப்புக்கிடம் தந்துவிட்டாயே!"***

இவ்வாறு பிராட்டியார் வருந்தியதாகப் புலவர் கூறுகிறார்.

அனுமன் அரக்கர்களிடம் அகப்பட்டுக் கொண்டமையினால், தான் இருக்குமிடத்தை தன் கணவன் இராமபிரானிடம் போய்ச் சொல்லி, அவர் படைகளுடன் வந்து இராவணனைவென்று தன்னைச் சிறைமீட்டுச் செல்ல இனிமேல் வாய்ப்புக் கிடைக்கப் போவதில்லை, என்று பிராட்டியார் மேலும் துயருற்றார்.

***

### அரக்கர்கோன் இராவணேசன்

அனுமனை இராவணனின் அரசவைக்கு இழுத்துச் செல்லுமாறு அரக்க வீரர்களுக்குக் கட்டளை இட்டான் இந்திரசித்து. அரக்கர்கள் முன்புறமாக இழுக்கவும் சிலர் பின்புறமிருந்து தள்ளவும் அடக்கமே உருவாக ஆஞ்சநேயர் அரண்மனை நோக்கிச்சென்றார். அரக்கர் கோனின் அரண்மனையின் அமைப்பு அவரை மிகவும் கவர்ந்தது, பளிங்கினாலும் பலவகை இரத்தினங்களினாலும் அமைக்கப்பட்டிருந்த அந்தப் பிரமாண்டமான மாளிகையின் நடுவே அழகிய பெரிய தூண்களால் தாங்கப்பட்ட அரசவை காணப்பட்டது. அவையின் நடுநாயகமாக பத்துத் தலைகளையும் கொண்ட இராவணனின் பருத்த-கறுத்த-பராக்கிரமம் பொதிந்த உருவம் வீற்றிருந்தது. அரக்கர்கோனின் அணிமணிகள் அனுமனின் கண்களையே கூசச் செய்தன.

இன்னிசையில் நன்கு தேர்ச்சி பெற்ற இராவணன் எப்போதும் குற்றமற்ற இசையையும் ஆடலையும் இரசிப்பவன். அனுமன் அரசவையை அடைந்தபோது அங்கு தேவலோக மங்கையர் ஆடற்கலையால் அவையோரை மகிழ்வித்துக் கொண்டிருந்தனர். ஆடலுக்கேற்ற இன்னிசைப் பாடல் அதற்குரிய பக்கவாத் தியங்களோடு பாடப்பட்டுக் கொண்டிருந்தது.

**நரம்பு கண்ணகத்துள் உறை**
**நறை நிறை பாண்டில்**
**நிரம்பு சில்லரிப் பாணியும்**
**குறடும் நின்று இசைப்ப**
**அரம்பை மங்கையர் அமிழ்து**
**உகுத்தாலென்ன பாடல்**
**வரம்பை இல் இன்னிசை**
**செவிதொறும் விளங்க...**

(சுந்தர காண்டம்-1091)

பொருள்:

***தந்திகள் பூட்டப்பட்ட யாழ் போன்ற கருவிகளிலிருந்து எழுகின்ற இன்னிசை தேன்போன்று தித்திக்க, தாளத்துக்காகப் பயன்படுத்தப்படும் சில்லரி, குறடு எனும் தோல் கருவி ஆகியவற்றிலிருந்து எழும் ஓசையும் சேர்ந்து பாடலுக்கு மெருகூட்ட, தேவலோக மங்கையர் கீதம் பாடினர். இவ்விசையானது தேவாமிர்தம் போல் இராவணனின் செவிகள் இருபதிலும் சேர்ந்தது.***

### சிவசின்னங்கள்

இலங்கையர்கோனின் நெற்றிகளில் சிவசின்னமாகிய திருநீறு காணப்பட்டது. சந்தனம், குங்குமம் கலந்த திலகம் நெற்றிகளை அலங்கரித்தன. இக்காட்சியைக் கண்ட அனுமன் ஒரு கணம் திகைப்புற்றார். 'சிவபெருமானை தன் இசையால் மயக்கி இணையற்ற வரங்களைப் பெற்று 'இராவணேசன்' (இராவண-ஈசன்) என்ற தகுதியைப்பெற்ற இவ்வேந்தன், ஏன் இழிவான காரியங்களில் தன்னை ஈடுபடுத்தி, பஞ்சமா பாதகங்களில் ஒன்றான பிறன் மனைகவரல் என்ற கேட்டுக்கு வழி தேடினான்?' என்று சிந்திக்கலானார்.

❀ ❀ ❀

ஒருவன் தனக்கு மீறிய தகுதியை எட்டியதும் அவன் தலையில் 'கனம்' ஏறிவிடுவது இயல்பு. தனக்கு நிகர் வேறு எவரும் இல்லை என்று மமதை கொண்டு விடுகிறான். இதனால் நன்மை எது, தீமை எது என்று பகுத்துணர முடியாத நிலையை அடைகிறான். தான் நினைப்பது எல்லாமே சரி என்று கருதி விடுகிறான். தன்னை மறந்த நிலையில் தடுமாற்றம்தான் மிஞ்சுகிறது. எதைச் செய்தாலும் அதில் வேறு எவருடைய குறுக்கீடு, அறிவுறுத்தல், ஆலோசனை எதுவும் இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்து விடுகிறான். சுருக்கமாகச் சொல்வதானால் "சர்வமும் நானே!" என்று துணிந்து விடுகிறான்.

இராவணனும் தெய்வீக வரங்களைப் பெற்று 'மிக உயர்ந்த நிலையினை எட்டிவிட்டோம்' என்ற கர்வம் தலைக்கேறிய நிலையில் அகங்காரம் கொண்டுவிட்டான். இதன் காரணமாகவே, நோய்வாய்ப்பட்ட தன் தாய், சிவபிரானைப் பிரார்த்திக்க திருக்கைலாயம் செல்ல முடியவில்லையே என்பதனால், அப்பிரான் உறைந்திருக்கும் திருக்கைலாய மலையையே பெயர்த்தெடுத்து, தன் தாயாரின் காலடியில் கொண்டு வந்து சேர்த்துவிடத் துணிந்தான். இத்தகைய அதீதமான செயற்பாட்டினால், சாகாவரம் பெற்ற அந்த சிவபக்தனின் ஆணவம் அடக்கப்பட்டேயாக வேண்டும் என்பதற்கான காலம் குறிக்கப்பட்டாயிற்று.

### ஆஞ்சநேயரின் தீர்மானம்

இராவணேசன் அரசவையில் கொலுவீற்றிருந்த தோரணையைக் கண்ணுற்ற அனுமனும் முதலில் அவனின் தோற்றம் கண்டு திகைப்புற்றதில் தவறில்லை. ஏற்கனவே இராவணனை, அவனது தூக்க வேளையில் கண்டதும், அப்படியே நசித்துக் கொன்று விடலாமா என்ற துடிப்பு அனுமனுக்கு ஏற்பட்டது. இப்பொழுது அரியாசனத்தில் அரக்கர்கோன் வீற்றிருந்த காட்சியைக் கண்டதும் முதலில் அதிர்ச்சியுற்றாலும், பின்னர் கடும் சினம்கொண்டவராகக் காணப்பட்டார். 'ஒரே பாய்ச்சலில் பாய்ந்து சென்று இராவணனைக் கூறுகூறாகக் கிழித்து எறிந்துவிட்டால் என்ன,' என்று ஒரு தடவை சிந்தித்தார். இராவணன் பெற்ற தெய்வீக வரங்கள் அனுமனின் சிந்தனைகளில் தட்டுப்பட்டன. 'இவனுடன் போரிட்டு இலகுவில் வெல்ல முடியாது. அதுபோல் இவனால் என்னையும் வெல்ல முடியாது. மற்போருக்கு அழைத்தாலும் அப்போர் பல நாட்கள் தொடர வேண்டியதாகிவிடும். அவ்வாறானால், சீதாப்பிராட்டியாருக்குத் தான் கொடுத்த வாக்குப்படி விரைவில் சென்று இராமபிரானுக்குச் செய்தியைக்கூறி, ஒரு மாதத்துக்குள் இராவணனுடன் போர் தொடுக்க இராமபிரானை அழைத்து வருவதில் பெரும் தாமதம் ஏற்பட்டுவிடும். இவ்வாறு பலவாறாக அனுமன் சிந்திக்கலானார்.

சிந்தனையின் முடிவில் ஆஞ்சநேயர் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்தார். ஏற்கனவே இராமபிரான், இராவணனையும் அரக்கர் குலத்தையும் பூண்டோடு அழித்து விடுவது தனது பொறுப்பு என்பதனைப் புலப்படுத்தியுள்ளார். "**ஏழ் உயர் உலங்கள் யாவும் இன்புற பாழி வன் புயங்களோடு அரக்கன் பல் தலை பூமியில் புரட்டல் என் பூணிப்பு ஆம்...**" என்று இராமபிரானே கூறியிருக்கிறார். 'ஆகவே அவருக்கிருக்கும் உரிமையில் நாம் தலையிடுவது உகந்ததல்ல' என்று இராவணனுடன் பொருதும் எண்ணத்தை அடியோடு விட்டொழித்தார், ஆஞ்சநேயர். போதுமான அளவு புத்திமதிகளை இராவணனுக்குக் கூறி, சமாதானமான முறையில் நல்ல தீர்வினை எட்டுவதெனத் தீர்மானித்துக் கொண்டார்.

'இராமபிரானின் தூதனாகவே நாம் நடந்துகொள்ள வேண்டும். ஒரு மன்னனின் தூதுவனாக இந்த இலங்கை நாட்டு மன்னவன் முன் நான் வந்திருப்பதால், தூதுவனுக்குரிய மரியாதை தரப்பட வேண்டும்! இல்லையேல் உரிய மரியாதை தானாகக் கிடைக்க நாமே வழி தேடிக்கொள்ள வேண்டும்!' என்ற முடிவுடன் அமைதியாகக் காத்திருந்தார்

இராவணன் அனுமனை பாதம் முதல் உச்சிவரை நன்றாக உற்று நோக்கினான். சில வினாடிகளில்- "யார் நீ... இலங்காபுரிக்கு ஏன் வந்தாய்?... யார் உன்னை இங்கு அனுப்பினார்கள்?" என்று வினாக்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போனான். அனுமன் புன்முறுவலோடு பார்த்துக்கொண்டிருந்தார். தனது வினாக்களுக்கு உரிய விடை கிடைக்கவில்லை என்பதனால் இராவணன் சினம் கொள்வதை உணர்ந்த ஆஞ்சநேயர், "ஒரு மன்னவனின் தூதனாக இந்த நாட்டுக்கு வந்துள்ள எனக்கு, அதற்குரிய மரியாதை தரப்படவில்லை, ஓர் ஆசனம் கூடத்தரப்படவில்லை. ஆகவே, எனக்குரிய ஆசனத்தை நானே தேடிக் கொள்கிறேன்," என்றார்.

இவ்வாறு கூறியதும் அவருடைய நீளமான வால் மேலும் வளரத் தொடங்கியது. ஒரு சிறு மலைபோல் சுருண்டு சுருண்டு, இராவணனின் அரியணைக்குச் சமமான உயரத்தை அடைந்ததும் அதன்மேல் தாவி ஏறிக்கொண்டு இராவணனை நேருக்குநேர் பார்த்தார். இராவணன் மட்டுமல்லாமல் அவையிலிருந்த அனைவருமே அதிசயித்து நின்றனர்.

(இராவணனுடைய அரியாசனத்துக்குச் சமமாகத் தன்னுடைய வாலினால் ஆஞ்சநேயர் ஆசனம் அமைத்த கதை இராமாயண காவியத்தில் சில பதிப்புகளில் மட்டுமே காணப்படுகின்றது. சில பதிப்புகளில் வாலியின் மகன் அங்கதனே இவ்வாறு வாலினால் ஆசனம் அமைத்தான் என்று கூறப்பட்டுள்ளது).

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 69

**சரியானவிடை:- அட்சகுமாரன்**

1. ஆர். தர்மராஜ், 122, புதிய நகரம், திகண, ராஜவெல.
2. ச. சந்திரகுமார், டன்சினன் மேல் பிரிவு, பூண்டுலோயா.
3. ப. ரிசிகுலசிங்கம், 61, சிவன்கோவில் வீதி, தோணிக்கல், வவுனியா.
4. இரா. நிஷாந்தினி, 93, வாசல வீதி, கொழும்பு-13.
5. செல்வி ச. அருணாசலம், 250, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

**போட்டி இல. 71** கேள்வி:- **தந்திகளைக் கொண்டு அமைக்கப் பட்ட இசைக்கருவி எது?**

மார்ச். 01 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.71, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

## காதிலை பூ கந்தசாமி

**பல வாரங்களாக கவுண்டமணி-செந்திலைக் காணவில்லை என்று கடிதம் எழுதித் தேடியவர்களுக்கு ஒரு நற்செய்தி. இதோ வந்துவிட்டார்கள்.**

செந்தில்: *(பாடிக்கொண்டே வருகிறார்)*
ஆயிரத்தில் நான் ஒருவன்-நீங்கள்
ஆணையிட்டால் படைத்தலைவன்

கவுண்டமணி: வாடா மவனே. யாரெல்லாம் தலைவனாகலாம் என்று ஒரு விவஸ்தையே இல்லாமல் போச்சுடா. உனக்கெல்லாம் அந்த ஆசை வரலாமாடா?

செ: உங்களுக்கு விஷயமே தெரியாதாண்ணே? நம்ம நாடு ஜனநாயக நாடண்ணே! யார் வேணுமென்னாலும் தலைவராகலாமண்ணே.

கவு: ஜனநாயகம் எண்ணா எந்த நாய் வேணுமென்னாலும் நாற்காலியில உட்காந்துக்கலாமாடா?

செ: அப்பிடியில்லையண்ணே. உங்களையெல்லாம் ஜனங்க கூப்பிட்டாங்களா, நோநெவர்.

கவு: என்னை நாய் எண்ணு சொல்லுறியாடா?

செ: நான் சொன்னேனா? நீங்களே அப்படிக் கற்பனைக் பண்ணிக்காதீங்க. நல்லாயிருக்காது.

கவு: இப்ப ஏன்டா இங்கே வந்தே?

செ: உங்களைப் பார்த்துட்டு போகலாமென்னுதான்.

கவு: என்னை ஏன்டா பார்க்க வந்தே?

செ: எப்பிடி இருக்கீங்க எண்ணு தெரிஞ்சிட்டு போகலாமென்னுதான்.

கவு: நான் எப்பிடி இருந்தா உனக்கென்னடா?

செ: நல்லாயிருந்தீங்கெண்ணா ஒரு நூறு ரூபா கடன் கேட்கலாமென்னுதான்.

கவு: நீங்கள் நாணயமானவர்கள்தான் ஆனால் நாங்கள்தான் கடன் தரமுடியாத நிலையில் இருக்கிறோம்.

செ: ஏனண்ணே பெட்டிச் சாவியைத் தொலைச்சிட்டீங்களா?

கவு: கிண்டலா பண்ணுறே நாயே!

செ: கோபிக்காதீங்க அண்ணே.
நான் உன்னோடு பேசிய
ஒவ்வொரு மணித்துளியும்
மரணப் படுக்கையிலும்
மறக்காது கவுண்டரண்ணே!

### வித்தியாசமான காதல் கதை

கவு: ஏறக்குறைய இதேமாதிரி வசனத்தை நான் இதற்கு முன்னாடி எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கேடா.

செ: 'இருவர்' படத்திலே கவிதை எழுத மிஸ்டர் வைரமுத்து ஐடியா கேட்டாரு. சோ.. நான் கொடுத்த ஐடியாவை அவர் யூஸ் பண்ணியிருக்கலாம்.

கவு: நீங்கதான் இப்பவெல்லாம் ஐடியா கொடுக்கிறீங்களோ?

செ: யெஸ்! இப்பகூட சூப்பர் கதையொன்று கைவசம் இருக்கு. படமா எடுத்தீங்கண்ணா பிச்சுக்கிட்டு ஓடுமண்ணே.

கவு: தியேட்டரைவிட்டே ஓடிப்போயிடுமென்னுறியா?

செ: இந்தக் கிண்டல்தானே வேணாங்கிறது. கதையை கேட்டுப்பாருங்கண்ணே.

கவு: மவனே! கதை எண்ணு என் உயிரை வாங்க நினைச்சே டணால் பணாலாகிடும்.

செ: டணால் பணாலாகிடுமென்னா என்ன அர்த்தமண்ணே?

கவு: மவனே இதற்கெல்லாம் அர்த்தம் கேட்டே சிங்கி புங்கியாகிடும். தங்கி தொங்கியாகிடும்.

செ: அண்ணே! அவசரப்படாதீங்கண்ணே! சீதை கொஞ்சம் அவசரப்பட்டதாலதானே இராமாயணப் போருகம் பண்ணவேண்டியிருந்தது. மிஸ்டர் தருமன் அவசரப்பட்டதாலதானே மிஸ்ஸிஸ் பாஞ்சாலி அவமானப்படவேண்டி வந்தது.

கவு: மவனே! நீ எங்கேயோ போயிட்டாயடா. பாரு எப்பிடிப் புல்லரிக்குதுண்ணு! கையில கதை இருக்கென்னியே எடுத்துவிடுடா!

செ: திஸ் இஸ் எ லவ் ஸ்டோரி.

கவு: மவனே! தமிழிலை ஸ்பீக்குடா.

செ: இது ஒரு காதல் கதை. ஆனால் இது சாதாரணக் காதல் கதையல்ல. அதையும் தாண்டிப் புனிதமானது. மனிதர் உணர்ந்து கொள்ள இது மனிதக் காதல் அல்ல.

கவு: பின்னே எதுக்குடா எங்கிட்டே சொல்கிறே, தெருவில நாய்கள் நிற்கும் பாரு. போய்ச் சொல்லு.

செ: கோபிக்காதீங்க. எதுக்கெடுத்தாலும் உணர்ச்சிவசப்படாதீங்க. எதையும் நிதானமா கையாளணும். அப்பத்தான் டிங்கு டணாலாகாது. மீன் பார்த்துத்தான் வலையை வீசணும். மான் பார்த்துத்தான் அம்பைத் தொடுக்கணும். தடம் பார்த்துத் தான் காலை வைக்கணும். இடம் பார்த்துத் தான் அடியை அடிக்கணும். பதம் பார்த்துத் தான் எதையும் ருசிக்கணும்.

கவு: அய்யோ அய்யோ.. இந்தச் சட்டித் தலையன் லொள்ளுத் தாங்க முடியேல்லையேப்பா. கதையைச் சொல்லுடா நாயே!

செ: இது ஒரு வித்தியாசமான காதல் கதை. ஐ மீன், காதலனும், காதலியும் ஒருத்தரை ஒருத்தரு பார்க்காமலேயே காதலிக்கிறாங்க.

கவு: பார்க்காமலே காதலா?

செ: யெஸ், ஏனன்னா அவங்க ரெண்டுபேருக்குமே கண்ணு தெரியாது. அதே கதையில இன்னொரு கதை கிளையாகப் பிரியுது. அவங்க ரெண்டு பேரும் வெரிவெரி இளங் காதலர்கள். 32 வயது.

கவு: ஏன்டா பன்றிவாயா 32 வயசெல்லாம் இளமையா?

செ: காதலிக்கு 16 வயது, காதலனுக்கு 16 வயது. கல்குலேட்டரிலை போட்டுக் கூட்டிப் பாருங்க கரெக்டா 32 வரும்.

கவு: இதைத்தானா விஞ்ஞானம் எண்ணு சொன்னான் வெள்ளைக்காரன்.

செ: யூ ஆர் ரோங்! விஞ்ஞானம் எண்ணு எப்பண்ணே சொன்னான் வெள்ளைக்காரன்? 'சயன்ஸ்' எண்ணுதான் சொல்லுவான்.

கவு: மவனே! நீ ஒரு அறிவு சீவியடா.

செ: தாங்யூ வெரிமச். எங்கே விட்டேன் சொல்லுங்க?

கவு: எங்கே விடணுமோ அங்கேதான் விட்டே. ஏன்டா மனசில ஒட்டுறமாதிரியா கதை சொல்லுறே?

செ: மனசில ஒட்டுறமாதிரியண்ணா கம் பூசி லேபிள் தான் ஒட்டணும். வந்திடுச்சு. அவளுக்கும் கண் தெரியாது. அவனுக்கும் கண்தெரியாது. அதனால பார்க்காமலே காதலிக்கிறாங்க. அதே படத்தில இன்னொரு ஜோடி. அவங்க பார்த்துக் கொண்டே இருப்பாங்க. ஆனாப் பாருங்க அவங்க ரெண்டுபேருமே எதையும் பேசிக் கொள்ளாமலேயே காதலிக்கிறாங்க.

கவு: ஏன்டா அவங்க ரெண்டுபேருமே ஊமையா?

செ: தட்ஸ் ரைட்! அவங்க ரெண்டுபேருக்கும் பக்கத்திலே இன்னொரு ஜோடி. அவள் இவனை நினைச்சுப் பாடுவா. இவன் அவளை நினைச்சுப்பாடுவா. அவன் பாடுறது இவளுக்கு கேட்காது. இவள் பாடுறது அவனுக்கு கேட்காது.

கவு: ஏன், ரொம்பத் தூரத்தில இருந்து பாடுறாங்களா?

செ: நோ! ரெண்டு பேருக்குமே காது கேட்காது. அதுதான் செண்டிமெண்ட்.

கவு: ஆஹா. ஆஹா. பார்க்காமலே காதல். பேசாமலேயே காதல். கேட்காமலேயே காதல். இதுதானா செண்டிமெண்ட்டு. மவனே! இந்தக் கதை படமாக்கண்ணு வைவி, செம்பு விழா, பித்தளை விழா, தகரவிழா எண்ணு விதம் விதமா கொண்டாடலாமடா.



செ: அண்ணே படத்திற்கு பெயரும் ரெடியா இருக்கண்ணே.

கவு: என்ன பெயருடா?

செ: காதல் மூட்டை.

கவு: சூப்பர் பெயரு. யாரு பிகரு?

செ: மும்பாயில இருந்து இம்போர்ட் பண்ணலாமென்று திங் பண்ணுறேன். புதுமுகமா இருந்தாத்தான் சொல்லிக்கொடுக்கலாமன்னே. புதுசா தெரிஞ்சுக்கணும் எண்ணு அவங்களுக்கும் ஒரு ஆர்வம் பிச்சுச்சிட்டு வரும் பாருங்க.

கவு: யாருடா ஹீரோ?

செ: அண்ணே! கையிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலையலாமாண்ணே? பையிலே காசு இருக்க கையேந்திப் பிச்சை எடுக்கலாமாண்ணே?

கவு: *(வெட்கப்படுகிறார்)* நான் ஹீரோவா நடிக்கணும் எண்ணு சனங்க விரும்புறாங்க. நீயும் விரும்பிக் கேட்கிறே. ஆனா நான் விரும்புற மாதிரியில்லே. ஏனென்னா.....

செ: பொதுக்குழுவை கூடி ஆராயணுமா அண்ணே? நாமென்ன அரசியல் கட்சியா நடத்துறோம்.

கவு: மவனே! பொதுக்குழுவை கூட்டி ஆராயப் போறோம் எண்ணு அரசியல்வாதிகள் சொல்லுறாங்க எண்ணா, பெரிய பொய்யா அவிழ்த்துவிட ஆயத்தம் பண்ணுறாங்க, அவகாசம் தேடுறாங்க எண்ணுதானடா அர்த்தம்.

செ: ஏதோ ஒண்ணு. ஆனா உங்களுக்கு அந்த சிரமமெல்லாம் வேணாம் அண்ணே. ஏனென்னா நான்தான் ஹீரோவா நடிக்கப் போறேன். கவுடா பிரதமராகலாம், ஒரு காமெடியன் ஹீரோவாகக்கூடாதா? எப்படியண்ணே என் ஐடியா?

கவு: கொஞ்சம் இப்படி வாறீங்களா? ரொம்ப நெருக்கமா பாராட்ட வேண்டி இருக்குங்க.

செ: இது முறை! எது? இது முறை! அண்ணே நீங்க வாழ்த்தணும். நான் வளரணும்.

கவு: *(செந்தில் அருகில் வந்ததும் எட்டி உதைக்கிறார்.)* நான் உதைக்கணும், நீ ஓடணும்.

*(செந்தில் உருண்டு கொண்டிருக்கிறார்)* ■



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


## குடும்ப விளக்கு



➡ தமிழ்த் திரை உலகில் இருந்து இந்தித் திரை உலகுக்குச் சென்ற கனவுக் கன்னி ஸ்ரீதேவி. ஒரு காலத்தில் நம்பர் வன்னாக இருந்தவருக்கு இப்போது இறங்கு முகம். புதிய வரவுகள்மீது ரசிகர்களின் பார்வை திரும்பத் தொடங்கிவிட்டது.

ஒதுங்குவதுதான் மரியாதை என்று நினைத்தாரோ என்னவோ போனி கபூரை மணந்து கொண்டார். வயிற்றில் வாரிசு உருவாகிக்கொண்டிருக்கிறது. போனி கபூரின் மாமியார் திருமணம் செல்லாது என்று வழக்குப் போட்டிருக்கிறார். இப்படி எல்லாம் நடக்கும் என்றுதெரிந்துதான் வயிற்றில் வாரிசு உருவான பின்னர் திருமணச் செய்தியை வெளியிட்டார்களாம் ஸ்ரீதேவியும், போனி கபூரும்.

போனி கபூரின் முதல் மனைவி வீட்டில்தான் எதிர்ப்பு. போனி கபூரின் வீட்டில் ஸ்ரீதேவிக்கு ராஜ மரியாதை. போனி கபூரின் சகோதரர்களான அனில் கபூர், சஞ்சய் கபூர் இருவருக்கும் ஸ்ரீதேவி என்றால் கொள்ளைப் பிரியம். எப்படியோ கனவுக் கன்னிக்கு கல்யாணமாகிவிட்டது. (படத்தில் இருப்பது அனில் கபூர் ஸ்ரீதேவி, ஊர்மிளா. தமிழில் 'இரட்டை ரோஜா' என்று வெளியான படத்தை இந்தியில் ஜுடாய் என்ற பெயரில் எடுத்துள்ளனர். அதில் ஒரு காட்சிதான் இது.)




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


## தூண்டிலில் சிக்காது



➡ உலகிலேயே ஆழமான கடற்பகுதி பசிபிக் சமுத்திரத்திலேயே அமைந்துள்ளது. மரியானா அகழி என அழைக்கப்படும் இப்பகுதியின் ஆழம் 10 ஆயிரத்து 924 மீட்டர் (35,839 அடி). ஆழம் காணமுடியாத ஆழம்.

இவ் ஆழமான பகுதி இருண்டதாகக் காணப்படும். சூரிய வெளிச்சம் உட்புகமுடியாத நீர்ப்பகுதி இது.

இங்கும் உயிரினங்கள் உண்டா? என ஆராய்ச்சி நடக்கின்றது. ஜக்குவெஸ் பிக்காட் மற்றும் டொனால்ட் வால்ஸ் என்ற இரு ஆங்கிலேயர்கள் 'ட்றிஸ்ற்றி' எனப்படும் வலுவான உலோகத்தால் செய்யப்பட்ட நீர்மூழ்கிச் சாதனம் ஒன்றின் உதவியுடன் சென்று இவ் ஆழ்கடலில் ஆராய்ச்சி செய்தனர். (இவர்கள்தான் முதன் முதலாக ஆழ்கடலினுள் சென்ற வீரர்கள்)

கடல் மட்டத்திலிருந்து 8 ஆயிரத்து 300 மீட்டர் ஆழத்தில் (27,230 அடி) வாழ்கின்ற 'புறோட்டுலிட்ஸ்' என்னும் ஆழ்கடல்மீன் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் உடல் வன்மையான தசையாலும் தோலாலும் ஆனது. ஆழ்கடலில் அமுக்கத்தைத் தாங்கக்கூடிய உடல் அமைப்புக்கொண்டது. பற்கள் நீண்டு பயங்கரமாகவிருக்கும். நிறம் சிவப்பு. நெருப்புப் போன்ற சிவந்த கண்கள். இருண்ட நீர்ப்பரப்பில் இவற்றால் நன்கு ஊடுருவிப் பார்க்க முடியும். உலகில் மிக ஆழத்தில் வாழும் மீன் இதுதான் என்று உலக சாதனைப் புத்தகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் இதனை 'கிளிக்' செய்தபோது அவரையும் நெருங்கித் தாக்க முற்பட்டதாம். எப்படியோ அவர் தப்பித்துக் கொண்டதால் நமக்கு இந்தப் புகைப்படம் கிடைத்திருக்கிறது.

## கண்ணாடிக் கோபுரம்



⬆ மணலில் கோட்டை கட்ட முடியாது. மதுக் கிண்ணங்களால் (கிளாஸ்) கோபுரம் கட்டலாம். படத்தில் இருப்பதுதான் மதுப்புட்டிக் கோபுரம்.

பஸ்கால் லெக்டேர்க் ஒரு பிரபல ஹோட்டலில் ஊழியராக இருப்பவர். ஹோட்டலின் பெயர்: பில்ற்மோர். அமெரிக்காவில் கலிபோர்னியாவில் இருக்கிறது.

அக் ஹோட்டலில் உள்ள மதுக் கிண்ணங்களை ஒன்றன்மேல் ஒன்றாக மலைபோல அடுக்கித்தான் இச் சாதனையைப் படைத்துள்ளார்.

மொத்தமாக அடுக்கப்பட்ட உயரம் 7.52 மீட்டர் (24 அடி) இதற்காக பாவிக்கப்பட்ட மதுக் கிண்ணங்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 10 ஆயிரத்தி 404.

உலகில் இத்தனை கிளாஸ்களைப் பாவித்து அமைக்கப்பட்ட முதலாவது கண்ணாடிக் கோபுரம் இதுதான். ஜூன் 18, 1984ல் இந்த உலக சாதனை செய்யப்பட்டது.

பயிற்சிதானே வெற்றிக்கு முதற்படி. இந்த கண்ணாடிக் கோபுரம் அமைக்கும் சாதனை ஆசையால் பல நூறு கிளாஸ்களை உடைத்திருக்கிறாராம். முகம் சுழிக்காமல் சாதனை முயற்சிக்கு உற்சாகம் கொடுத்தாராம் ஹோட்டல் அதிபர். □

## திரை பெரிது

⬇ பிரமாண்டமான தொலைக்காட்சித் திரை இது. அமைக்கப்பட்டுள்ள இடம்- ஜப்பான் தலைநகர் டோக்கியோ.

பிரபல 'சோனி' ரி.வி. நிறுவனம் இந்தப் பிரமாண்ட நிஜத் திரையை அமைத்துள்ளார்கள். இதன் பெயர் 'ஜிம்ப்போட்றோன்.' 40 மீட்டர் அகலம், 25மீட்டர் உயரம். (131 அடி அகலம், 81 அடி உயரம்). இந்தப் பிரமாண்டத் தொலைக்காட்சிப் பெட்டியை 1985ல் கண்காட்சி ஒன்றில் காண்பித்து பின்னர் சாலையோரத் திடலில் நிர்மாணித்து விட்டனர்.





விண்வெளியில் உலா வரும் மனிதனைப் பற்றிய விவரணப்படம் காண்பிக்கப் படும்போது கிளிக் செய்யப் பட்ட படம் இது.

பலநூறுபேர் ஒன்றாக நின்று கண்டு களிக்கலாம். காட்சிகள் பிரமாண்டமாகத் தெரியும்.

உலகெங்குமுள்ள நிகழ்ச்சிகளை மாபெரும் திரையில் வண்ணக்கோலமாய் காட்டுகிறார்கள் 'சோனி' நிறுவனத்தினர். உலகிலேயே மிகப்பெரிய திரை உள்ள ஒரே ஒரு தொலைக்காட்சிப் பெட்டி (ரி.வி) இதுதான். □

## ①வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் டெறன் கிளாஸ்ரென்
### 28-01-1997

கொஞ்சும் ரோஜா
சிந்தும் புன்னகை
மனம் மூழ்க்க
சந்தோச வாசம்
வருடிச் செல்லும்!
வாழ்க – வளர்க.

வல்லைப் பண்ணை கிளாஸ்ரென்-மாலிப்பாய் தக்ஷாயினி தம்பதியினரின் செல்வப்புதல்வன் டெறன் தனது முதலாவது பிறந்தநாளை 28.01.97 அன்று 75 SILVER SPRINGS BLVD, 3 18 SCARBORUGH, ONTARIO M1V 1W2 CANADA (416) 321-0151 வெகுசிறப்பாக கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, கொழும்பில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, துளசி அன்ரி கனடாவில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பம்மா, சிவா மாமா, பெரியமாமி, ரவீந்ரர் தொட்டப்பா, கவிச்சித்தப்பா, பெரிய அத்தை, சின்னத்தை, கலி அத்தை, குட்டி அத்தை, கமில்ரன் மச்சான், கஜரன் மச்சான், விஜூரா மச்சான், கொழும்பில் இருக்கும் யோகம் பாட்டி, குலரத்தினம் பாட்டி, மற்றும் அம்மப்பாமார், அம்மம்மாமார், சமணன் மாமா, கிருசாந் மாமா, பிராணவன் மாமா, ஆரணி அன்ரி, தெய்வீகா அன்ரி, தமிழரசி அன்ரி மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் டெறனை இறைவருளால் சகல சௌபாக்கியங்களையும் பெற்று நீடுழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

## அதிரடி மன்னன்

வாரமலர் தினமுரசு





➡ 1996ல் விளாசல் மன்னன் இவர்தான். சஹிட் அஃப்ரிடி.

இலங்கை அணிக்கெதிரான போட்டியில் 37 பந்துகளில் நூறு ரன்களை குவித்து அசத்தினார் அஃப்ரிடி.

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இலங்கை வீரர் சனத் ஜெயசூரியா 48 பந்துக்களில் செஞ்சரி போட்டார்.

கலபமாக முறியடிக்க முடியாத உலக சாதனை என்றே அது கருதப்பட்டது. ஆனால் அதே ஆண்டிலேயே சனத் ஜெயசூரியாவின் சாதனையை இந்த பதினாறுவயது இளம்கன்று முறியடித்துவிட்டது.

துடுப்பாட்டத்தில் மட்டுமல்லாமல் பந்துவீச்சு பந்து தடுப்பு என்று சகலதுறைகளிலும் அஃப்ரிடி சிறந்த ஆட்டக்காரராக இருப்பது அணிக்கும் புதிய பலம்தான்.

இந்த ஆண்டு ஜனவரியில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகத் தொடர் கோப்பைக்கான போட்டிகளில் அஃப்ரிடி தனது நம்பகத்தன்மையைக் காப்பாற்றிக் கொண்டார்.

அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவு, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் பங்கு கொண்ட போட்டிகளில் பாகிஸ்தான் அணிதான் உலகத் தொடர் கோப்பையைக் கைப்பற்றியது. பாகிஸ்தான் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்ற ஆட்டக்காரர்களில் அஃப்ரிடியும் ஒருவர்.

ஜனவரி 18ல் மேற்கிந்திய தீவு அணிக்கு எதிரான முதலாவது இறுதிப் போட்டி நடைபெற்றது.

மேற்கிந்திய தீவு அணியும் வலுவான நிலையில்தான் இருந்தது. பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட அப் போட்டியில் மேற்கிந்திய அணி தோல்வியை தழுவியது. பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு அஃப்ரிடியின் பந்துவீச்சும் முக்கிய காரணம். 33 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார் அஃப்ரிடி. துடுப்பாட்டத்திலும் விட்டுக் கொடுக்கவில்லை. 53 ரன்கள் சேகரித்துக் கொடுத்தார்.

உலகத் தொடர் கோப்பை இறுதிப் போட்டிகளில் 'மேன் ஒஃப் த பிளேயர்' விருதும் சஹிட் அஃப்ரிடிக்குத்தான். பாகிஸ்தான் அணியில் இந்த நம்பிக்கை நட்சத்திரத்தின் எதிர்காலம் பிரகாசமாகத் தெரிகிறது. இனிக்கும் இளமையிருப்பதால் தொடர்ந்து அசத்தலாம்தான்.

உலகத் தொடர் கோப்பையை வென்றது தொடர்பாக கப்டன் வாசிம் அக்ரம் கூறியிருப்பது இதுதான்: "எங்கள் இளம்வீரர்கள் உணர்ச்சிகரமான ஈடுபாடு கொண்டவர்கள். களத்தில் எப்போதும் ஆரவாரித்தபடிதான் அவர்கள் விளையாடுவார்கள். எமது அணிக்கு உற்சாகமான விஷயம் அதுதான்" ○



இப்பத்திரிகை கொழும்பு [illegible] 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 28, வெல்லவ [illegible] உள்ள [illegible] அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்